₹10

fmpb

# அறைகூவல்

Volume 55 Issue 9 September 2025

*"... உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்" சங்கீதம் 84:11*




## உத்தமத்தில் இன்னும் அதிகமாக வளருவோம்





# ஆரம்ப வரிகள்...

## உத்தமம்:
## விசுவாசத்தின் உண்மையான சோதனை

போதகர் ஒருவர் ஞாயிறு ஆராதனையில் உத்தமத்தைக் குறித்து மிக தெளிவாகவும், வல்லமையாகவும் பிரசங்கம் பண்ணினார். அடுத்தநாள் அவர் ஒரு பேருந்தில் பயணிக்க நேரிட்டபோது நடத்துனர் திருப்பிக்கொடுக்க வேண்டிய பணத்திற்கு அதிகமாக அப்போதகரிடம் கொடுத்துவிட்டார். அவரோ ஆண்டவர் அந்த வாரத்திற்கு தேவையான பணத்தை இப்படியாக தனக்கு கொடுத்திருக்கிறார் என்று எண்ணிக்கொண்டிருந்தாலும் அவரின் ஆழ்மனதிற்குள் ஆவியானவரின் சத்தம் தவறு என கூறியது. எனவே அவர் பேருந்தைவிட்டு இறங்கும்முன் நடத்துனரிடம் “அதிகமான பணத்தை கொடுத்துவிட்டீர்கள்” என்று கூறி அவரிடம் பணத்தை திருப்பிக் கொடுத்துவிட்டார். நடத்துனர் புன்னகையோடு “நேற்று உங்கள் சபையில் நீங்கள் உத்தமத்தைப் பற்றி பேசினதைக் கேட்டேன். அதை உங்களிடம் எதிர்பார்த்து சிறிய சோதனை செய்தேன். அதில் நீங்கள் வெற்றிப் பெற்றுவிட்டீர்கள்” என்று கூறினார்.

நமது இயக்கத்தின் ஏழாவது நெறிமுறை உத்தமம் (சங்.84:11). உத்தமம் என்பது நமது வார்த்தையிலும், செயலிலும் எந்த ஒரு ஒளிவுமறைவின்றி உண்மையாய் இருப்பது. நாம் வாழும் இடத்திலும், நமது ஊழியம் மற்றும் வேலை ஸ்தலங்களிலும் நாம் பின்பற்றும் அல்லது பிரசங்கிக்கும் சத்தியத்தின் உண்மைத்தன்மையை பிறர் நம்மிடம் எதிர்பார்க்கின்றனர். பரிசுத்த வேதாகமம் உத்தமம் ஒரு கிறிஸ்தவனின் அடிப்படை சித்தாந்தம் என்பதை வலியுறுத்துகிறது. ... உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம் (1கொரி.4:2). கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்றவிதமாய் குற்றஞ்சாட்டப்படாதவனும்... இழிவான ஆதாயத்தை இச்சியாதவனுமாக இருக்கவேண்டுமென்று தீத்து 1:7 கூறுகிறது.

நாம் பிறருக்கு மட்டுமல்ல, நம் பரலோக எஜமானனான இயேசு கிறிஸ்துவுக்கும் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள். அவர் நமக்கு கொடுத்த நேரம், பணம், பதவி, ஊழியம், குடும்பம், வசதி வாய்ப்புகளைக் குறித்து கணக்கு ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளோம். பணம், பதவி (நீதி. 3:27) மற்றும் புள்ளிவிவரங்கள் (சேகரித்த பணம், ஊழியத்தில் ஆத்துமாக்களின் எண்ணிக்கை அல்லது நடந்த நிகழ்வை மிகைப்படுத்தாமல் அறிக்கைக் கொடுத்தல்) ஆகியவற்றில் எல்லோருடைய சந்தேகங்களுக்கும் மேலாக தேவனுக்குப் பயந்து உத்தமமாய் வாழ அழைக்கப்படுகிறோம். கர்த்தருக்கு முன்பாகமாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் யோக்கிய மானவைகளைச் செய்ய நாடுகிறோம் (2கொரி.8:21, 2தீமோ.2:15).

கொஞ்சத்தில் உண்மையுள்ளராய் இருப்பதினால் வரும் ஆசீர்வாதங்கள்: உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான் (நீதி.10:9), செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும் (நீதி.11:3), உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான் (நீதி.28:18), பரிபூரண ஆசீர்வதத்தை பெறுவான் (நீதி.28:20).

உண்மையில்லாததின் விளைவுகள்: லூக்.16:11, நீதி. 28:18, நீதி.11:3, நீதி.12:22. வேதத்தின் அடிப்படையில் நாம் உத்தமமாய் வாழ்ந்தால் தைரியமாகவும், மதிக்கத்தக்கவராயும், உண்மையுள்ளவராயும், பொறுப்புகளை நம்பி கொடுக்கத்தக்கவராயும், தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றவர்களாயும் காணப்படுவோம். இந்தியாவை கிறிஸ்துவுக்கு நேராய் நடத்த பிரயாசப்படும் நாம் வெளியே காணப்படுகிறவர்களாகவே உள்ளேயும் காணப்படுகிறோமா என்பதை வேதத்தின் வெளிச்சத்தில் நம்மையே ஆராய்ந்து அறிவோமாக!

– **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

"உத்தமமும் நேர்மையும் என்னைக் காக்கக்கடவது; நான் உமக்குக் காத்திருக்கிறேன்."
*சங்கீதம் 25:21*

உத்தமம் என்பது, நமது தனிப்பட்ட வாழ்க்கை திடீரென அம்பலப்படுத்தப்பட்டால், நாம் வெட்கப்படவோ அல்லது சங்கடப்படவோ எந்த காரணமும் இருக்காது. உத்தமம் என்பது நமது வெளிப்புற வாழ்க்கை நமது உள் நம்பிக்கைகளுடன் சீராகபோகிறது என்பதாகும். – *பில்லி கிரஹாம்*

"கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடைய வர்களாயிருங்கள்."
*1 பேதுரு 3:16*

உத்தமம் என்பது நாம் நம்பத்தக்கவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் இருப்பதையும், நமது குணம் பழிச்சொல்லுக்கு அப்பாற்பட்டது என்பதையும் குறிக்கிறது.
– *பில்லி கிரஹாம்*

"இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்." *அப். 24:16*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

**அறைகூவல்**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



*‘கர்த்தரிடத்திற்குத் தன் முழு இருதயத்தோடும், தன் முழு ஆத்துமாவோடும், தன் முழு பலத்தோடும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றபடியெல்லாம் செய்ய மனதைச் சாய்த்தான்; அவனைப் போலொத்த ராஜா அவனுக்குமுன் இருந்ததுமில்லை, அவனுக்குப்பின் எழும்பினதுமில்லை”. (2இரா.23:25)*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

வரலாற்றில் கர்த்தர் ஒரு மனிதனையோ, இயக்கத்தையோ அல்லது ஒரு தலைமுறையையோ வைத்து காரியங்களை நிகழ்த்துவது, ஏதோ இருப்பவைகளைக் கொண்டு நிறைவேற்றி செல்வதற்கு அல்ல. மாறாக தொலைந்துபோன தரிசனங்களை கூர்மையேற்றி, சீர்ப்படுத்தும் சாதனையாளர்களை தேவன் உருவாக்குகிறார். யோசியாவின் சரித்திரம் அதற்கு ஒரு முக்கிய சான்றாகும். அவனுக்குள் ஏற்பட்ட மாற்றம் வெறும் அரசியலில் மட்டுமன்றி ஆவிக்குரிய வாழ்விலும், தேசத்திலும், ஊழிய பகுதிகளிலும் வெளிப்பட்டது. விளைவு கர்த்தருடைய வார்த்தை முழு தேசத்திலும் முதன்மையாயிருந்தது. ஏறெடுக்கப்பட்ட ஆராதனை அர்த்தமுள்ளதாக இருந்தது. தேவப்பணியின் வேகம் வீரியம் கொண்டிருந்தது.

எட்டு வயதில் அரியணை ஏறிய யோசியா தன் பதினாறாம் வயதில் தேவனுக்கு முதலிடம் கொடுத்ததுமன்றி தன் இருபதாம் வயதில் தேசத்தை விக்கிரக ஆராதனையிலிருந்தும், 26ஆம் வயதில் தொலைந்த நியாயப்பிரமாண புத்தகத்தை மீண்டும் கண்டெடுத்து நாடு முழுமைக்கும் ஒரு பெரிய மறுமலர்ச்சிக்கு காரணமானார். தேவாலயத்திலேயே தேவ வார்த்தை தொலைந்து போகுமா? இது இந்நாட்களில் வாழும் ஆவிக்குரியவர்களாகிய நமக்கு ஒரு மிகப் பெரிய எச்சரிக்கை.

நாம் வாழும் இக்காலத்திலும் மிக எளிதாக ஊழியம் நிர்வாகமாக மாறி வருகிறது. ஊழிய கலைகள் (Strategy) நம் ஒப்புக்கொடுத்தலையே ஆட்டம் காண வைக்க முடியும். நம் அழைப்பு நாளடைவில்ஒரு வழக்கமான செயலாக மாறமுடியும். யோசியாவின் அழைப்பும், அர்ப்பணிப்பும் வெறுமனே தேசத்தில் நல்லாட்சி செய்வது மட்டுமல்ல மாறாக கர்த்தரின் இதயத்திற்கு ஏற்றபடி வாழ்ந்து விடுவது என்பதில் தெளிவாக இருந்தது.

### 1. ஒப்புக் கொடுக்கும் மென்மையான இருதயத்திலே மாற்றங்கள் துவங்குகிறது

2 இரா.22:19 – **“இந்த ஸ்தலத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாக அவர்கள் பாழும் சாபமுமாவார்கள் என்ற நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்ட யோசியா தன்**

**வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டார்.”** அவர் கடந்த காலத்தின் நிலைகளை காப்பாற்றவோ அல்லது தற்போதைய நிலையை நியாயப்படுத்தவோ இல்லை. மாறாக தன்னை முழுமையாக தாழ்த்தினார். இன்றைய ஊழியப் பணியிலும் இவ்வித ஒப்புக்கொடுத்த லோடு கூடிய மென்மையான இதயமுள்ள தலைவர்களும், ஊழியர்களுமே தேவை. தேவ வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, நடுங்கி, பாவத்திற்கு மனங்கசந்து, துக்கப்பட்டு, திருச் சபையின் நிலை மற்றும் தொலைந்து போன ஆத்துமாக்களுக்காக கரிசனை கொள்பவர்களிடமே மாற்றங்கள் துவங்குகின்றன. ஒருபோதும் ஊழிய கலைகளில் அல்ல. இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்து புலம்பி ஜெபிக்கும் மனிதனிடமிருந்து தான் மாபெரும் எழுப்புதல் உருவாகியுள்ளது.

நம்மை நாமே ஒரு விசை ஆராய்ந்து பார்ப்போம். ஆரம்ப கால அழைப்பின் அக்கினி இன்னும் நம்மில் தொடர்ந்து எரிகின்றதா? கண்ணீர் இல்லாத கண்கள், தரிசனமில்லாத திட்டக்கூடுகைகள், மகிமை இழந்த நம் முகாம்கள் இவைகள் தான் இன்று நம் நிலையா? யோசியா நமக்கு நினைப்பூட்டுவதெல்லாம் கர்த்தர் நம் கவர்ச்சித் திட்டங்களை அல்ல உடைந்த உள்ளத்தையே தேடுகிறார்.

## 2. தேவ வார்த்தையே எப்பொழுதும் முதன்மையாக இருக்க வேண்டும்

2 இரா.22:8 – “அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா சம்பிரதி யாகிய சாப்பானை நோக்கி: நான் கர்த்தரின் ஆலயத்திலே நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கண்டுபிடித்தேன் என்று சொல்லி, அந்தப் புஸ்தகத்தைச் சாப்பானிடத்தில் கொடுத்தான். அவன் அதை வாசித்தான்.'' கர்த்தருடைய வார்த்தை தேவ ஆலயத்திலேயே புதைக்கப்பட்டிருந்தது. எத்தனை பெரிய முரண்பாடு. கடவுளுடைய பிள்ளைகள் தான் ஆலயத்தில் கூடி ஆராதித்தார்கள். எல்லா ஆராதனை ஒழுங்குகளையும் பராமரித்தார்கள். ஆனால் முக்கியமான தேவ வார்த்தையை தவற விட்டார்கள். இதேபோல் தான் தேவ வார்த்தைகளில் வேர்பற்றாத எந்த ஒரு மிஷனெரி இயக்கமும் இறுதியில் வறண்டுபோகும்.

யோசியாவின் எழுச்சி வெறும் நாடு தழுவிய பிரச்சாரத்துடன் மட்டும் முடிய வில்லை. கண்டுபிடிக்கப்பட்ட வேதாகமத் துடன் துவங்கியது. நாம் மீண்டும் வேதத்தை மையமாக்கிய செய்திகள், ஜெப தியானங்கள், நிபந்தனையற்ற கீழ்ப்படிதலோடு கூடிய சீஷத்துவத்திற்கு திரும்ப வேண்டும். இது வெறும் எழுத்தில் அல்ல, உயிர் நாடியாக வேண்டும்.

## 3. சிலைகள் தகர்க்கப்பட வேண்டும் – சமாளிப்பதற்கோ, கண்டும் காணாமல் விட்டுவிடுவதற்கோ அல்ல

2 நாளா.34:4 – “அவனுக்கு முன்பாக பாகால்களின் பலிபீடங்களை இடித்தார்கள். அவைகளின் மேலிருந்த சிலைகளை வெட்டி, விக்கிரகத் தோப்பு களையும், வார்ப்பு விக்கிரகங்களையும், வெட்டு விக்கிரங்களையும் உடைத்து, நொறுக்கி, அவைகளுக்குப் பலியிட்ட வர்களுடைய பிரேதக்குழிகளின்மேல் தூவி...”

யோசியா சாபத்திற்கு காரணமா யிருந்ததை கண்டும் காணாமல் விட்டு அமைதியாயிருக்கவில்லை. அவற்றை

நிர்மூலமாக்கினார். அந்த சாபத்திற்கு இணங்கவில்லை, அதை அழித்தார். ஒரு பெரும் எழுப்புதல் வருவதற்கு நம் தனிவாழ்விலும், இயக்கத்திலும் பாவத்துடன் சமரசம் செய்யாமல் தீவிரமாய் அதற்கு எதிர்த்து நின்றுவிட வேண்டும். இன்று நம் ஊழியத்திலுள்ள விக்கிரகங்கள் எவைகள்?

- விசுவாசத்தைவிட பெரிதாய் பேசப்படும் ஊழிய சாதனைகளா?
- முழுமையான கீழ்ப்படிதல் என்ற அடித்தளத்தைவிட என்னை, என் ஊழியத்தை முக்கியப்படுத்துவதில் வரும் விக்கிரகங்களா?
- விலைக்கிரயம் செலுத்தப்பட்ட நிலைமை ஓரங்கட்டப்பட்டு வசதிகளும், சுக வாழ்வும் மேலோங்கிய நிலைமையா?

விக்கிரகங்கள் தேவனை அறியாத இடங்களில் மட்டும் இருப்பவை அல்ல. அவைகள் நம் சுயவிளம்பரங்களில் ஊடுருவக்கூடும். யோசியா நம்மை சிறிய திருத்தங்களுக்கல்ல, தீவிர சுத்திகரிப்புக்கு அழைக்கிறார்.

## 4. புதுப்பிக்கும் ஒப்பந்தம் என் பொது வாழ்விலும், தனி வாழ்விலும் வெளிப்பட வேண்டும்

2இரா. 23:3 - அப்பொழுது ராஜா தூண் அருகே நின்று, கர்த்தரைப் பின்பற்றி நடக்கவும், அவருடைய கற்பனைகளையும், அவருடைய சாட்சிகளையும், அவருடைய கட்டளைகளையும் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ளவும், அந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றவும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைப் பண்ணினான். ஜனங்கள் எல்லாரும் உடன்படிக்கைக்கு உட்பட்டார்கள்.

யோசியா தலைவர்கள் முதல் சாதாரண குடிமக்கள் வரை அனைவரையும் ஒன்று திரட்டி மாற்றத்தை கொண்டு வரும் இந்த புதுப்பித்தலுக்கு வழி உண்டாக்கினார். வெறும் சட்ட திட்டங்களை மாற்றுவதை அவர் விரும்பாமல் இருதயத்தில் மாற்றம் நடைபெற அனைத்தையும் செய்தார். ஊழியம் என்னுடைய தனிப்பட்ட கீழ்ப்படிதலில் துவங்கி, பொது வாழ்வில் மாற்றத்தை உறுதிப்படுத்துகிறது.

மிஷனெரி இயக்கங்களாக நாம் மீண்டும் ஒருமுறை மனந்திரும்பிட, கண்ணீர் விட, மறு அர்ப்பணத்திற்குள் வர ஒன்றாகக் கூட வேண்டிய நேரம் இது...

- திட்டங்களுக்காக அல்ல, கூட்டங்களுக்காக அல்ல, அவருடைய தொடுதலுக்காக...
- ஊழியங்களை குறித்து பேசுவதற்கு அல்ல, ஊழியங்களின் நாயகராம் ஆண்டவரை சந்தித்திட...
- நம் ஊழியமும், அழைப்பும் அறியப்படாத எல்லைகளில் நற்செய்தியை கொண்டு செல்வது மட்டுமல்ல, அவரை துக்கப்படுத்தாத இருதயத்தை உடையவராய் நாம் வழந்திட...

தேசத்தின் மறுமலர்ச்சி, தேசத்தின் தலைமைத்துவ பொறுப்பாளர்களிடமிருந்து தான் பாய்ந்தோட முடியும் என்பதை யோசியாவின் செயல் நமக்குக் காட்டுகிறது.

## இந்தத் தலைமுறைக்கு ஓர் அழைப்பு

இந்த மாபெரும் எழுச்சிக்கு காரணமாயிருந்த யோசியா வெறும் 26 வயது வாலிபன் தான். ஊறிப்போன பரம்பரை பாரம்பரியம், ஆழம் செல்லாத தேவ நம்பிக்கை இவைகளுக்கு விலகி, பரிசுத்த நெருப்பாய், பரிசுத்த பயத்தை வெளிப்படுத்தி ஒருதலைமுறையை தேவ வார்த்தைக்கும், சிலுவைக்கும், ஒப்பற்ற மகிமையான ஆத்தும அறுவடைக்கும் அழைத்துச் செல்லும் யோசியாவைப் போன்ற இளைஞர்களையும், பெண்களையும் தேவன் இன்னும் தேடிக்கொண்டிருக்கிறார்.

அறுவடைப் பணியின் பங்காளர்களே! காலம் மிகவும் அவரசமாக அழைக்கிறது. அழைப்பு தெளிவாக உள்ளது. நம்மை நாமே இன்னும் ஒருமுறை ஆராய்ந்து ஆதி தரிசனத்தை கூர்மையாக்க, ஆவிக்குரிய வறண்ட கிணறுகளை திரும்பத் தோண்டிட, நம் அர்ப்பணிப்பை புதுப்பிக்க வேளை வந்துவிட்டது. கர்த்தரின் இரண்டாம் தொடுதல் நடக்கும்போது ஊழியம் கால இழுப்புக்கு ஏற்றால் போல் நடைபெறாமல் கர்த்தரின் சித்தப்படி நடைபெறும்.

யோசியாவின் சீர்த்திருத்தப் புரட்சி நமக்கு நினைப்பூட்டுவதெல்லாம் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் எப்படி ஒரு தேசம் குலுங்கியதோ, அவ்வண்ணமே நம் இயக்கத்திலும் இதனை மீண்டும் தூண்டிட கர்த்தர் நம்மை அழைக்கிறார்.

- கர்த்தருக்கு பயப்படாத ஊழியம் வெறும் செயல்பாடு.
- கர்த்தரின் வார்த்தையில்லா ஊழியம் இலக்கு அற்றது.
- கர்த்தரிடம் ஒப்படைப்பில்லா ஊழியம் ஆகாயத்தில் அடிக்கும் சிலம்பம்.

யோசியாவின் சீர்த்திருத்தத்தை வெளிப்படுத்தும் மாதமாக இந்த செப்படம்பர் மாதம் இருக்கட்டும். நம் வஸ்திரங்களைக் கிழித்து, வேதத்தைத் திறந்து, விக்கிரகத்தை விட்டொழித்து, தேவ சந்நிதானத்தில் நின்று மீண்டும் ஒருமுறை யோசுவாவைப்போல சொல்லுவோம். **நானும் என் வீட்டாரும் இந்த ஊழிய இயக்கமும் கர்த்தரையே சேவிப்போம்** என்று....

## தென் மண்டலம் – ஊக்கத்தையும், நம்பிக்கையையும் உறுதிப்படுத்திய கூடுகை

கோலார் மற்றும் சித்தூர் பிராந்தியங்களில் நடைபெற்ற ஊழியர்களின் கூடுகையில் ஊக்கத்தையும், புதிய உற்சாகத்தையும் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஒருமித்த சிந்தையுடன் கூடியிருந்த ஊழியர்களின் போராட்டங்களையும், வெற்றிகளையும் கேட்கும் பொழுது விக்கிரக ஆராதனைக்கு மத்தியில் யோசியாவின் முயற்சியைப் போல கடினமான இப்பகுதிகளில் அவர்களின் விடா முயற்சியும், இடைவிடாது முன்னேறும் அவர்களது அர்ப்பணிப்பும் எவ்விதம் ஒரு சிறு குழுக்களில் இருந்து துவங்குகிறது என்பதை காணமுடிந்தது.

ஜூலை 27ஆம் தேதி ராணிப்பேட்டை, இம்மானுவேல் BHEL ஆலயத்தில் நடைபெற்ற 18 மிஷனெரிகளின் அர்ப்பணிப்பு ஆராதனை அற்புதமான ஒன்று. அருள்திரு. பென்னி மைக்கேல் மற்றும் அநேக போதகர்கள் இணைந்து நடத்திய இந்த அர்ப்பணிப்பு

ஆராதனையில், மிஷனெரி சிந்தையில் நிறைந்த மக்களின் கண்ணீரின் ஜெபங்கள் யோசியாவின் நாட்களில் மறுமலர்ச்சியைப் போலவே ஒரு மறு ஒப்படைப்பு நிகழ்வாயிருந்தது.

## SPARK 2025: Igniting the Flame Among Professionals

சென்னை ISCA யில் நடைபெற்ற இக்கூடுகை தங்களின் பணிகளின் மூலம் எவ்விதம் தேவனுடைய இறுதிக் கட்டளையை நிறைவேற்றுவது என திட்டமிட்டது, தேவ ஆலயத்தையும், அரண்மனையயும் சீர்த்திருத்திய யோசியாவைப்போல் இவர்களும் தங்களின் உலகப் பிரகாரமான பணி மூலம் தேவ நாமத்திற்கு சாட்சியாக செயல்பட தீர்மானித்ததை உணர உதவியது.

## வடக்கு மண்டலம் – சந்தால் ஊழிய தரிசனம்

வடக்கு மண்டலத்திற்கான பணித்தள பயணம் தேவனுடைய தனித்துவமான பிரசன்னத்தால் நிறைந்திருந்ததை உணர்ந்தோம். சிநேகாலயா சுகாதார மையத்தில் கட்டப்பட்டிருந்த பணியாளர் குடியிருப்பானது தேவனின் ஒரு அற்புத ஈவு. இரவும் பகலும் இடைவிடாது சேவை செய்து கிறிஸ்துவின் சுகத்தையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தும் இவ்வூழியர்களுக்கான ஒப்பற்ற இடமாகக் கண்டேன்.

இம்மருத்துவமனை, தேவைகள் நிறைந்த மனிதர்களின் சரீர தேவைகளை சந்தித்து வருகிறது. மருத்துவ ஊழியர்களின் பற்றாக்குறையின் மத்தியிலும் ஊழியம் செய்துவரும் ஊழியர்களை கருணையின் கலங்கரை விளக்காக காணமுடிந்தது. மிஷனெரி ஊழியம் என்பது தொலைந்துபோன மனிதர்களை கிறிஸ்துவிடம் கொண்டு வருவது மட்டுமல்ல, அடிப்படை வசதிகளையும் விட்டு இம்மக்களை கரிசனையாய் விசாரித்து சேவை செய்வதிலும் அடங்கும்.

ஏசா. 52:7இல் நற்செய்தி சுமந்து வரும் பாதங்கள் எவ்வளவு அழகானவைகளோ, அதேபோல் குணப்படுத்தலை கொண்டு வரும் இந்த கைகளும் கூட அழகானவைகளே!

ஊழியர்களின் ஜெபம் மற்றும் ஊழியப் பகிர்வு நேரங்கள் மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது. ஒருகோடி சந்தால் மக்களை சுவிசேஷத்தால் சந்திக்கும் அவர்களின் திட்டம் என்னை மிகவும் நெகிழ்ச்சிக்குள்ளாக்கியது. அவர்களின் இடைவிடாத ஊழியம், அர்ப்பணிப்பு யூதேயா தேசத்தின் ஒவ்வொரு எல்கைகளையும் தொட்ட யோசியாவின் சீர்த்திருத்தங்களை நினைவுப்படுத்தியது. கர்த்தருடைய பணி ஆழமாக, அகலமாக மட்டுமல்ல, இதயங்களையும் மாற்றவேண்டும். மறக்கப்பட்ட மூலை முடுக்குகளையும் தொடவேண்டும் என்பது என் நினைவூட்டுதலாக அமைந்தது.

## கிழக்கு மண்டலம் – எதிர்காலத்திற்கான ஊழிய கட்டுமான விரிவாக்கம்

மால்தோ சிறுவர்களுக்கான ஆரம்ப கல்வி நிலையத்தை Buddi என்ற இடத்தில் வெற்றிகரமாக திறந்திட கர்த்தர் கிருபை செய்தார். புனித தாமஸ் பள்ளியின் அறக்கட்டளை பதிவுக்கான அதிகாரப் பூர்வமான சமர்ப்பணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ய கர்த்தர் கிருபை செய்தார். இது வருகின்ற

தலைமுறைக்கான நீண்டகால ஊழிய உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான தீர்க்கதரிசன செயல்களாக அமைந்தது. இப்பிராந்திய ஊழியர்களுடன் செலவிட்ட நேரங்கள் அவர்களின் தைரியத்தையும், புதிய ஊழிய அணுகுமுறை திட்டத்தையும் அறிந்துகொள்ள உதவியது.

## தேசிய உபவாச ஜெபம் – உபவாசம், கண்ணீர், திறப்பில் நிற்பது

ஆகஸ்டு மாதத்தில் நாடு முழுவதும் தேசத்திற்காக, ஊழியத்திற்காக பல் வேறு இடங்களில் தேசிய உபவாச ஜெபம் நடைபெற்றது. தமிழ்நாடு, பாண்டி முன்னேற்றப்பணி ஊழியர்கள் மற்றும் தலைவர்கள் திருப்பத்தூரில் கூடி ஜெபித்தது புதிய புத்துணர்ச்சியைத் தந்தது. தலைவர்களின் ஆத்தும தாகமும், நம்பிக்கையும் அதிக உற்சாகத்தைத் தந்தது. ஒவ்வொரு ஆண்டும் இதனைத் தொடர்ந்து நடத்திட வேண்டும் என எழுந்த உற்சாகம் யோசியாவின் நாளில் நடந்ததுபோலவே தேவ வார்த்தையைப் படித்து, உபவாசித்து, ஜெபித்து, கண்ணீருடன் மறு அர்ப்பணிப்புக்கு வழிவகுத்ததை உணர்த்தியது.

## ஆந்திரப் பிரதேசம் – தென் பிராந்திய ஊழியர்கள் கூடுகை

ஆகஸ்டு 15,16 தேதிகளில் CSI வேலூர் பேராயத்திற்குட்பட்ட Beattie நினைவு ஆலயத்தில் நடைபெற்ற தென் பிராந்திய ஊழியர் கூடுகை மற்றொரு தெய்வீக செயல்களை உணரும் நாட்களாக இருந்தது. அருள்திரு. சாமுவேல் ஆர்தர், ஆறு ஊழியர்களை அர்ப்பணித்து நடத்திய அர்ப்பண ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. இக்கூடுகை நம்மை மீண்டும் அனல்மூட்டி, அறியப்படாத மக்களுக்காக ஜெபிக்க உணர்த்தியது. யோசியாவைப்போல முழு தேசமும் தேவனின் விருப்பத்திற்கு நேராக திரும்பும் என்பதை உறுதிப் படுத்தியது. இந்த அனைத்து நிகழ்வுகளிலும் ஒரே மையக் கருத்து தனித்திருந்தது. கர்த்தர் நம்மை மீண்டும் புதுப்பித்தலுக்கு அழைக்கிறார். அவருக்கு ஊழியம் செய்வது மட்டுமல்ல, அவருடைய வல்லமையான வார்த்தையாலும், ஆவியாலும் நிரம்பி புதிய அர்ப்பணிப்புடன் வாழ்ந்திடவும் அழைக்கிறார்.

யோசியா கட்டிடங்களை சீரமைக்க வில்லை. மாறாக இருதயங்களை தேவனுக்கு நேராக மீட்டெடுத்தார். இதுவே இன்றைய அவசரத் தேவை. இந்த செப்டம்பர் மாதம் மற்றொரு மாதமாக கடந்து செல்ல கூடாது.

- தகர்க்கப்படவேண்டிய விக்கிரகங்கள் நம் வாழ்வில் தகர்க்கப்படட்டும்.
- கண்கள் புதுப் பார்வையோடு தேவ வார்த்தைகளைக் காணட்டும்.
- எடுத்த உறுதி மொழிகள் புதுப்பிக்கப் படட்டும்.
- தேவப் பணி இன்னும் ஜோதியாய் பிரகாசிக்கட்டும்.

*“கர்த்தாவே... பூர்வகாலத்திலிருந்தது போல எங்கள் நாட்களைப் புதியவை களாக்கும்” என்பது நம் ஜெபமாகட்டும்” (புலம்பல் 5:21).*

கிறிஸ்துவின் தூய பணியில்,



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**



# தேசத்தை சுதந்தரிப்பதில் காலேபின் ஒருமைப்பாடு

*“என் ஊழியக்காரனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், (உத்தம இருதயத்தோடு) அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்” (எண்.14:24).*

எகிப்திலிருந்து மோசேயால் வழி நடத்தப்பட்ட சுமார் 20 இலட்சம் மக்களின் வாழ்க்கையில் காணப்படாத ஒரு வித்தியாசமான ஆவி தம் ஊழியக்காரனாகிய காலேபுக்கு இருந்தது என்று கர்த்தர் சாட்சியளித்துள்ளார். காலேபின் உத்தமம் வேதாகமத்தில் பின்வரும் வசனங்களில் காணப்படுகிறது.

எண்ணாகமம் 14:24 | யோசுவா 14:8-15

நியாயாதிபதிகள் 1:14-15 | 1 நாளாகமம் 4:15

### தேசத்தை சுதந்தரித்த காலேபின் நேர்மை:

## 1 மந்தை குணம் இல்லாதவன் (எண்.13:26:33)

Not following the majority:

பெரும்பான்மையினரின் கருத்துக்களால் காலேப் ஈர்க்கப்படவில்லை. ஒரு விசுவாசி ஆவிக்குரிய வாழ்வில் நடக்கும்போது, மூன்று விஷயங்களைத் தவிர்க்க விழிப்புடனும், கவனமாகவும் இருக்கவேண்டும் என்று அருள்திரு. டாக்டர் சாம் கமலேசன் கூறினார். (1) நான் (ஈகோ)-சுயம், (2) சரீர இச்சை (3) உண்மையைவிட்டு பெரும்பான்மையினரைப் பின்பற்றுவது. வேவுபார்க்க சென்றவர்களது பயம் மற்றும் எதிர்மறையான கருத்துக்கள் காரணமாக சுமார் 20 இலட்சம் மக்கள் ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை சொந்தமாக்கிக் கொள்ள முடியாமல் போனபோதிலும் பெரும்பான்மையினரால் காலேப் ஈர்க்கப்படவில்லை. தேவன் பெரிய கூட்டத்தை எதிர்பார்ப்பதில்லை. ஆனால் அவரை உத்தமமாய் பின்பற்றி அவரது வாக்குத்தத்தத்தை நம்பி தேசத்தை சுதந்தரிக்கும் ஒருவனையே எதிர்ப் பார்க்கிறார்.

## 2 முறுமுறுக்காதவன் (எண். 14:2, யாத். 15,16,17)

Not murmuring:

ஜனங்கள் தேவனுக்கும், மோசேக்கும் விரோதமாக 10 முறை முறுமுறுத்தார்கள்.

யோசுவா மற்றும் காலேப் வேவுபார்க்க சென்ற தேசத்தைப் பற்றிய அறிக்கைக்கு எதிராகவும், கர்த்தர் வானத்திலிருந்து அளித்த காலை உணவான மன்னாவைக் குறித்தும் மக்கள் முறுமுறுத்தனர். வனாந்தரத்தில் சாகும்படி எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டு வந்தீர்கள்? உணவும் இல்லை, தண்ணீரும் இல்லை. இந்த அற்பமான அப்பத்தை எங்கள் ஆத்துமா வெறுக்கிறது (எண்.21:5). பரலோக மன்னா அவர்கள் பார்வைக்கு அற்பமாய் காணப்பட்டதால் முறுமுறுத்தார்கள். இந்த முறுமுறுக்கும் மனப்பான்மையால் பலர் வனாந்தரத்தில் மடிந்துபோனார்கள். அவர்களின் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள் (1கொரி.10:10). ஆனால் காலேப் முறுமுறுக்காமல் விசுவாசத்தோடும், உத்தம இருதயத்தோடும் தேவனைப் பின்பற்றினார்.

## 3 விசுவாச ஆவியுடையவன் (எண்.14:24) - Spirit of faith:

காலேப் வேறுபட்ட ஆவியான விசுவாசத்தின் ஆவியைக் கொண்டிருந்தார் என்று கர்த்தர் அவரைக் குறித்து சாட்சி கொடுத்தார். “நான் விசுவாசித்தேன், அதனால் பேசுகிறேன்” (2கொரி.4:13). என்று பவுல் கூறுவதுபோல் நாமும் விசுவாசத்தின் ஆவியைப் பெற்றிருக்கவேண்டும். பரிசுத்த பவுலும் காலேபைப் போன்று விசுவாசத்தின் ஆவியை உடையவராயிருந்தார். தேசத்தை சுதந்தரிக்கும்படி தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை விசுவாசியாத சுமார் 20 இலட்சம் மக்கள் தேசத்தை சுதந்தரிக்கவில்லை. தேவனுடைய வாக்குத்தத்தத்தை உத்தமமாய் விசுவாசித்தவர்கள் மட்டுமே தேசத்தை சுதந்தரித்துக் கொண்டார்கள்.

நமக்கு தேவன் வாக்குத்தத்தத்தை அருளியுள்ளார். “நீ கூப்பிடும்போது, உன் கணங்கள் உன்னைத் தப்புவிக்கட்டும்; காற்று அவைகளையெல்லாம் பறக்கடித்து, மாயை அவைகளைக் கொண்டு போம்; என்னை நம்பியிருக்கிறவனோ தேசத்தைச் சுதந்தரித்து, என் பரிசுத்த பர்வதத்திலே காணியாட்சிக்காரனாயிருப்பான்” (ஏசா.57:13). தேசம் விக்கிரகங்களினால் நிறைந்திருக்கும் சூழ்நிலையில் அவைகள் இல்லாமல் அற்றுப்போகப் பண்ணுவேன் என்றும், தேசத்தைச் சுதந்தரிப்பீர்கள் என்றும் தேவன் தந்த வாக்குத்தத்தத்தை விசுவாசிக்க வேண்டும்.

## 4 முழு மனதோடு பின்பற்றினவன் (எண்.14:24) Followed wholeheartedly:

காலேப் முழுமனதுடன் கர்த்தரைப் பின்பற்றினார். காலேப் யோசுவாவை விட மூத்தவர். எனினும் தலைமைத்துவம் இளையவரான யோசுவாவுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் காலேப் பதவிக்காகவோ, பதவி உயர்விற்காகவோ, லாபத்திற்காகவோ, உலக அங்கீகாரத்திற்காகவோ கவலைப்படவில்லை. காலேப் உலக ஆசீர்வாதத்தை எதிர்ப்பார்க்காமல் தேவனுடைய வாக்குத்தத்தத்தை உத்தம இருதயத்தோடே நம்பி கர்த்தரைப் பின்பற்றினார். பெயர், புகழ், பிரஸ்தாபம் ஆகியவை வெறும் மாயை. நமது நற்குணமே நிரந்தரம். உலக அங்கீகாரத்தைத் தேடாமல் தேவனுடைய அங்கீகாரத்தை காலேப் நாடினார்.

தேவனுடைய ராஜ்யத்தில் அதிகாரம், பதவி மற்றும் பெயர் புகழ் ஆகியவை ஒரு பொருட்டல்ல என்று டாக்டர் சாம் கமலேசன் கூறியுள்ளார். காலேப் பரலோக ராஜ்யத்தின் மதிப்பீடான உத்தம இருதயத்தைக் கொண்டிருந்தபடியால் தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டார்.

## 5 முதிர் வயதிலும் யுத்தம் செய்தவர் (யோசுவா 14:10-11)

Waged to war even at the old age:

''இப்போதும், இதோ, கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார்; இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சஞ்சரிக்கையில், கர்த்தர் அந்த வார்த்தையை மோசேயோடே சொல்லி இப்போது நாற்பத்தைந்து வருஷமாயிற்று; இதோ இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன்; மோசே என்னை அனுப்புகிற நாளில், எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள்வரைக்கும் எனக்கு இருக்கிறது. யுத்தத்திற்கு போக்கும்வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கிருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது" எண்பத்தைந்து வயதிலும் யுத்தம் செய்யவும், மலைகளில் ஏறவும் அவர் பெலனைப் பெற்றிருந்தார். அவர் யோசுவாவிடம் அந்த மலைநாட்டை எனக்குத் தாரும், கர்த்தர் என்னோடு இருப்பாரானால் அங்கே வாழும் ஏனாக்கியரை துரத்திவிடுவேன் என்றார் (எண். 14:12). நமது இயக்கத்தின் முன்னாள் பொதுச் செயலர் திரு. பேட்ரிக் ஜோஷ்வா அவர்கள் **வயதாகுவதைத் தவிர்க்க முடியாது, ஆனால் வளர்வது என்பது நமது விருப்பம்** என்று கூறினார். கர்த்தருக்கு காத்திருப்போரும், அவரது வாக்குத்தத்தத்தை உத்தம இருதயத்தோடு விசுவாசிப்போரும் புது பெலன் பெற்று காலேபைப் போல் தேசத்தைச் சுதந்தரிப்பார்கள்.

## 6 உத்தமமாய் வாழ்ந்தவன் (யோசுவா 14:8)

Walked a heart of integrity:

காலேப், உத்தம இருதயத்துடன், முழு மனதுடன் கர்த்தரைப் பின்பற்றினார். அவரது உத்தம இருதயத்தைக் குறித்து நான்கு சாட்சிகள்.

- **மனசாட்சி** (Witness of conscience): ''என்னோடு கூட வந்த என் சகோதரர் ஜனத்தின் இருதயத்தைக் கரையப்பண்ணினார்கள்; நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினேன்'' (யோசுவா 14:8).
- **தலைவனின் சாட்சி** (Witness of the leader - Moses): "அந்நாளிலே மோசே: நீ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினால், நீ கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் என்றைக்கும் சுதந்தரமாயிருக்கக்கடவது என்று சொல்லி ஆணையிட்டார்'' (யோசுவா 14:9).
- **உடன் ஊழியனின் சாட்சி** (Witness of Co-worker - Joshua): "அப்பொழுது யோசுவா: எப்புன்னேயின் குமாரனாகிய காலேபை ஆசீர்வதித்து, எபிரோனை அவனுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தான். ஆதலால் கேனாசியனாகிய எப்புன்னேயின் குமாரனாகிய காலேப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினால், இந்நாள்

மட்டும் இருக்கிறபடி, எபிரோன் அவனுக்குச் சுதந்தரமாயிற்று'' (யோசுவா 14:13,14).

- **தேவனின் சாட்சி** (Witness of the Lord): "என் ஊழியக்காரனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்'' (எண். 14:24).

நாமும் தேசத்தைச் சுதந்தரிக்க விசுவாசத்தோடும் முழு மனதோடு கூடிய உத்தம இருதயத்தோடும் தேவனைப் பின்பற்ற வேண்டும் என்று கர்த்தர் எதிர்ப்பார்க்கிறார். தேவன் பெரிய, புகழ் பெற்ற ஊழியர்களை அல்ல, உண்மையுள்ள ஊழியர்களைத் தேடுகிறார் (மத்.25:21).

## 7 தேசத்தை சுதந்தரித்தவன் (எண்.14:24) - Inheriting the land:

காலேப் தேவனுடைய வாக்குத் தத்தங்களை உண்மையாகவும், முழு இருதயத்துடனும் நம்பி கர்த்தரைப் பின்பற்றியதால், கர்த்தர் அவனையும், அவன் சந்ததியாரையும் ஆசீர்வதித்து தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளும்படி செய்தார்.

ஆகையால் காலேபைப்போல உத்தம இருதயத்தோடு தேவனைப் பின்பற்றி வாழ நம்மை அர்ப்பணிக்கும்போது, நம் காலத்தில், நம் தேசத்தை கர்த்தரின் மகிமைக்காக சுதந்தரிக்க முடியும்.

**அருள்திரு. எம். ராஜ்** (ஓய்வு மிஷனெரி)

# மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. D. குணசீலன் அண்ணன் அவர்கள் பல வருடங்களாக தஞ்சாவூரிலுள்ள அருளானந்த நகர் பகுதியில் ஜெபக்குழுத் தலைவராக செயல்பட்டு அநேகரை ஜெபக்குழுவில் இணைத்து சிறப்பாக செயல்பட்டவர். வயது முதிர்வின் காரணத்தால் சரீரத்தில் பெலவீனம் ஏற்பட்டு, கடந்த 26.06.2025 அன்று தனது 88வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரை இழந்து வாடும் அவருடைய மகன்கள், மருமக்கள், பேரக் குழந்தைகளுக்கு தேவன் தாமே ஆறுதலையும், சமாதானத்தையும் கட்டளையிடுவாராக!

**அருள்திரு. பால்ராஜ் ஆபிரகாம்,**
விரிவுப்பணி செயலர் - தஞ்சாவூர்

# கோலார் பகுதி மக்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றம்

## கோலார் பணித் தளங்களுக்கு இயக்கத் தலைவரின் வருகை






கோலார் என்பது தங்கச் சுரங்கத்திற்கு பெயர் பெற்ற இடம். ஆனால் இன்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களின் மூலம் கோலார் பகுதி, மக்களின் வாழ்க்கை மாற்றத்திற்கு பெயர் பெற்றதாக மாறியிருக்கிறது. 1996ஆம் ஆண்டு துவங்கப்பட்ட கோலார் பணித்தள ஊழியத்தின் விளைவாக மக்கள் மத்தியிலும், சமூகத்திலும் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. 30 ஆண்டுகளில் 7 பணித்தளங்கள், 10 ஆலயங்கள், 27 ஆராதனைக் குழுக்கள் மற்றும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆத்துமாக்கள் பெற்று மக்கள் மத்தியில் ஒரு முன்னேற்றம் காணப்படுகிறது.

31 ஜூலை 2025 கோலார் பணித்தளத்தில் உள்ள வேமகல் ஆலயத்திற்கு சென்றது மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. தேவனை நன்றியுள்ள இருதயத்தோடு ஆராதிக்க அவ்வாலயம் முழுவதும் மக்கள் நிரம்பி இருந்தனர். சாதாரண மக்கள் தேவனின் விசேஷித்த மக்களாக மாறியிருந்தனர். படிப்பதற்கு வசதி இல்லாதிருந்த மக்கள் இன்று கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் படிக்கின்றனர். சமுதாயத்தில் எந்த ஒரு மதிப்பும் இல்லாத இந்த மக்கள் இன்று வழக்கறிஞர்களாக, பல் மருத்துவர்களாக, பட்டம் பெற்றவர்களாக சமுதாயத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அன்று தேவ ஆசீர்வாதத்தை எதிர்ப்பார்த்து காத்திருந்த திரளான வாலிபர்கள், முதியவர்கள் இன்று தேவனை ஆராதிக்கவும், ஐக்கியம் கொள்ளவும் மற்றும் ஜெபிக்கவும் அந்த ஆலயத்தில் கூடியிருந்தனர். தடைகளை தகர்க்கும் கர்த்தரைக் குறித்து நான் அம்மக்களிடம் பேசும்போது ஆவியானவரின் அருள் மாரியை உணர்ந்தேன்.

அவர்கள் மத்தியில் அன்று ஆராதனையை நடத்திய திரு. ஜேம்ஸ்

என்ற அட்வகேட் போன்ற அநேக தலைவர்களை தேவன் எழுப்பிக் கொடுத்ததற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். அந்த ஆலயத்தின் நிர்வாகத்தை இத்தலைவர்கள் மிகச் சிறப்பாக செய்து வருகின்றனர். மண்டல செயலரான அருட்திரு. திம்மேஷ் மற்றும் பிராந்திய செயலரான அருட்திரு. சுனில் தத்தாகாரா மற்றும் சுதேச ஊழியர்கள் குடும்பங்களாக அன்று ஆராதனையில் கலந்து கொண்டனர். இவ்வூழியத்தை அயராது செய்து கொண்டிருக்கும் அவர்கள் முகங்களில் மகிழ்ச்சியையும், நம்பிக்கையும் காணமுடிந்தது. முன்னணியில் அயராது ஊழியம் செய்யும் ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தி, அவர்களைப் பாராட்டினேன்.

கோலார் என்பது பண்டைய முரசு நாட்டின் ஒரு பகுதியாகும். அங்கு கன்னடம், தெலுங்கு மற்றும் தமிழ் மொழிகளின் கலவையான கலாச்சாரங்களை காணலாம். திரளான கன்னடம் பேசும் விசுவாசிகள் நமக்கு இருந்தாலும் அவர்கள் மொழியில் நமது பத்திரிக்கையான அறைக்கூவல் வெளிவருவதில்லை. கன்னடம் பேசும் இவர்களும் பயன்பெற வெகு சீக்கிரத்தில் கன்னடம் பத்திரிக்கை வெளிவர நடவடிக்கை எடுப்போம்.

தற்போது கோலார் பணித்தளங்களில் நமக்கு ஐந்து சுதேச ஊழியர்கள் உள்ளனர். இப்பிராந்தியம் விரிவடைய இன்னும் ஐந்து சுதேச ஊழியர்களை இவ்வூழியத்தில் இணைக்க உறுதியளித் துள்ளனர். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இவர்கள் பகுதியில் 10 ஆலயங்களை உருவாக்கிட ஜெபத்தோடு ஊழியம் செய்கின்றனர். இவ்வாறாக உள்ளூர் மக்கள் இவ்வூழியத்தை சொந்தம் கொண்டாடி விரிவாக்குவதே நமது நோக்கமாகும். சிறுவர் பராமரிப்பு மையம் ஒன்றை துவங்க ஒப்புதல் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்குள்ள உள்ளூர் ஆராதனைக் குழுக்கள் இன்னும் அதிகமான சிறுவர் பராமரிப்பு மையங்களை கோலார் பிராந்தியத்திற்கு ஒதுக்கிட கேட்டுக் கொண்டனர். ஊழியத்தின் விரிவாக்கத் திற்கு உறுதுணையாக இருக்க இந்த தேவையை ஆராய்ந்து ஒரு அறிக்கையை மண்டல மற்றும் பிராந்திய செயலர்கள் கமிட்டிக்கு கொடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். மகுாலூர் ஆலயத்தில் ஏற்பட்டுள்ள சில விரிசல்கள் சரிசெய்யப்பட்டு மறுசீரமைக்க சொத்து பாராமரிப்புத் துறையை கேட்டுக்கொள்கிறேன்.

இங்குள்ள விசுவாசிகளின் வாழ்வா தாரத்தை மேம்படுத்த புதிய முயற்சியாக தையல் மிஷன்களை வாங்கிக்கொடுத்து நமது சுதேச ஊழியர் மூலம் கற்றும் கொடுக்கின்றனர். ஒன்பது தையல் மிஷன்கள் இன்னும் தேவைப்படுகிறது. அதில் ஒரு மிஷன் விலை ரூ.50,000/– ஆகும். ஒவ்வொரு ஆலயங்களிலும் இவ்வாறாக எடுக்கும் முயற்சியில் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

30 வருடத்திற்குள் கோலார் பிராந்தி யத்தில் தேவன் கொடுத்த கனிகளை நம்மால் காணமுடிகிறது. இது தேவனின் செயல் மற்றும் அற்புதமே ஆகும். இந்த ஊழியமானது கர்நாடகா முழுவதும் பரவி அநேக மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைந்திட நாம் கரம் கோர்த்திடுவோம்.

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர்

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவாக

# மனதார வாழ்த்துகிறோம்



1947ஆம் ஆண்டு இந்தியாவின் ஐந்து மாநிலங்களில் வெளிநாட்டு மிஷனெரிகளால் ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கிலிக்கன், மெத்தடிஸ்ட், காங்கிரஸ்னலிஸ்ட், லூத்தரன் மற்றும் பிரஸ்பிட்டேரியன் சபைகளை ஒன்றாக இணைத்து உருவாக்கப்பட்ட தென்னிந்திய திருச்சபைகளுக்காக தேவனைத் துதிக்கிறோம். இந்த அனைத்து ப்ரோட்டஸ்டன்ட் சபைகளை ஒன்று சேர்க்க Ecumenical Movement எடுத்த முயற்சிக்கு கிடைத்த வெற்றியின் சாட்சியாக சி.எஸ்.ஐ. அமைந்துள்ளது.


சி.எஸ்.ஐ. திருமண்டலங்களுக்கு ஆவிக்குரிய தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட நமது **புதிய மாடரேட்டர் பேராயர் அருட்திரு. முனைவர் டாக்டர் கே. ரூபன் மார்க்** மற்றும் புதிதாக அபிஷேகம் பண்ணப்பட்ட பேராயர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த புதிய தலைவர்கள் உத்தமத்தோடும், மனதுருக்கத்தோடும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பினை சிறப்பாக செய்து முடிக்க தேவ ஞானம், பெலன் மற்றும் பகுத்தறிவினை தந்தருள தேவனிடம் வேண்டிக்கொள்வோம். இவர்களின் தலைமைத்துவம் திருச்சபைகளை வேற்றுமையில் ஒற்றுமையுடனும், விசுவாசத்திலும், அர்ப்பணிப்பிலும் இன்னும் ஆழமாயும் வளரச்செய்ய தேவன் அவர்களை ஆசீர்வதித்து பயன்படுத்துவாராக!



**பேராயர் அருட்திரு. முனைவர். டாக்டர். கே. ரூபன் மார்க்** அவர்கள் சி.எஸ்.ஐ. கரீம் நகர் திருமண்டலத்தின் பேராயர் ஆவார். 2020ஆம் ஆண்டு இவர் டெபுட்டி மாடரேட்டர் ஆனார். 2025 ஜுலை 21 முதல் சி.எஸ்.ஐ.யின் மாடரேட்டராக பொறுப்பேற்றுள்ளார். இவர் இந்தியா மற்றும் டென்மார்க்கில் பிரசங்க கலையில் சிறப்புப் படிப்பை முடித்துவிட்டு எக்குமெனிக்கல் ப்ரோட்டஸ்டன்ட் ஆந்திரா கிறிஸ்டியன் தியாலஜிக்கல் கல்லூரியில் பிரசங்க கலையை கற்றுத் தரும் முனைவராக, கரீம்நகர் பேராயராக 2015இல் பொறுப்பேற்கும் வரை பணி செய்தார்.



**பேராயர் அருட்திரு. பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன்** அவர்களை தேவன் தெரிந்து கொண்டு, 2025 ஆகஸ்டு 3 அன்று சென்னை **திருமண்டலத்தின் 14வது பேராயராக** அபிஷேகித்தார். இவர் கிறிஸ்தவ ஒன்றிணைக்கப்பட்ட ஆலயம் (அண்ணாமலை நகர்), கிறிஸ்து ஆலயம் (வாலாஜா), புனித மத்தேயு ஆலயம் (கிழக்கு தாம்பரம்), புனித பவுல் ஆலயம் (சூளை), புனித மார்க் ஆலயம் (சேலையூர்), உயிர்த்தெழுந்த மீட்பர் ஆலயம் (கோடம்பாக்கம்), புனித சிலுவை ஆலயம் (ஆவடி) புனித பேதுரு ஆலயம் (காட்டு மன்னார் கோயில், கடலூர் மாவட்டம்) மற்றும் வெற்றி சிலுவை ஆலயம் (அசோக் நகர்) ஆகிய பகுதிகளில் இறைபணியை நிறைவேற்றினார். மேலும் இவர் நியூ ஜெருசலேம் கார்டன் ரித்திக் சென்டரின் ஒருங்கிணைப்பாளராகவும், சினோடின் வாலிபர் துறையின் இயக்குனராகவும் மற்றும் பேராயரின் சாப்ளினாகவும் தேவப் பணியை நிறைவேற்றினார். இன்னும் திருமண்டலத்தின் பல நிர்வாக பொறுப்புகளிலும், பிராந்திய சினாடு கவுன்சிலிலும் பொறுப்பு வகித்திருந்தார்.



**பேராயர் அருட்திரு. டாக்டர். வின்சென்ட் வினோத் குமார்** அவர்கள் 2025 ஆகஸ்டு 4 அன்று **சி.எஸ்.ஐ. கர்நாடகா மத்திய திருமண்டலத்தின் 5வது பேராயராக** தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் ஹட்சன் மெமோரியல் ஆலயம், சஃபர் மெமோரியல் ஆலயம், சி.எஸ்.ஐ. டோம்லின்சன் ஆலயம், ஸ்டீன் மெமோரியல் ஆலயம், சாடே மெமோரியல் ஆலயம், வில்லியம் ஆர்தர் மெமோரியல் ஆலயம், சி.எஸ்.ஐ. ஆலயம் (குனிகல்), வெஸ்லி ஆலயம் (தும்கூர்) மற்றும் புனித மார்ச் கதீட்ரல் ஆலயம் ஆகியவற்றில் இறைப்பணி ஆற்றினார். இவரது ஆயர் பணியில் உள்ள அனுபவம், இக்கால சூழல் சார்ந்த ஊழியத்தை வடிவமைக்க பயன்பட்டது. மேலும் அவர் தும்கூர் ஏரியா கவுன்சலின் தலைவராகவும் நிர்வாக பொறுப்பினை ஏற்று தலைவராகவும், மினிஸ்டீரியல் கமிட்டியின் கன்வீனராகவும், திருமண்டலத்தின் துணை செயலாளராகவும் மற்றும் திருமண்டல செயலராகவும் இறைப்பணியை நிறைவேற்றினார். இவர் ஊழியம், கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் மிக அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளார். சிறிது காலம் இந்திய அருட்பணி இயக்கத்தின் ஊழியராகவும் பணியாற்றியுள்ளார்.



**பேராயர் அருட்திரு. கம்மானுரி சந்தோஷ் பிரசன்னா ராவ்** அவர்கள் **ஆறாவது பேராயராக சி.எஸ்.ஐ. நந்தியால் திருமண்டலத்தின்** தேவப்பணியை நிறைவேற்றிட தேவனால் 2025 ஆகஸ்ட் 5 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கலசப்பாடு, ஆலம்பூர், கர்னூல், நந்தியால், குண்டக்கல், ப்ரோடாட்டூர் மற்றும் சகல்மர்ரி பகுதிகளில் ஊழியம் செய்ததோடு பேராயரின் சாப்ளின் ஆகவும் சேவை செய்துள்ளார். தனது ஊழிய நாட்களில் தான்டா கிராமங்களில் வெளிப்புற சுவிசேஷ பணியை ஆரம்பித்து,

ஒய்.எம்.ஆர். நகரில் ஒரு ஆலயத்தை ஸ்தாபித்துள்ளார். அவர் வீடுகளில் ஜெபக் கூட்டங்கள் மற்றும் அநேக சபைகளில் உபவாச ஜெபங்களை ஆரம்பித்தார். கல்வி குழு, நிதிக்குழு மற்றும் சொத்து சார்ந்த குழுக்களின் அங்கத்தினராய் இருந்ததினால் அனேக ஆலயங்களில் நிர்வாகங்களை மேம்படுத்தினார். ஆழமான ஊழிய அனுபவம், சேவை செய்யும் இருதயம் மற்றும் இறையியல் ஞானம் கொண்டவர்.



**பேராயர் அருட்திரு. ஜோஸ் ஜார்ஜ்** அவர்களை பல நிலைகளில் ஊழியத்தில் பயன்படுத்தி வந்த தேவன், கடந்த ஆகஸ்டு 6, 2025 அன்று **சி.எஸ்.ஐ. கொல்லம் – கொட்டக்காரா திருமண்டலத்தின் பேராயராக** தேர்ந்தெடுக்க உதவி செய்தார். ஆயருக்கான அர்ப்பணத்தோடும், நிர்வாகப் பார்வையோடும், சமுதாய கரிசனையோடும் கொல்லம், தேவனூர், கரவலூர், மித்ரமாலா, பவித்ரேஸ்வரம், முக்காதலா, குண்டாரா மேற்கு, பட்டழி, குண்டாரா கிழக்கு, அட்டிங்கள் மற்றும் மயநாடு, LMS BB மருத்துவமனையின் சாப்ளினாக, அட்டிங்கள் Sr. எலிசபெத் ஜோயல் பள்ளியின் நிதிப் பொறுப்பிலும் மற்றும் வாலிபர் ஊழியத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் இறைப்பணியை நிறைவேற்றினார். இவர் பலவிதமான ஊழியங்களில், ஆயருக்காண கரிசனை, வாலிபர்கள் ஊழியம் மற்றும் ஆலய மேம்பாட்டுத் துறைகளில் சாதனைகளைப் படைத்துள்ளார். சி.எஸ்.ஐ. சினாடில் சொத்துத் துறையில் மேலாளராகவும், சமுதாய தொண்டு மேலாளராகவும் பொறுப்புகளை நிறைவேற்றினார்.



**பேராயர் அருட்திரு. குரியன் பீட்டர்** அவர்களை தேவன் தமது ஊழியத்தில் பல நிலைகளில் பயன்படுத்தி 2025 ஆகஸ்டு 15 அன்று **சி.எஸ்.ஐ. கொச்சின் திருமண்டலத்தில் இரண்டாவது பேராயராக** அபிஷேகம் பண்ணினார். இவர் நிலம்பூர், மேப்பாடி, ஷோரானூர், அலுவா, எர்ணாகுளம், வள்ளியத்தோடு, அடிமல்லி, வயநாடு, மெல்போர்ன் மற்றும் ஃபோர்ட் கொச்சி போன்ற பகுதிகளில் தேவ ஊழியத்தை நிறைவேற்றினார். இவர் திருமண்டலத்தின் கிறிஸ்தவ கல்வி இயக்குனராகவும் பொறுப்பு வகித்திருந்தார். மலபார் மஹாயிதவக்கா பகுதியில் ஞாயிறு பள்ளியின் பொதுச் செயலாளராக பதவி வகித்திருந்தபோது ஞாயிறு பள்ளி பாட திட்டத்தை செயல் சார்ந்த திட்டமாக தயாரித்திருந்தார்.



**பேராயர் அருட்திரு. டாக்டர். ஏ. ஜேக்கப் லிவிங்ஸ்டன்** அவர்கள் தேவனால் பல நிலைகளில் பயன்படுத்தப்பட்டு 2025 ஆகஸ்டு 16 அன்று **ஈரோடு, சேலம் திருமண்டலத்தின் முதல் பேராயராக** தேர்ந்தெடுக்கப்பட்டு அபிஷேகம் பண்ணபட்டிருக்கிறார். இவர் கோபி, சேலம், ஈரோடு, சிவகிரி மற்றும் பவானி போன்ற மண்டலங்களில் தேவப் பணியை ஆயருக்கான உணர்வோடும், செயல்முறை தரிசனத்தோடும் நிறைவேற்றி இருக்கிறார். இவர்

2016-2022இல் சாமானிய சுவிசேஷகர்களின் பொதுச் செயலாளராக இருந்தபோது சுமார் 750 அருளுரை ஆற்றும் சுவிசேஷகர்களை உருவாக்கி உள்ளார்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள அனைத்து பேராயர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்தி, விசுவாசிகள் கர்த்தருடைய வேதத்தில் வேரூன்றவும், ஊழியத்தில் தங்களை உற்சாகத்தோடு ஈடுபடுத்திக்கொள்ள ஊக்குவிக்கவும் பயன்படுத்த வேண்டும் என்று ஜெபிப்போம்.

*Compiled by:* **Rev. A.S. Franklin M.Y. Patham,** (Communication Department)

# டெல்லி சி.என்.ஐ. பேராயத்தின்

## பேராயருடன் ஓர் சந்திப்பு



**பேராயர் அருட்திரு. டாக்டர். பால் ஸ்வரூப்** அவர்கள் தேவ ஊழியத்தை நிறைவேற்றிட ஒரு தொலைநோக்கு தரிசனம் கொண்டவர். அவரை 2025 ஆகஸ்டு 18 அன்று அவரின் அலுவலகத்தில் சந்தித்தேன். அவரோடு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மாபெரும் தரிசனத்தையும், விசேஷமாக வட இந்தியாவின் எல்லா எல்லைகளையும் சுவிசேஷத்தால் சந்திப்பதை குறித்தும் பகிர்ந்து கொண்டேன். FMPB, UESI மற்றும் Gideons ஆகிய இயக்கங்களோடு இணைந்து ஹரியானா மற்றும் டெல்லி பகுதிகளில் ஊழியத்தை நிறைவேற்றவுள்ள தனது விருப்பதை பகிர்ந்துகொண்டார். இவ்வாறு ஊழியத்தில் தொலைநோக்கு மற்றும் ஆர்வமுள்ள ஒரு பேராயரை தேவன் டெல்லியில் வைத்திருப்பது மாபெரும் ஆசீர்வாதமாகும்.

நியூ இன்டர்நேஷனல் வெர்ஷன் (NIV) மொழிபெயர்ப்பாளர்களில் இணைந்துள்ள 15 உறுப்பினர்களில் இவரும் ஒருவராவார். இவர் யாத்திராகமம், நீதிமொழிகள், எரேமியா மற்றும் புலம்பல் புத்தகங்களுக்கு விளக்கங்களை எழுதியுள்ளார். மேலும் தெற்காசியா வேதாகம விளக்கவுரையின் பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களில் ஒருவராகவும் இருந்தார். இவர் மிகவும் பிரபலமான சர்வதேச அறிஞர் ஆவார். இவர் 2022இல் லம்பெத் மாநாட்டில் ஒரு பேச்சாளராக இருந்துள்ளார்.

FMPBயின் முந்தைய துணைத் தலைவராக இருந்த இவர் நம் இயக்கத்தோடு அதிகம் தொடர்புடையவர். இந்திய தேசத்து மக்களை தேவனிடம் திருப்பவும், தேவ மதிப்புகளுடன் ஒரு தாக்கத்தை திருச்சபைகளில் உருவாக்கிட கர்த்தர் இவரை பயன்படுத்திடவும் நாம் அவருக்காகவும், CNI திருச்சபைகளுக்காகவும் ஜெபிப்போம்.

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர்

## பணித்தள விஜயம் – தமிழ் நாடு வடக்கு மண்டலம்

| வ. எண் | பயன தேதி | ஜெபக்குழுக்கள் | மாநிலம் |
|---|---|---|---|
| 1. | 13.09.2025 - 15.09.2025 | சோலிங்கநல்லூர் | குஜராத் |
| 2. | 19.09.2025 - 21.09.2025 | பள்ளிக்கரணை | ஒடிசா |
| 3. | 21.09.2025 - 01.10.2025 | திருமங்களம் & முகப்பேர் | குஜராத் |
| 4. | 25.09.2025 - 29.09.2025 | அண்ணாநகர் | ஜார்கண்ட் |
| 5. | 27.09.2025 - 03.10.2025 | விழுப்புரம் | ஒடிசா |
| 6. | 29.09.2025 - 05.10.2025 | பாடி பிராந்தியம் | ஹரியானா & டெல்லி |
| 7. | 01.10.2025 - 05.10.2025 | போரூர் | ஹிமாச்சல் |
| 8. | 03.10.2025 - 07.10.2025 | சாந்தோம் பிராந்தியம் | ஜார்கண்ட் |
| 9. | 05.10.2025 - 16.10.2025 | அடையார் | ஹரியானா & பஞ்சாப் |
| 10. | 06.10.2025 - 14.10.2025 | சோலிங்கநல்லூர் | ஜம்மு & காஷ்மீர் |
| 11. | 08.10.2025 - 14.10.2025 | பட்டாபிராம் | மத்தியப்பிரதேசம் |
| 12. | 09.10.2025 - 17.10.2025 | திருநின்றவூர் | ஹிமாச்சல் |
| 13. | 13.10.2025 - 17.10.2025 | தண்டையார்ப்பேட்டை & ராயபுரம் | மத்தியப்பிரதேசம் |
| 14. | 13.10.2025 - 20.10.2025 | வண்ணாரப்பேட்டை | குஜராத் |
| 15. | 24.10.2025 - 26.10.2025 | திருநின்றவூர் | மத்தியப்பிரதேசம் |
| 16. | 20.11.2025 - 23.11.2025 | வேலூர் | ஜார்கண்ட் |
| 17. | 14.01.2026 - 17.01.2026 | ரெட்டிஹில்ஸ் | சத்தீஸ்கர் |

## பணித்தள விஜயம் – தமிழ் நாடு தென் மண்டலம்

| வ. எண் | பயன தேதி | ஜெபக்குழுக்கள் | மாநிலம் |
|---|---|---|---|
| 1. | 26.09.2025 - 29.09.2025 | தூத்துக்குடி | குஜராத் |
| 2. | 07.10.2025 - 17.10.2025 | தென்காசி | குஜராத் & மஹாராஷ்டிரா |

## பணித்தள விஜயம் – தமிழ் நாடு மேற்கு மண்டலம்

| வ. எண் | பயன தேதி | ஜெபக்குழுக்கள் | மாநிலம் |
|---|---|---|---|
| 1. | 27.09.2025 - 05.10.2025 | சேலம் | ஜார்கண்ட் & மேற்கு வங்காளம் |
| 2. | 07.10.2025 - 12.10.2025 | மேட்டுப்பாளையம் | அசாம் |
| 3. | 06.10.2025 - 15.10.2025 | கோயம்புத்தூர் | ஜம்மு & பஞ்சாப் |
| 4. | 10.10.2025 - 15.10.2025 | உடுமலைப்பேட்டை | பீஹார் & மேற்கு வங்காளம் |
| 5. | 18.10.2025 - 24.10.2025 | திருப்பூர் | ஜம்மு & காஷ்மீர் |
| 6. | 23.10.2025 - 30.10.2025 | ஓசூர் | குஜராத் |
| 7. | 30.10.2025 - 06.11.2025 | ஈரோடு | ராஜஸ்தான் |

# ஆசிரியர் தினம்

## ஆசிரியர் – சமுதாயத்தை சீர்த்திருத்துபவர்



இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ ஆசிரியர்கள் நாட்டின் கல்வி அமைப்பை வடிவமைப்பதில் முக்கியப்பங்கு வகிக்கின்றனர். 18ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் நம் நாட்டிற்கு வந்த மிஷனெரிகள் முதன்முதலில் மக்களின், குறிப்பாக பெண்களின் மேம்பாட்டிற்காக பள்ளிகளைத் தொடங்கினர். இன்று நம் தேசத்தில் சுமார் 55,000 கிறிஸ்தவ பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்து மதங்களையும் சேர்ந்த 2.5 கோடி மாணவர்களுக்கு உயர்தர கல்வியை வழங்கி வருகின்றன.

### இந்திய சமுதாயம்

இந்திய சமுதாயம் மிகவும் சிக்கலானதும், பல பரிமானங்களைக் கொண்டதுமாக இருந்து வந்தது. சமுக படிநிலை, பண்பாடு மற்றும் பொருளாதார அம்சங்கள் போன்ற பல காரணிகள் அதன் கட்டமைப்பையும், கலாச்சாரத்தையும் அமைத்தன. மிஷனெரிகளின் வருகைக்கு முந்தைய இந்திய சமுதாயமானது, பலவித பாரம்பரிய நடைமுறைகள், சமூக சீரமைப்புகள் மற்றும் கலாச்சார தாக்கங்களால் அமைந்திருந்தது.

ஆசிரியர்கள் பள்ளி கல்வியைத் தாண்டி, சமுதாய வளர்ச்சிக்காக பல்வேறு விதத்தில் பங்களித்து வருகின்றனர். அவர்கள் விளைவித்த சில முக்கிய தாக்கங்கள் பின்வருமாறு.

- பொருளாதார வளர்ச்சியில் மேம்பாட்டை வழங்குதல்
- சமூக மாற்றத்தை ஊக்குவித்தல்
- புதுமை மற்றும் படைப்பாற்றல் வழங்குதல்
- அறிவை உருவாக்குதல்
- பொது வாழ்க்கையில் ஈடுபாட்டை ஊக்குவித்தல்
- எதிர்கால குடி மக்களை உருவாக்குதல்
- மாணவர்களின் மேம்பாடுகளை அதிகப்படுத்துதல்
- கலாச்சார மரபுகளை பாதுகாத்தல்



## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பங்களிப்பு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவானது அநேக பழங்குடி மக்களுக்கு கல்வியறிவு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமுதாய உயர்வு ஆகிய பல முக்கிய பங்களிப்பை வழங்கி வருகிறது. அவர்கள் செய்த பணி சுருக்கமாக...

- **கல்வி:** பழங்குடி மக்களுக்கு சிறுவர் மேம்மாட்டு மையம், கிராமப் பள்ளிகள், ஆங்கிலப் பள்ளிகள் மற்றும் முதியோர் கல்வி திட்டங்கள் மூலமாக முழுமை யான வளர்ச்சியை ஏற்படுத்தினர்.
- **பொருளாதார மேம்பாடு:** விவசாயம், விதை வங்கிகள், கால்நடை வளர்ப்பு பயிற்சி மற்றும் சிறிய அளவிலான கடன்கள் போன்ற திட்டங்கள் மூலம் அவர்களை தன்னிறைவு பெறச் செய்தனர்.
- **தொழில்முனைவு பயிற்சி:** வேலை வாய்ப்புக்கான திறன்களை வளர்த்து தரும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- **சமுதாய மாற்றம்:** சுவிசேஷம் மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் மூலம் சமுதாயம் மாற்றமடைந்துள்ளது. இத்தகைய முயற்சிகள் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தி சமூக முன்னேற்றத்தையும், உயர்வையும் ஏற்படுத்தியுள்ளன.

## இந்திய பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

இந்நாட்களில் இந்தியாவின் கல்வித்தரத்தைப் பாதிக்கும் பல சவால்களை பள்ளிகளும், ஆசிரியர்களும் எதிர்கொள்கின்றனர். கீழ்காணும் சவால்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டியது அவசியமாக உள்ளது.

### (அ) பள்ளிகளுக்கான சவால்கள்

- **அடிப்படை வசதிகள்:** கிராமப்புறம் மற்றும் தொலைத்தூரப் பகுதிகளில் பல பள்ளிகள் வகுப்பறைகள், நூலகங்கள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் கழிவறைகள் போன்ற அடிப்படை வசதிகளை தவறவிட்டுள்ளனர்.
- **டிஜிட்டல் பாகுபாடு:** நம்பகமான இணையமைப்பு, சாதனங்கள் மற்றும் டிஜிட்டல் வளங்கள் இல்லாமை பெரும் சவாலாக உள்ளது,
- **சமத்துவம் மற்றும் உள்ளடக்கம்:** பின்தங்கிய சமூகங்களிலுள்ள மாணவர்களுக்கு கல்வியில் சம வாய்ப்புகள் இல்லை.
- **தரமான கல்வி:** ஏட்டு படிப்பிலிருந்து திறன் மற்றும் முழுமையான கல்விக்கான மாற்றம் ஒரு சவாலாகவே உள்ளது.

### (ஆ) ஆசிரியர்களுக்கான சவால்கள்

- **ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் தரம்:** பயிற்சிப்பெற்ற, தகுதிவாய்ந்த ஆசிரியர்களின் குறைபாடு, பணி அமர்த்தல் மற்றும் தக்கவைத்தல் போன்ற பிரச்சனைகள் உள்ளன.

- **பயிற்சி அளிக்கும் வாய்ப்புகள் குறைவு:** நவீன கற்பித்தல் முறைகளை அறிந்து கொள்ள வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.
- **பெரிய வகுப்பறைகள்:** அதிகமான மாணவர்களை கையாளும்போது தனிப்பட்ட கவனிப்பு வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது.
- **நிர்வாக சுமைகள்:** நிர்வாக வேலைகளால் வகுப்பறை கல்விக்கு நேரம் அளிக்க முடியாமல் போகிறது.
- **பெற்றோரின் எதிர்பார்ப்புகள்:** மாணவர்களிடம் பெரிதான முன்னேற்றத்தை பெற்றோர் எதிர்பார்ப்பதால் ஆசிரியர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுகிறது.

### (இ) பொதுவான சவால்கள்

- **தேர்வு அழுத்தம்:** தேர்வுகள் மற்றும் மதிப்பெண்கள் மீது அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் மாணவர்களின் படைப்பாற்றலும், முழுமையான வளர்ச்சியும் குறைகின்றன.
- **வளங்களின் குறைபாடு:** வகுப்பறைகள், நூலகங்கள், ஆய்வு கூடங்கள் மற்றும் கற்பித்தலுக்கான உபகரணங்கள் போதிய அளவில் இல்லாதது.
- **மாணவர்களின் ஒழுங்கு:** ஒழுக்கம், மரியாதை மற்றும் உற்சாகக் குறைபாடு போன்ற பிரச்சனைகள் உள்ளன.

## கிறிஸ்தவப் பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அம்சங்கள்

1. **எதிர்கால குடி மக்களை உருவாக்குதல்:** மாணவர்களுக்கு நீதி நெறிகள், மதிப்பீடு, ஒழுக்கம், அறிவு ஆகியவற்றை புகட்டி, பொறுப்புள்ள குடிமக்களாக வளர்த்தல்.
2. **முழுமையான வளர்ச்சி:** அறிவியல், உணர்வுப்பூர்வ மற்றும் சமூக திறன்களை வளர்த்தல். மேலும் அதிக வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு கூடுதல் பாடத் திட்ட நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
3. **சமுதாயத்தை கட்டியமைத்தல்:** இணக்கமான மற்றும் ஊக்குவிக்கும் கற்றல் சூழல் அமைத்தல். குழுவாக பணி செய்தலை ஊக்குவித்தல்.
4. **அமைதி மற்றும் புரிதலை வளர்த்தல்:** மாணவர்களின் நடத்தையில் சரியான வழிகாட்டுதல், கோபம் மற்றும் பகையைக் குறைத்து, மரியாதையும், ஒற்றுமையும் புகட்டுதல்.
5. **விசுவாசத்தில் வளர்ச்சி:** தேவனுடனான ஆழமான உறவை உருவாக்க ஊக்குவித்தல். பணிவிடைத் தலைவர்களை உருவாக்குதல் மற்றும் கிறிஸ்தவ பண்புகளை உருவாக்குதல்.
6. **சிறந்த முன்மாதிரிகள்:** ஆசிரியர்கள் கிறிஸ்தவ மதிப்புகள் மற்றும் ஒழுக்கங்களை நிலைநாட்டும் முன்மாதிரியாக வாழ்தல், மாணவர்களை சமூக மாற்றத்திற்கான தூண்டுதல்களாக உருவாக்குதல்.

## இயேசு கிறிஸ்துவின் பார்வையில் ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய வேதாகமக் கொள்கைகள்

1. **தேவனை நேசி, மனிதரை நேசி:** உங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் தேவனை நேசிப்பதுபோல் மற்றவர்களையும் நேசிக்க வேண்டும் (மாற்கு 12:30-31).
2. **தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்:** தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதோடு மற்றவர்களுக்கும் கற்றுத்தர வேண்டும் (மத். 28:18-20).
3. **தாழ்மையாக நடந்து கொள்தல்:** தங்களை உயர்த்தாமல், தேவனின் வழிகாட்டுதலின்படி நடக்க வேண்டும் (பிலி. 2:3).
4. **நியாயம் செய்யவும், தயை காண்பிக்கவும்:** தங்கள் ஒவ்வொரு செயலிலும் தேவனின் குணாதிசயங்களான நீதி மற்றும் தயையை பிரதிபலிக்க வேண்டும் (மீகா 6:8).
5. **ஆவிக்குரிய வளர்ச்சிக்கு முக்கியத்துவம்:** மற்றவர்களின் ஆவிக்குரிய வாழ்வில் அக்கறை செலுத்தி ஊக்குவிக்க வேண்டும் (ரோமர் 14:19).
6. **தங்களை வெறுத்தல்:** சுயத்தை வெறுத்து சிலுவையை ஏற்று இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் (லூக். 9:23).
7. **சத்தியத்தை கற்றுக்கொள்ள ஊக்குவித்தல்:** சத்தியத்தை தெளிவாக வெளிப்படுத்தி மற்றவர்களை விசுவாசத்தில் வளர்க்க வேண்டும் (1 தெச. 5:11).
8. **இயேசுவின் போதனைகளை பிரதிபலிக்கவும்:** இயேசுவின் போதனைகளையும், மதிப்பீடுகளையும் வாழ்க்கையின் அனைத்து சூழ்நிலைகளிலும் கடைபிடிக்க வேண்டும் (2தீமோ. 1:13).

## முடிவுரை


இந்தியா தனது கல்வி நடைமுறையில் பல சவால்களை எதிர்கொள்ளும் நிலையிலிருந்தாலும், கிறிஸ்தவ ஆசிரியர்கள் தங்கள் அழைப்பில் உறுதியாக நிற்கிறார்கள். அநேக சவால்களைக் கடந்தும் அவர்கள் தரமான கல்வியை வழங்கி, மாணவர்களின் முழுமையான திறன்களை வெளிப்படுத்த ஊக்குவிக்கின்றனர்.

**திருமதி. பெரில் யோகராஜ்** (ஓய்வு ஆசிரியர், ஆவடி)


## வாலிபர் முகாம் — அருமனை பணி மாவட்டம்

நாள்: 06.09.2025, சனிக் கிழமை காலை 9.30 மணி முதல் 4.00 மணி வரை
இடம்: L.M. பாஸ்ட்ரேட் சபை, அருமனை,
(பனிச்சவிளை இந்தியன் ஆயில் பெட்ரோல் நிலையம் அருகில்)
தலைமை: **Rev. M. ஜஸ்டின் ராஜ்,** M.A., B.D. சபைபோதகர்
செய்தி: **Rev. G. கிங்ஸ்லி** (FMPB, மண்டல செயலர்)
**திரு. ரூபன் ராய்** (திருநெல்வேலி)
தொடர்பு: 9443681992 / 8807999844

# நல்லமாடா பணித்தளம்




ஆந்திரப்பிரதேச மாநிலமானது தென் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. பரப்பளவில் ஏழாவது பெரிய மாநிலமாகவும், பத்தாவது பிரபலமான மாநிலமாகவும் உள்ளது. இங்கு பேசப்படும் தெலுங்கு மொழியானது இந்தியாவின் செம்மொழிகளில் ஒன்றாகும். இது அதிகாரப் பூர்வமான மாநில மொழியாகவும், மக்களால் பெரிதும் பேசப்படும் மொழியாகவும் உள்ளது. ஆந்திரப்பிரதேசமானது வடகிழக்கில் ஒரிசா மாநிலத்தையும், வடக்கே சத்தீஸ்காரையும், தென்மேற்கு பகுதியில் கர்நாடகாவையும், தெற்கே தமிழ் நாட்டையும், வடமேற்கில் தெலுங்கானா மாநிலத்தையும், கிழக்கே வங்கக் கடலையும் தன் எல்லையாகக் கொண்டுள்ளது. இது இந்தியாவின் மிக நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளது.



## மக்கள் இனங்கள்

ஆந்திரப்பிரதேசத்தில் அநேக மக்களினங்கள் முக்கியப் பங்கை வகிக்கின்றனர். தெலுங்கு மக்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். மேலும் பழங்குடி மக்கள் இனங்களான கோண்ட், சவாராங், போர்ஜா மற்றும் பல துணைப்பிரிவுகளும் உள்ளனர். இங்கு இஸ்லாமியர் சமூகம் அதிக மக்கள் தொகையையும், கிறிஸ்தவர்கள் சிறிய மக்கள் தொகையையும் கொண்டுள்ளனர். ஆந்திராவின் கடற்கரைப் பகுதியில் வாழும் காப்பு (நாயுடு) எனப்படும் மக்களினம் ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும், ரெட்டி என்ற முக்கிய மக்களினம் பல துணைப் பிரிவுகளையும் கொண்டுள்ளனர். இவர்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு,

வியாபாரம் மற்றும் அரசு பணி செய்பவர்களாக உள்ளனர். மாதிகா என்ற மக்களினம் பாரம்பரியமாக விவசாயத் தொழிலாளர்களாகவும், தோல் வேலை செய்பவர்களாகவும், இந்நாட்களில் அரசுப் பணி செய்பவர்களாகவும் உள்ளனர். ஒட்டேர் என்ற மக்களினம் கல் உடைப்பவர்களாகவும், பத்மாசாலி என்ற மக்கள் பாரம்பரிய நெசவாளர்களாகவும், விவசாயம், சலவை செய்தல் மற்றும் சிறு வியாபாரம் செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவர்களது சமையல் கலையைப் பொறுத்தவரை மிகவும் காரம் பயன்படுத்துகிறார்கள். பருப்பு, வேர்க்கடலை சட்னி, புளித்தக் கீரை, கேழ்வரகு கழி ஆகியவை சிறப்புமிக்க உணவாகும். தங்கள் உறவினர்களுக்குள் திருமண பந்தம் செய்துகொள்வது வழக்கத்தில் இருந்தாலும், காதல் திருமணம் மற்றும் பெரியோர்களால் ஒழுங்கு செய்யப்படும் திருமணங்களும் இவர்களின் கலாச்சாரத்தில் அனுமதிக்கப்படுகிறது.



## ஊழியங்கள்

ஆந்திரப் பிரதேசத்தின் நல்லமாடா கிராமமானது ஸ்ரீ சத்திய சாய் மாவட்டத்தின் நல்லமாடா மண்டலத்தில் உள்ளது. இது ராயலசீமா பிராந்தியத்தின் ஒரு பகுதியாகும். அனந்தப்பூர் மாவட்டத்திலிருந்து 85 கி.மீ. தூரத்தில் வடக்கே உள்ளது. உள்ளூர் மொழி தெலுங்கு. மொத்த ஜனத்தொகை 10,944. கல்வியறிவு 55.92%. நல்லமாடா மண்டலத்தில் 10 கிராமங்கள் உள்ளது. இப்பகுதியில் அதிகமான கோவில்களும், அருவிகளும் உள்ளதால் சுற்றுலா ஸ்தலமாகவும் உள்ளது.



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஆகஸ்டு 23, 2021ஆம் ஆண்டு நல்லமாடாவில் ஒரு பணித்தளத்தை ஆரம்பித்தது. இப்பணித்தளத்திற்கு திரு. தினேஷ் மரையா குடும்பத்தினர் முதல் ஊழியர்களாக அனுப்பப்பட்டனர். ஆரம்ப நாட்களில் பல இன்னல்கள் மத்தியில் இங்கு ஊழியங்கள் நடைபெற்றன. அவர்கள் தங்கள் ஊழியத்தை மாதிகா, போயா, எருகுலு மற்றும் பத்மாசாலி என்னும் மக்கள் கூட்டங்களுக்கிடையே முதன்முறையாக சுவிசேஷம் அறிவித்தனர். கணிசமான எண்ணிக்கையிலான விசுவாசிகள் மாதிகா இனத்தைச் சேர்ந்தவர்கள்.

## எதிர்கொள்ளும் சவால்கள்

சாதி அமைப்பு, நற்செய்தியை அறிவிக்க ஒரு பெரிய தடையாக உள்ளது. உயர் சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியினரை ஒடுக்கும் அவல நிலை இப்பகுதியில் அதிகம் காணப்படுகின்றது. அவர்களுக்கிடையே தங்களுக்கென தனி குலதெய்வங்களைக்

கொண்டு வழிபடுகின்றனர். இவர்கள் மத்தியில் பல்வேறு மூட நம்பிக்கைகள் உள்ளன. 1. விதவைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றார்கள். 2. அசைவ உணவினை எடுத்துச் செல்லும்போது அசுத்த ஆவிகளுக்கு பயந்து தங்களுடன் அடுப்பு கரித் துண்டுகளை எடுத்துச் செல்கின்றனர். 3. ஒரு குழந்தை அதிகமாக அழுதால் சிலர் உள்ளூர் சடங்குகள் அல்லது மந்திரங்களை ஓதுகின்றார்கள். அது அழுகையை நிறுத்தும் என்று நம்புகிறார்கள். எனினும் சுவிசேஷத்திற்கு இவர்கள் மத்தியில் எந்த எதிர்ப்பும் இல்லை என்பதால் தேவனைத் துதிப்போம்.

## முதல் கனி

நமது முதல் விசுவாசியான திரு. ஜோசப் அவர்கள் மருத்துவம் குணப்படுத்த முடியாத கால் வலியினால் அவதிப்பட்டு சரியாக நடக்க முடியாத சூழ்நிலையில் ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகம் கொடுத்ததால் இயேசுவை ஏற்றுக்கொண்டார். இன்று அவர் நமது ஆலயத்தின் மூப்பராக தேவ பணியாற்றி வருகிறார்.

## அற்புதங்கள்

நமது ஊழியரின் குடும்பம் ஊழியத்தை முடித்து இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பும்போது பெரிய மரக்கிளை அவர்களுக்கு சற்று முன் விழுந்தது. இவ்விபத்தி லிருந்து தேவன் அற்புதமாய் ஊழியரின் குடும்பத்தைப் பாதுகாத்தார்.

திரு. தினேஷ் இல்லாதபோது ஒருமுறை ஒரு பாம்பு அவர்களின் வீட்டிற்குள் நுழைந்தது. அன்று தேவன் அவரின் மனைவி மற்றும் குழந்தையை ஆபத்தி லிருந்து காப்பாற்றினார்.

## ஜெபிப்போம்

- மூட நம்பிக்கைகளிலிருந்து மக்கள் விடுப்பட வேண்டும்.
- உயர் சாதியினரின் ஆதிக்கத்திலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் விடுபட்டு சமுதாயத்தில் முன்னேற வேண்டும்.
- விசுவாசிகள் தவறாமல் ஜெபக் கூட்டங்களில் பங்குபெற்று தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சிப்பெற வேண்டும்.
- திரளானோர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்து கிறிஸ்துவின் மந்தையில் இணையவும், சபை வளர்ச்சிப்பெறவும் வேண்டும்.
- நல்லமாடா பகுதியில் பெரும்பாலான மக்கள் ஒரு மனித குருவை வணங்கி வருகிறார்கள். ஜீவனுள்ள தேவன் இயேசு ஒருவரே என்று இம்மக்கள் அறிந்து கொள்ளும் ஞானத்தை தேவன் அருள வேண்டும்
- இப்பகுதியில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க வேண்டும்.
- நமது மிஷனெரி திரு. தினேஷ் மரையா & திருமதி. மேரி மூர்மு, மகன் ஆல்வின் மற்றும் மகள் ஜாய்ஸ்லின் ஆகியோருக்காக, தேவ இராஜ்ய கட்டுமானப்பணியில் தேவன் இவர்களை வல்லமையாகப் பயன்படுத்த ஜெபிப்போம்.

# கங்குபாடா சிறுமியர் விடுதி மங்களபடைப்பு




தேவனுடைய பெரிதான கிருபையால் தூத்துக்குடி வட பிராந்தியம் சார்பாக ஜார்கண்ட் மாநிலத்தில் பர்ஹர்வா என்னும் பகுதியில் கங்குபாடா கிராமத்தில் சிறுமியருக்காக கட்டப்பட்ட விடுதியை 12.07.2025 அன்று மங்கலப்படைப்பு செய்ய 38 பேர் கொண்ட குழுவாக சென்றிருந்தோம். இளம் சிறார்கள் கலாச்சார நடனத்துடன் எங்கள் கால்களை கழுவி வரவேற்றது அனைவரின் உள்ளத்தையும் மெய்சிலிர்க்கச் செய்தது. ஆரம்ப ஜெபத்தை அருள்திரு. T.Y.P. ஆசீர் அவர்கள் ஜெபிக்க, கல்வெட்டை திரு. Y. ஐசக் (சென்னை) அவர்கள் திறந்து வைத்தார்கள். பிஷப் Dr. A ஸ்டீபன், M.A., Phd. (IPM Cathedral Tuticorin) அவர்கள் இனிய பாடலுடன் முதன்மை கதவை திறக்க மற்ற கதவுகளை Rev. செல்வின் G. சார்லஸ், Rev. T. டேனியல் ஞானபிரகாசம், Rev. P. ஜாண்சன் டேனியல், Rev. A. கோவில்பிச்சை தவராஜ் (Rtd. TND) திறந்து வைத்தார்கள். தூத்துக்குடி பகுதியைச் சார்ந்த சகோ. லிவிங்ஸ்டன், சகோ. தினகரன் ஜெயசிங், சகோ. ஜெப சுதாகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கோவில்பட்டியை சார்ந்த Nehemiah Church Builders Trust அங்கத்தினர்கள் இனிய பாடல் பாடி மகிழ்வித்தார்கள். பிள்ளைகளின் சாட்சிகள், வாழ்த்துரைகள் போன்ற அனைத்து நிகழ்வுகளையும் பார்த்த தலைவர்கள் நாம் கொடுக்கும் காணிக்கைகள் ஒன்றும் வீணாகவில்லை, இன்னும் தீவிரமாய் செயல்பட வேண்டுமென தங்களை அர்ப்பணித்தார்கள்.





இவை அனைத்தையும் Rev. ஜான்பால் ஹாரிஸ், Rev. டேனியல் அருள்மணி முன்னின்று நடத்தினார்கள். சகோதரி. ஈவிலின் பாக்கியா மற்றும் பிற சகோதரிகளின் அர்ப்பணிப்பும், தியாகமும் மற்றும் அனைத்து செயல்களும் மறக்க முடியாதவைகள். அன்று மாலையில் கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகளின் கல்லறைகளைப் பார்த்து கண் கலங்கினார்கள். மெர்சி சிறுமியர் விடுதி, பந்தேனி பள்ளி மற்றும் சாந்தனா விடுதி, மருத்துவமனை அனைத்தையும் பார்த்து, ஆத்தும ஆதாயம் மாத்திரம் அல்ல சமூக பணியும் சிறப்பாக நடைபெறுகிறதைக் கண்டு தேவனைத் துதித்தோம். ஜெபம், தியாகம், அர்ப்பணிப்பு மூலம் மிஷனெரிகளை தேவன் வல்லமையாக பயன்படுத்துகிறார். இன்னும் அநேக குழந்தைகளை ஆதரிக்க வேண்டும் என ஊக்கமாக ஜெபித்தனர்.

**அருள்திரு. I. மெயின்ராஜ்,** விரிவுப்பணி பிராந்திய செயலர் – தூத்துக்குடி

# ஜார்கண்ட் மாநிலத்தில் சந்தால் மக்கள் மத்தியில் ஆலயங்கள் பிரதிஷ்டை



13.07.2025 ஞாயிறு அன்று மூன்று குழுவாக பிரிந்து சென்றிருந்தோம். **முதலாவது ஆலயம்** 17 பேர் கொண்ட குழுவாக கட்டல்டி என்ற கிராமத்தில் திரு. G.D. மித்ரா (Good Shepherd Matric Hr. Sec. School, Marthandam, K,K, Dt.) மற்றும் Nehemiah Church Builders Trust, Kovilpatti ஆகிய இவர்களின் சார்பாக கட்டப்பட்ட ஆலயத்தை Rev. A. கோவில்பிச்சை தவராஜ் (Rtd. TND) அவர்கள் ஜெபிக்க கல்வெட்டை திறந்து வைத்தார்கள். பின்பு பிஷப் Dr. A ஸ்டீபன், M.A., Phd. (IPM Cathedral Tuticorin) அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.



**இரண்டாவது ஆலயம்:** ராம்கார் பணித்தளத்தி லுள்ள கெண்டுவாடிகுல் கிராமத்தில் திரு. T. ஹில்சன் சாமுவேல் ராஜ் அவர்கள் (தூத்துக்குடி) குடும்பத்தின் சார்பாக கட்டப்பட்ட ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய 11 பேர் குழுவாக சென்றனர். ஆலயத்தின் கல்வெட்டை Rev. T. டேனியல் ஞானபிரகாசம் (TND) முதன்மை கதவை திறந்து வைத்து ஆலய பிரதிஷ்டை வைபவத்தை சிறப்பாய் நடத்தினார்கள்.



**மூன்றாவது ஆலயம்:** பெல்டிஹா பணித்தளத்தில், கோப்பா என்ற கிராமத்தில் தூத்துக்குடியை சார்ந்த திரு. டி. தினகரன் ஜெயசிங் அவர்கள் குடும்பத்தின் சார்பாக 2014இல் கட்டப்பட்ட ஆலயத்தை, பிரதிஷ்டை நேரத்தில் கலந்துகொள்ள முடியாததால் 9 பேர் குழுவாக சென்று Rev. P. ஜாண்சன் டேனியல் (TND) அவர்கள் தலைமையில் ஆராதனை நடத்தினார்கள்.

மேலே சொல்லப்பட்ட மூன்று ஆலயங்களிலும் விசுவாசிகள் தங்கள் கலாச்சார நடனத்துடன் எங்களை வரவேற்று பாதங்களை கழுவி உபசரித்த முறை, வந்த அனைவரையும் மெய்சிலிர்க்க செய்தது. தாங்கள் கொடுத்த பணங்களும், ஜெபங்களும் வீணாக செல்லவில்லை என்பதை நேரில் பார்த்து மகிழ்ச்சியடைந்தார்கள். வந்தவர்களில் அநேகர் ஆலயம் கட்டிக்கொடுக்க தீர்மானித்தனர். தேவன் அவர்களின் அர்ப்பணிப்பை ஆசீர்வதிப்பாராக!

**அருள்திரு. I. மெயின்ராஜ்,** விரிவுப்பணி பிராந்திய செயலர் – தூத்துக்குடி

## இளம் வாலிபர் கூடுகை

### ஆவடி பிராந்தியம்
### திருவள்ளூர் மாவட்டம்

நாள்: 05.09.2025, வெள்ளிக் கிழமை காலை 9.30 மணி முதல் 4.00 மணி வரை
இடம்: நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆவடி.
செய்தியாளர்: **சகோ. P. சத்தீஷ் குமார்** (Friends of Good News)
பணித்தள பகிர்வு: **சகோ. R. சங்கர்** (FMPB, Krishnagiri)
வயது வரம்பு: 13 முதல் 19 வயது வரை

## மகளிர் மற்றும் சிறுவர் கூடுகை

### சேலம் மாவட்டம்

நாள்: 06.09.2025 சனிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை
இடம்: சி.எஸ்.ஐ. ஆண்கள் மேல்நிலை பள்ளி சிற்றாலயம், கோட்டை, சேலம்.
செய்தியாளர்:
**திருமதி. மணி செல்வி சாரதி,** FMPB, பெண்கள் பிரிவு
மிஷனெரி பகிர்வு: **திருமதி. ஷீபா சீனிவாசன்** (மிஷனெரி, U.P.)
சிறுவர்களுக்கான சிறப்பு கூடுகை நடத்துபவர்கள்:
**சிறுவர் ஊழியர்கள் FMPB,** சென்னை.

## ஸ்கேன் குடும்பக் கூடுகை

### திருச்சி

நாள்: 21.09.2025, ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல்
இடம்: அரிஸ்டோ L.K.S. மஹால், மத்திய பேருந்து நிலையம் அருகில், திருச்சி.
செய்தியாளர்: **திரு. ஐசக் லிவிங்ஸ்டன்**
(MD சத்தியம் TV & தலைவர், **ஆலிவ் ஸ்கூல்ஸ்,** சென்னை)
பணித்தள பகிர்வு: **திருமதி. ஏஞ்சல் நர்சாரி** குழுவினர் (மிஷனெரி, அஸ்ஸாம்)
தொடர்புக்கு: 9994918543 / 9842410481 / 9597124875

## வாலிபர் கூடுகை

### வேலூர்

நாள்: 02.10.2025, வியாழக் கிழமை காலை 9 மணி முதல் 4.30 மணி வரை
இடம்: சி.எஸ்.ஐ. கிறிஸ்து தேவாலயம், காந்தி நகர், வேலூர்.
தலைமை: **Rev. ஜாரெட் அருள் ஜெபரூபன்**
(Presbyter incharge, CSI Christ Church Gandhi Nagar Vellore)
செய்தியாளர்கள்:
**திரு. ரூபன் ராய்** (திருநெல்வேலி) & **திரு. துரை ஜஸ்பர்** (வேலூர்)
பணித்தள பகிர்வு: **திரு. சத்தீஷ்** & **திருமதி. ஷர்மிளா** (மிஷனெரிகள், M.P.)
தொடர்பு: 8292390481 / 9361956997 / 9500834776

# பெரியமலை பயணம்




2025 ஜுலை 26 & 27 தேதிகளில் சென்னை, அண்ணாநகர் ஜெபக்குழுவின் சார்பாக 26 பேர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் பணித்தளமாகிய பெரியமலையிலுள்ள பெட்டமுகிலாளம் சென்று யெகோவாயீரே தலைமைத்துவ பயிற்சி மைய வளாகத்தில் ஒருநாள் தங்கி வந்தோம்.

நமது இயக்கத்தின் மூலமாக கட்டப்பட்ட யெகோவாயீரே LTI வளாகம் மிக அழகாகவும், நேர்த்தியாகவும், ஏதேன் தோட்டத்தைப் போலவும் இருந்ததைக் கண்டு அகமகிழ்ந்தோம். மட்டுமின்றி மாரண்டஹல்லியில் FMPB மூலமாகக் கட்டப்பட்ட முதல் ஆலயத்தைப் பார்த்துவிட்டு, மூத்த மிஷனெரி திரு. பால் நாகராஜ் அண்ணனையும் மற்றும் முதல் சுதேச ஊழியர் திரு. பேதுரு முனியப்பா அண்ணனையும் பார்த்து மிகவும் சந்தோஷமடைந்தோம். விசுவாசிகள் இன்னும் பக்தியில் வேரூன்றவும், போதிய ஆத்துமாக்கள் கிடைக்கவும் ஜெபித்து உற்சாகப்படுத்தினோம். 26ஆம் தேதி மாலை கனிகாபுரம், போலாக்கொள்ளை, சுக்கால்பேடு ஆகிய மலை கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷ ஊழியம் செய்து வந்தோம். மழை மற்றும் குளிர் இருந்தபோதிலும் தேவனுடைய திருப்பணியை உற்சாகத்துடன் செய்தோம். 27ஆம் தேதி ஞாயிறு காலை யவணசந்திரம் மற்றும் கீரியானப்பள்யி ஆராதனைகளில் பங்குபெற்றோம்.

மிஷனெரி அண்ணன்மார்கள் திரு. பாபு ராஜ் & திருமதி. மேபல், திரு. சாலமோன் சங்கர், திரு. பால் தயாசிங், திரு. ஜெபராஜ், திரு. சஞ்சய் காந்தி யாவரும் எங்களுக்கு அதிக உதவிகளை செய்து, தங்குவதற்கு சிறந்த முறையில் ஏற்பாடு செய்து தந்தனர்.




இந்த மிஷனெரிப் பணித்தளப் பயணம் எங்கள் யாவருக்கும் வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவமாயிருந்தது. பெரியமலைப் பயணத்தை முடித்து விட்டு 27ஆம் தேதி இரவு 11.30 மணிக்கு சுகபத்திரமாக சென்னை வந்து சேர்ந்தோம். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

**திரு. A.P. கனகராஜ்,**
கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – அண்ணாநகர், சென்னை

GO INTO ALL THE WORLD AND PREACH THE GOSPEL TO ALL CREATION

**friends missionary prayer band**

Go or Send

To tend the olive shoots- the second generation believers

# WANTED Teachers

## WE ARE HIRING

**PASSIONATE AND QUALIFIED TEACHERS**

**School at Jharkhand (Pandeni)**
Mathematics / Hindi / History / PET

**School at Gujarat (Jhawda)**
Physics / Chemistry


### WHY JOIN US?

- It is an opportunity to serve our Lord Jesus Christ through your profession for a few years in your lifetime
- This is an investment for The Lord's Kingdom's sake in the life of young believers.
- An opportunity to transform communties by giving good education to them.

### WHO CAN APPLY

- A candidate who is born again and with a Missionary heart who are willing to stay on campus
- A candidate with good knowledge of the subject
- A candidate with a good communication skill in English

Join our team as we are involved in shaping the future of the children from the marginalised society!



**Salary for Teachers**

Any UG degree with BEd. - Rs.25000/-
Any PG degree with BEd - Rs. 27000/-

Send your Resume to the HRD

**hrd@fmpb.org**

*For further details please contact:* **FMPB,** 29, High School Road, Ambattur, Chennai 53. ☎ 044-26570404 / 26573353

# மிஷனெரி பிரதிஷ்டை




ஆண்டவரின் அளவற்ற கிருபையினால் ராணிப்பேட்டை இம்மானுவேல் BHEL-CSI ஆலயத்தில் 27.07.2025 ஞாயிறு அன்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 17 மிஷனெரிகளது அர்ப்பணிப்பு ஆராதனை அருட்திரு. பென்னி A. மைக்கேல் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வேலூர் பேராய ஆயர்கள் கலந்துகொண்டு பிரதிஷ்டை ஆராதனையை சிறப்பாக நடத்தினார்கள். அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். தேவ செய்தியை இயக்க பொதுச் செயலாளர் அருட்திரு. விஜய் P. ஐசக் அவர்கள் வழங்கினார்கள். இதில் கலந்துகொண்டு சிறப்பித்த மண்டல & பிராந்திய செயலர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறோம். அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்த திருச்சபை செயலர் திரு. A.G. பிரணேஷ் குமார், பொருளர் திரு. S. அன்பு ராஜன் மற்றும் திருச்சபையினர் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். மேலும் இப்பிரதிஷ்டையில் கலந்துகொண்டு சிறப்பித்த மிஷனெரிகளைத் தாங்கும் குடும்பத்தினர், ஜெபக்குழு தலைவர்கள் & பங்காளர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. இம்மானுவேல் எபிநேசர்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – ராணிப்பேட்டை,

# ஆலய பிரதிஷ்டை



ஜார்கண்ட் மாநிலம், சுந்தர் பஹாடி பணித்தளத்திலுள்ள ராஜ்பிட்டா கிராமத்தில் **எல்ஷடாய்** என்ற ஆலயத்தை பெங்களுரைச் சேர்ந்த திரு. K. சுந்தர் ராஜன் அவர்கள் குடும்பமாக பொருளுதவி செய்து கட்டிக் கொடுத்தார்கள். இந்த ஆலயத்தை 12.07.2025 அன்று தேவநாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். திரு. எஸ். கே. தாமஸ் (சொத்து பாராமரிப்பு துறை, செயலர்), திரு. தேவ சீலன் (பொறியாளர்), திரு. டேனியேல் தனசிங் (மிஷனெரி) மற்றும் சுதேச ஊழியர்கள், NSM ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் அனைவரும் கலந்துகொண்டு பிரதிஷ்டை ஆராதனையை சிறப்பித்தனர். தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

**திரு. M. மனோகரன்,** கௌரவ பிராந்திய முன்னேற்றப்பணி செயலர் – சூளைமேடு)

# உத்தம தலைவன்

தலைவன் = தலை+அவன்
தன் பின்னவருக்கு தானே
தலையானவன்.
தன்னலம் இல்லாதவன்
தனக்குப் புகழ் தேடாதவன்.
தனித்து இயங்காதவன்
தன் தலைகொடுத்து பிறன்
தலை காப்பவன்.

தாழ்மையை தரித்தவன்
தண் மனம் கொண்டு
தாழ்ந்தோரை மீட்பவன்.
தனக்காக வாழத் தெரியாதவன்
தாழ்ந்தோரை எப்பொழுதும் மறவாதவன்.

பொய்மைக்கு எதிரானவன்
புகழுக்கு மயங்காதவன்.
அன்புக்கு குடிலானவன்
அகம் புற சுத்தத்திற்கு சொந்தமானவன்.
ஏழைக்கு இரங்குபவன்
ஏறி வந்த படியை மறவாதவன்.

பயம் காணாதவன்
பாவ சுகத்திற்கு மயங்காதவன்.
இருமனம் இல்லாதவன்
இயேசுவுக்குப் பிரியமானவன்.
குணத்திலே கோபுரமானவன்
கொடுஞ்சொல் வார்த்தைக்கு
தூரமானவன்.

எளிமையானவன்
ஏனையோருக்குப் பிரியமானவன்.
அன்புக்கு அடிமையானவன்
ஆசைக்கு தூரமானவன்.
உண்மைக்கு சொந்தமானவன்
உலக வாழ்வுக்கு விலக்கானவன்

மந்தைக்கு மேய்ப்பனானவன்
மாதிரி வாழ்வுக்கு சின்னமானவன்.
தோல்வி கண்டு துவளாதவன்
தோழர் நலனுக்கு பொறுப்பானவன்.
தீது நினையாதவன்
தீயோர் வழி செல்லாதவன்.

நேரானவன்
நேர்மைக்கு இலக்கணமானவன்.
சுத்தமானவன்
சுரண்டலுக்கு நெருப்பானவன்.

திறப்பிலே நிற்பவன்
தியாக மனம் கொண்டவன்.
கலப்படம் இல்லாதவன்
கண்ணியம் காத்து நடப்பவன்.

தரிசன புருஷனானவன்
தரணி மாந்தர் இயேசுவைக்காண
தாகம் நிறைந்தவன்.

**– பிரபாகரன்**



# மிஷனெரி பிரதிஷ்டை



2025 ஜூலை 13ஆம் தேதி அன்று திண்டுக்கல், சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயத்தில் நடைபெற்ற குடும்பக் கூடுகையில் ஆலய குருவானவர் அருள்திரு. ஸ்டான்லி ஜெயராஜ் அவர்களால் நமது மிஷனெரிகள் நான்கு பேர் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். மத்தியப்பிரதேசத்தில் பணி செய்யும் நமது மிஷனெரி அருள்திரு. கோபி கிருஷ்ணன் பணித்தள ஊழியத்தைப் பகிர்ந்து கொண்டார். மேலும் அருள்திரு. ஜி. கிங்ஸ்லி தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார். இக்குடும்பக் கூடுகையில் 600க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இவர்கள் பணித்தளத்திலுள்ள 50 கிராமங்களில் திரைப்பட ஊழியம் செய்ய தேவையான நிதியை உற்சாகத்துடன் கொடுத்து உதவினர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அருள்திரு. ஆல்பர்ட் சாமுவேல்,** விரிவுப்பணி – திண்டுக்கல்

# மகிமைக்குள் பிரவேசித்தார்



கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பகுதியைச் சார்ந்தவர் திரு. கே.பி. ஜாண் சைலம் அவர்கள். 1994ஆம் ஆண்டு அருள்திரு. ஐ. மெயின்ராஜ் அவர்கள் மூலமாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் அறிமுகமாகி இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டு ஜெபக்கூடுகையில் சாட்சிப் பகிர்ந்து வந்தார். ஏற்கனவே அரசியல் மேடையில் சிறந்த பேச்சாளராக இருந்தபடியால் சிறிய ஸ்கேன் கூடுகைகளில் பேச்சாளராக செயல்பட்டார். பின்பு கன்னியாகுமரி மாவட்டத்தின் ஸ்கேன் ஒருங்கிணைப்பாளராக இருந்து தலைவர்களை சந்திப்பது, உண்டியல் விநியோகிப்பது என இணைந்து செயல்பட்டார். அடிக்கடி பணித்தள விஜயம் செய்து ஆத்தும பாரத்தையும், தூர தரிசனத்தையும் பெற்றுக்கொண்டு மிகவும் தீவிரமாக உதவி செய்து வந்தார். குடும்பத்தின் சார்பாக மிஷனெரியைத் தாங்கியும், அப்பகுதி காணிக்கைகளை மக்களிடம் பெற்று பிரதிமாதம் தலைமை செயலகத்திற்கு அனுப்பியும் வந்தார். மாநில முகாம் நடைபெறும் போது ஒழுக்கம் கடைபிடிப்பதில் முக்கிய பொறுப்பு வகிப்பவர். ஊழியர்களை நேசித்து, உபசரிக்கும் கிருபை பெற்றவர். நீதி, நேர்மை மற்றும் தைரியம் கொண்டவர். சமீபகாலமாக பெலவீனப்பட்டு பின்பு சுகம்பெற்று ஜெபக்குழுக்களை நடத்த ஆரம்பித்தார். 11.06.2025 அன்று தனது 76வது வயதில் தேவ ராஜ்யம் சென்றடைந்தார். அண்ணன் விட்டுச் சென்ற அவரது துணைவியார், இரண்டு மகன்கள் குடும்பம், பேரப்பிள்ளைகள் அனைவரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**அருள்திரு. ஆல்பின்,** பிராந்திய செயலர் – கன்னியாகுமரி.

**செப்டம்பர் 1 திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வின்செண்ட் பிரேம்ராஜ்

## ஜம்மு

### உதம்பூர்:

### அருண்காந்தா & ரேணு காந்தா

**துதிக்க:** நித்து தேவி, புஷான் குமார், சோகன்லால், பவன்குமார் ஆகியோர் புதிதாக ஆராதனையில் பங்குபெற்று வருகின்றனர். ஆறு பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். சிர்லா மற்றும் சக்பக்தா கிராமங்களில் சிறுவர் வகுப்புகள் தடையின்றி சிறப்பாக நடைபெற்றது. எதிர்ப்புகள் மற்றும் போராட்டங்கள் மத்தியிலும் தேவன் விசுவாசிகளையும், ஊழியர்களையும் பாதுகாத்த கிருபைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரீட்டா தேவியை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; சிகிச்சை பலனின்றி ஒரு மாதமாக வயிற்று வலியினால் துன்புறும் 7 வயது பவன்குமாரை தேவன் குணப்படுத்த; வரும் நாட்களில் நடைபெறவுள்ள அனைத்து ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதிக்க; பில்லி சூனியத்தினாலும், அசுத்தாவியின் கட்டுகளினாலும் அவதியுறும் மக்களை தேவன் விடுவிக்க; பகத் இனத்தைச் சேர்ந்த நீத்து தேவியை தேவன் குணப்படுத்தவும், அவரது குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவும் ஜெபிப்போம்.

### அக்னூர்: பித்யுத் குமார் சிங் & சுசித்ரா லிம்மா

**துதிக்க:** கோட் ஆலயத்தில் நடைபெற்ற சத்சங் கூட்டத்தில் அநேகர் கலந்துகொண்டு சுவிசேஷம் கேட்டனர். மாரடைப்பிலிருந்து நிஷாவை அற்புதமாய் தேவன் பாதுகாத்தார். நீண்ட நாட்கள் ஜெபத்தின் பலனாக டேனியேல் தன் வாழ்வாதாரத்திற்கு ஆட்டோ ஒன்று வாங்கிட தேவன் உதவி செய்தார். வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் முதன்முறையாக அநேகர் நற்செய்தி கேட்கும் வாய்ப்பை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜம்மு பகுதியில் சுவிசேஷம் அறிவிக்க திறந்த வாசலை தேவன் கட்டளையிட; விசுவாசிகளின் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க தாகமுள்ளோரை தேவன் எழுப்ப; மந்திரவாதிகளையும், மூதாதையினரையும் நம்பி பின்பற்றுவோர் மெய்யான தேவனை கண்டறிய; தன் கணவனை இழக்கக் கொடுத்துள்ள தன்யாவையும் மற்றும் அவரது இரண்டு குழந்தைகளையும் தேவன் ஆறுதல்படுத்த; புதிய மொழியையும், கலாச்சாரத்தையும் விரைவில் கற்றுக் கொள்ள நமது மிஷனெரிகளுக்கு தேவன் ஞானம் அருள ஜெபிப்போம்.

## செப்டம்பர் 2 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அஞ்சனா மஸிஹ் சத்ய பிரகாஷ்

### நெளஷேரா:

**ஷேக் சுபானி & எமி பாக்கியா**

**துதிக்க:** வாலிபர் கூட்டத்தில் கலந்துகொண்டோர் தங்களுடைய வாழ்க்கையை தேவனுக்கு அர்ப் பணித்தனர். கானியா கிராமத்தின் புதிய தொடர்பாளரின் ஜெபத்தைக்கேட்ட தேவன் அவரது வறுமை நீங்கவும், வீடு கட்ட அரசு உதவி கிடைக்கவும் கிருபை செய்தார். விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிய பிங்கிதேவி மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளார்; பள்ளி கிராம ஆராதனையில் புதிதாக இரண்டு குடும்பங்கள் உற்சாகத்துடன் கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நரம்பு பிரச்சனையினால் நாளுக்கு நாள் உடல் நிலை மோசமாகிக் கொண்டிருக்கும் மிண்ட்ரோ தேவிக்கும், இதயப் பிரச்சனையினால் அவதியுறும் சுந்தரிக்கும் தேவன் பூரண சுகமருள; அரசு மருத்துவமனையின் அலட்சியத்தினால் அஞ்சலி மற்றும் அவரது பச்சிளம் குழந்தையின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தேவன் அற்புத சுகமருள; முரட்டாட்டம் உள்ள மகனால் பிரிந்து வாழும் மனோகரின் குடும்பம் மீண்டும் இணைந்து வாழ; கவிதா, ஹிமாங், ஆகாஷ், சாஹில், சாந்தினி ஆகியோர் தேவனை அறிக்கையிட இருக்கும் தடைகள் நீங்க ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### கர்சோக்:

**பவன் குமார் & பிரபாஷினி தேவி**

**துதிக்க:** வயிற்றுப் பிரச்சனையினால் மருத்துவமனைக்கு சென்ற விசுவாசி சம்பாவுக்கு ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் மருத்துவ அறிவியலால் கண்டுபிடிக்க முடியாத சிக்கல் காணப்பட்டது. சபையார் அவருக்காக ஊக்கமாக ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகமருளினார். அசுத்தாவியின் தொந்தரவினால் இரவில் தூங்க முடியாமல் கூச்சலிட்டு கொண்டிருந்த தக்ஷ் என்பவர் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். கர்த்தரைவிட்டு பின்வாங்கிய சப்னா மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளார். வாழ்வில் அநேக போராட்டங்களை சந்தித்து வந்தபோதிலும் சுனிதா விசுவாசத்தில் உறுதியாய் நிலைத் திருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சப்னாவின் மகன் ஆஷிஷின் வாயிலிருக்கும் புண்களை தேவன் குணப்படுத்த; விடுமுறை வேதாகம வகுப்பில் கலந்துகொண்ட பிள்ளைகள் அனைவரும் கர்த்தர் மீதான விசுவாசத்திலும், அன்பிலும் வளர; தக்ஷ் விசுவாசத்தில் வேரூன்றி வளர; விசுவாசத்தினிமித்தம் ஏற்படும் போராட்டங்களிலிருந்து சுனிதா பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.




*உபவாச ஜெபநாள்*

புதன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜேம்ஸ் ஏகலைவன் K.
திருமதி. சிங் கோயி கிம் கின் சாவ்ம்

## ராம்பூர்:
### தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** தக்லெக் சபை விசுவாசி யான ராம்லால் சமையல் செய்து கொண்டிருந்தபோது குக்கர் வெடித்தபோதிலும் தேவன் அவரை அற்புதமாய் பாதுகாத்தார். மோகன் லாலின் மகன் வினோத்தின் அப்பெண்டிக்ஸ் வெடிக்கும் நிலையில் இருந்ததை சரியான நேரத்தில் அறுவை சிகிக்சை மூலம் குணப்படுத்த தேவன் உதவி செய்தார். எட்டு கிராமங்களில் நற்செய்தி பகர தேவன் உதவி செய்தார். 5 வயது அரோஹிய்க்கு அப்பெண்டிக்ஸ் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது. ஆலயம் கட்ட தனது நிலத்தை தானமாக தர முன்வந்துள்ள பாவ்தீப்க்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலாதேவியின் பித்தப்பை அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற; புதிய தொடர்பாளர்கள் விசுவாசத்தில் வேரூன்றி வளர; தேவனை அறிக்கையிட தடையாக இருக்கும் சமுதாய பயங்கள் நீங்க; ஆவேரி பகுதியில் ஆலயம் கட்டுவதற்கு உள்ளூர் தலைவர்களின் ஒப்புதல் கிடைக்க; மிஷனெரி மகன் ஜோயலின் கண் அறுவை சிகிச்சையில் தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

## ரிகாங்பியோ:
### சங்கர் ஏ. & ரூத் மேரி

**துதிக்க:** விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போருக்கான பயிற்சி கூடுகை சிறப்பாக நடைபெற்றது. ஹரி என்பவர் மறுமலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளார். நிலச் சரிவினால் ஏற்பட்ட விபத்தில் சிக்கிய நமது விசுவாசிகள் நிர்மலா,பிரகாஷ், பகத்சந்த் ஆகியோரை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். அமித்பட்சாரி மற்றும் ராஜின் குடும்பத்தினர் தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்து கொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியினால் தாக்கப் பட்டு தன் சொந்த தாயை கொலை செய்ய முயற்சித்த திலீப் குமார் (26 வயது) அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவனால் விடுதலைபெற; வீணா மற்றும் சுவார்திக்கு சுகப்பிரசவத்தை தேவன் தந்தருள; குதிகாலில் காயம் ஏற்பட்டு நடக்கயியலாமல் அவதியுறும் ராம் பியாரியை தேவன் குணப்படுத்த; பிரகாஷ் மற்றும் லூங்கோஹோ தங்கள் அர்ப்பணிப்பில் உறுதியாய் நிலைத் திருக்க ஜெபிப்போம்.

## செப்டம்பர் 4 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மலங்மெய் சனாலுங் டிட்டுங்பெள

# பஞ்சாப்

## அஹ்மத்கட் மண்டி:

### கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா

**துதிக்க:** கொங்கான்வோர் மற்றும் தரியாபூர் கிராமங்களில் வெளிப்புற சுவிசேஷத்தின் மூலம் அநேகர் முதன்முறையாக நற்செய்தி கேட்டனர். மூன்று பேர் திருச்சபையில் இணைந் துள்ளனர். ஆறு குடும்பங்கள் புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். வயிற்றுப் போக்கினால் ஆபத்தான நிலையிலிருந்த மூன்று வயது மீனாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். சொக்தாலிக்கு பில்லி சூனிய கட்டு களினால் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டபோது அவரது விசுவாசமுள்ள ஜெபத்தினால் மீண்டும் வியாபாரம் செழிக்க தேவன் கிருபை செய்தார்.

**ஜெபிக்க:** நான்கு கிராமங்களில் நடைபெறவுள்ள வெளிப்புற ஊழியத்தை தேவன் ஆசீர்வதிக்க; 12 வயது அர்ஜுனின் கண் பிரச்சனையை தேவன் குணப்படுத்த; ராஜ்கோட் சபை விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் வளர; சருமநோயினால் பாதிக்கப்பட்டுள்ள பர்ரே ராணியை தேவன் குணப்படுத்த; கணவனால் கைவிடப்பட்டு தன் இரண்டு குழந்தைகளுடன் தனிமையில் கஷ்டப்படும் பீனாவின் மன சமாதானத் திற்காகவும், அவரது கணவர் மனந் திரும்பி பீனாவுடன் இணைந்து வாழவும் ஜெபிப்போம்.

### புத்லாடா: பிரதாப் ரஹறாங் & ரேஷ்மி

**துதிக்க:** நான்கு கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் அநேகர் சுவிசேஷம் கேட்கும் வாய்ப்பை பெற்றனர். தன்னார்வ ஊழியர் தாமஸ் தன்னை முழுநேர ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்தி வருகிறார். கடுமையான மாரடைப்பிலிருந்து குல் தீப்பின் ஜீவனை தேவன் பாதுகாத்தார். சோமா ராணியின் ஜெபத்தைக் கேட்ட தேவன் அவரது மகனின் திருமணம் ஆசீர்வாதமாய் நடைபெற கிருபை செய்தார். பல்பின்தர் சிங்கின் குடும்பப் பிரச்சனையை நீக்கி சமாதானம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்திண்டா, கோனியானா, சபோக்கே, தல்வான்டி, பாய்பக்தா ஆகிய கிராமங்களில் ஊழியத்தை விரிவு செய்ய புதிய சுதேச ஊழியர்களை தேவன் தந்தருள; ராஜாசிங், ஹர்மான், பாகி ஆகியோரின் குடும்பத்தினர் மனந் திரும்பி கர்த்தரை ஏற்றுக்கொள்ள; அசுத்தாவியின் பிடியிலிருந்து ஹப்பி சிங் மற்றும் பூஜாராணியை தேவன் விடுவிக்க; தன்னிடம் பணம் வாங்கி ஏமாற்றியதால் மன அழுத்தத்திலிருக்கும் குர்பிரீத் சிங்கின் பணம் திரும்ப கிடைக்க; அசாத் போதை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற; ஆகாஷ் தீப், ஆர்ஷ் தீப், மகேந்திர சிங்கின் குடும்பத்தினர் யாவரும் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய ஜெபிப்போம்.

## செப்டம்பர் 5 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எசக்கியா R.
திரு. தர்மேந்திரா பரிச்சா

### மால்வா பிராந்தியம்:

**ராஜேந்திரன். ஜே & ஹேனா மேரி ஸ்லெஸ்ஸர்**

**துதிக்க:** மோகா பணித்தளத்திலுள்ள இன்ட்காட், கிஷான்புரா ஆகிய புதிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டன. காசா, நாத்துபுரா, காந்திநகர் ஆகிய கிராமங்களில் சிறிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். காசா பகுதியில் ஆராதனை நடத்த ஏற்ற இடத்தை தேவன் தந்தருளினார். அசுத்தாவியின் பிடியிலிருந்து சுக்கேந்தர் சிங்கின் மனைவிக்கும், சுக்வீர் கௌருக்கும் தேவன் விடுதலை அருளினார். உடல் வீக்கத்திலிருந்து பிந்துவுக்கும், ஒற்றைத் தலைவலியிலிருந்து சிந்தேருக்கும் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மோகா பணித்தளத்தில் சிறுவர் மேம்பாட்டு மையம் அமைக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் வாய்க்கச் செய்ய; தோல் பிரச்சனையிலிருந்து நிக், பக்கவாதத்திலிருந்து ராணி கௌர், 20 வருடமாக நடக்க முடியாமலிருக்கும் கிரண் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; விசுவாசிகளின் மத்தியில் போதைப் பொருள் வியாபாரம் செய்யும் பரம்ஜீத் மனந்திரும்பி தன் தீய தொழிலை விட்டுவிட; தவறான போதனைகளினால் விசுவாசிகளை குழப்பும் உள்ளூர் போதகர்களிடமிருந்து நமது விசுவாசிகளை தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

**நானக்மட்டா: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்**

**துதிக்க:** அங்கீதா, வினய் மற்றும் அமித் ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் நல்ல வேலையை தேவன் அருளினார். கடுமையான இடுப்பு வலியினால் கஷ்டப்பட்டு வந்த அம்ரித் சிங் விசுவாசமுள்ள ஜெபத்தினால் சுகம்பெற்றார். நிமோனியா பாதிப்பினால் ஆபத்தான நிலையிலிருந்த ஏஞ்சல் ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றாள். கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்குப் பின் வீக்கத்தினால் அவதிப்பட்ட சங்கீதாவுக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குருத்துவாரா கமிட்டியினரின் அச்சுறுத்தலினால் ஹராயா கிராமத்து விசுவாசிகள் ஆராதனையில் கலந்து கொள்ள மறுப்பதோடு, தங்கள் வேதாகமத்தை திருப்பி கொடுத்துள்ளனர். எதிர்ப்போர் மனந்திரும்பி தேவனின் அன்பினால் தொடப்பட; பில்லி சூனிய கட்டுகளினால் பாதிக்கப்பட்டுள்ள திலார் சிங் குடும்பத்திற்கு தேவன் விடுதலை அருள; பலவித உடல் உபாதைகளால் துன்புறும் மிஷனெரியின் மனைவிக்கு தேவன் பூரண சுகமருள; டியோரி கிராமத்தைச் சேர்ந்த சபை மூப்பர் சத்வீர் சிங் மரித்ததால் அங்கு நடைபெற்று வந்த ஆராதனைக்குழு அவரது குடும்பத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளது. தேவன் அக்குடும்பத்தினரின் உள்ளத்தில் கிரியை செய்யவும், மீண்டும் ஆராதனை நடைபெறவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஷைக் சுபானி

## திநேஷ்பூர்:

**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** பொய் வழக்கில் கைது செய்யப்பட்டிருந்த தேஜாபைஜியா கிராமத்தின் குல்வந்த் மற்றும் மக்கான்சிங் இருவரும் தங்கள் குடும்பத்தினரின் ஊக்கமான ஜெபத்தின் மூலம் விடுவிக்கப்பட்டனர். விசுவாசியின் மகன் லவ்பிரீத் சிங் வாகன விபத்தில் சிக்கி, வாகனம் நொறுங்கிப்போன நிலையில் அவருக்கு காயம் ஏற்படாதபடி தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். தர்மபாய் தன் வாழ்வாதாரத்திற்காக கடை ஒன்றினைத் திறக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேஜாபைஜியா கிராமத்தில் தொடர்ந்து ஆராதனை நடத்த நிரந்தர மான இடத்தை தேவன் தந்தருள; இக்கிராமத்தில் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு தற்போது ஜெபக் கூட்டத் திற்கு வரும் முக்தார் சிங் பூரண குண மடைய; தொண்டையிலுள்ள கட்டியினால் சாப்பிட கஷ்டப்படுகிற 10 வயது அககுஸ் குணமடைய; விபத்தினால் ஏற்பட்ட காயத்திலிருந்து அமர்பீட் சிங் விரைவில் குணமடைய ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## தபுக்காரா:

**ராஜம்மாள் ஜான்சன், டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி**

**துதிக்க:** வேத வசனங்களை போதிக்கவும், வேதபாட வகுப்புகளை நடத்தவும் சபை மூப்பர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. மின்சார தாக்குதலிலிருந்து ரவீந்தரை அற்புதமாய் தேவன் பாதுகாத்தார். அநேக தடைகளின் மத்தியிலும் வேத பாட வகுப்புகளை நடத்த தேவன் உதவி செய்து வருகிறார். ஈஸ்வர் சிங் அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலைப் பெற்றார். கீழே விழுந்ததில் கடுமையான காயங்கள் ஏற்பட்ட சீமாவின் கணவருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளியதால் அவரது குடும்பம் கர்த்தரை விசுவாசித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மெக்வால் இன மக்கள் கிறிஸ்துவின் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; ஊழியத்திற்கு இடையூறு விளைவிக்கும் மதவாத இயக்கங்களை சார்ந்தோர் மனந்திரும்ப; விபத்தில் தலையில் ஏற்பட்ட இரத்தகட்டியினால் பாதிக்கப்பட்டுள்ள சோனுசிங்கிற்கு தேவன் அற்புத சுகமருள; குடிப்பழக்கத்தி லிருந்து பிரிஜ் மோகனுக்கு தேவன் பூரண விடுதலை அருள; கிஷான் சிங்கிற்கு ஏற்ற கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; சமாதானத்தை இழந்துத் தவிக்கும் நீம்சந்த் தேவனின் அன்பினால் தொடப்பட; கைர்த்தால் மாவட்டத்தில் கிறிஸ்தவர்களே இல்லாத மூன்று தாலுக்காக்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்தருள ஜெபிப்போம்.

## செப்டம்பர் 7

ஞாயிறு

### உதய்பூர்: ஆஷிஷ் குமார் & சவிதா தேவி, பிஜுலால் & ஸ்டெஃபி

**துதிக்க:** மூன்று புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். 15 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். வசலா மற்றும் லோடிமட்ரி ஆகிய கிராமங்களில் விசுவாசிகளின் முகாம் நடத்தவும், மேலும் நான்கு கிராமங்களில் பெண்கள் கூடுகை நடத்தவும் தேவன் உதவி செய்தார். பிசாசின் பிடியிலிருந்து ரமிளா, ஹக்ரி, சர்தா ஆகியோருக்கு தேவன் பூரண விடுதலை அருளினார். சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்த தாரா மற்றும் அருனாவை தேவன் குணப்படுத்தினார். பர்னிக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்து ஆசீர்வதித்தார். லக்ஷ்மண் மற்றும் பிஞ்சு குடும்பத்தினர் புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜஸ்தானில் வாழும் பீல் இன மக்கள் தேவனுடைய விசுவாசத்தில் வேரூன்றி வளர; காச நோயினாலும், இரத்த சோகையினாலும் பாதிக்கப்பட்டுள்ள சுஷில் கோத்ராவுக்கு தேவன் பூரண சுகமருள; கருச்சிதைவினால் மனசோர்வுற்றுள்ள சோனியா, லீலா, நீனா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; சுந்தர், பாகு, ஜலாம், சிவா, பிம்ராஜ் ஆகியோர் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; கடன், குடிப்பழக்கம் மற்றும் தீயப் பழக்கங்களிலிருந்து பிரேம் சந்திராவுக்கு தேவன் விடுதலை அருள; பாலசியா மற்றும் கோகுண்டா தாலுக்காக்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்தருள; போர்மால் மற்றும் காலிவாஸ் கிராமங்களில் வாழும் நமது விசுவாசிகளை துன்புறுத்தும் மதவாத குழுக்கள் மனந்திரும்பவும், விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், தேவனின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

## டெல்லி

### பட்பர்கஞ்ச்: ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்

**துதிக்க:** மூன்று புதிய தொடர்பாளர்கள் ஆலய ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். தங்கள் உறவினர் மற்றும் அண்டை வீட்டாரால் எதிர்ப்புகளை சந்தித்த போதிலும் சந்திராவதி மற்றும் சாவித்ரி குடும்பத்தினர் விசுவாசத்தில் உறுதியாக உள்ளனர். பெரிய விபத்தில் சிக்கிய சுதாவை சிறு காயங்களுடன் தேவன் தப்புவித்தார். வாலிபர் மற்றும் இளம் வாலிபர்கள் தங்கள் ஜெபக்குழுக்களில் உற்சாகத்தோடு பங்கு பெற்று ஜெபித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திரிலோக்புரி ஆலய தெருக்களில் இடையூறு விளைவித்து வரும் வாலிபர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட வாஞ்சையாயிருப்போருக்கு தங்கள் உறவினர்கள் மூலம் வரும் எதிர்ப்புகள் மறைய; ஆலய ஆராதனைகளில் சகோதரர்களும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு தேவனை ஆராதிக்க; அசுத்தாவியின் பிடியினால் அவதியுறும் அன்மோல், ஷாலு அருண் ஆகியோரை தேவன் விடுவிக்க; ஜெபத்தின் மூலம் இராணுவத்தில் வேலை கிடைக்கப்பெற்றுள்ள மனீஷ் தன் குடும்பத்தினருடன் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

செப்டம்பர்
8
திங்கள்

## உத்தரப்பிரதேசம்

**ரணியா: அனில் குமார் & கவிதா**

**துதிக்க:** மிஷனெரிகள் தங்கள் விடுமுறை முடித்து பத்திரமாய் மீண்டும் பணித்தளம் வந்து சேர தேவன் உதவி செய்துள்ளார். ஏழு பேர் புது வாழ்வு பெற்று சபையில் இணைந்தனர். இரவுப் பணியில் ஈடுபட்டிருந்த விசுவாசி அமித்தின் கை தவறுதலாக இயந்திரத்தில் சிக்கியது, ஜெபம் மற்றும் சிகிச்சையின் மூலம் விரைவில் குணமடைய செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாய் புற்றுநோயினால் வேதனை அனுபவித்து வரும் புதிய விசுவாசி நரேந்தர் என்பவருக்கு தேவன் பூரண சுகமருள; அசுத்தாவியினாலும், மனநல பிரச்சனையினாலும் பாதிக்கப்பட்டுள்ள சங்கீதா மற்றும் தயாவுக்கு தேவன் பூரண விடுதலையும், சுகமும் அருள; மிஷனெரி கவிதாவின் வயிறு மற்றும் விலா எலும்புகளில் காணப்படும் வலிகள் நீங்கி சுகம்பெற ஜெபிப்போம்.

**பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர்**

**துதிக்க:** இரண்டு வருடங்களாக அசுத்தாவியின் கட்டுகளினால் அவதியுற்ற பச்பேடா கிராமத்தைச் சேர்ந்த அமனுக்கு தேவன் பூரண விடுதலை அருளினார். சஞ்ஜீவ் குமார் கால் வலியிலிருந்தும், பியூஸ் சின்னம்மை நோயிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். சமையல் செய்யும் வேளையில் திடீரென குக்கர் வெடித்தபோது எவ்வித ஆபத்துமின்றி மஞ்சுவை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சப்பேரா சமுதாயத்தைச் சேர்ந்த சிறுவர்கள் கல்வி அறிவு பெற சிறுவர் மேம்பாட்டு மையம் அமைக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; சுதேச ஊழியர் ஷியாம் சுந்தர் மேலுள்ள வழக்கு மற்றும் மெகனா ஆலய சம்பந்த வழக்கு விரைவில் முடிக்கப்பட; சுமன், சவிதா, ரூபி, கம்பூட் ஆகியோருக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; குழந்தை பாக்கியத்திற்காக ஏக்கத்தோடு ஜெபித்து வரும் மனிஷா, மது, மம்தா, பிரியங்கா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; கமினி, சந்தியா, கோலு ஆகியோருக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் அருள; எதிர்ப்பினிமித்தம் தடைசெய்யப்பட்டுள்ள மடோக் கிராம ஆலய ஆராதனை மீண்டும் ஆரம்பிக்கப்படவும், எதிர்ப்போர் மனந் திரும்பவும் ஜெபிப்போம்.

## வானத்தின் மதகுகளைத் திறந்த தேவன்

*மஹாராஷ்டிரா மாநிலம், பெயிண்ட் பணித்தளத்திலுள்ள ஒரு சிற்றூர் கரஞ்ச் பானா. மழைக்காலத்தில் சுற்று வட்டாரங் களில் நல்ல மழை பெய்துகொண்டிருந்த வேளையில் கரஞ்ச்பானா பகுதியில் சிறிதளவு கூட மழை பெய்யவில்லை. கிணற்று நீரால் நடவு செய்யப்பட்டிருந்த பயிர்கள் நீரில்லாமல் வாடிப்போக ஆரம்பித்ததினால் விசுவாசிகள் அனைவரும் ஆலயத்தில் கூடி உபவாசித்து தேவனை நோக்கி ஊக்கமாக ஜெபித்தனர். கிராமத்தினர் இதனை ஆச்சரியமாக பார்த்துக்கொண்டிருந்தனர். விசுவாசிகள் தங்கள் ஜெபத்தை முடிக்கும் வேளையில் தேவன் பெரும் மழையைக் கட்டளையிட்டார். அனைவரும் வயல்களில் வேலை செய்ய தேவனைத் துதித்து கொண்டே சென்றனர். கர்த்தரின் நாமம் கிராமத்தில் மகிமைப்பட்டது. அல்லேலூயா!*

## செப்டம்பர் 9 செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஏசுரெத்தினம் தியாகராஜன்
திரு. அனில்குமார் பிசோயி
திருமதி. ராணி சுகாந்தோ சிங்
திரு. ஜீவானந்தன் M., திரு. ரூபென் டுடு
திருமதி. ராந்தே நய்னாபேன் தேவ்ஜிபாய்

### பில்ஹோர்: லால் கிஷோர் முர்மு & மார்த்தா சோரேன்

**துதிக்க:** புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மீர்காவ் ஆராதனைக் குழுவில் 20 பேர் உற்சாகத்தோடு தேவனை ஆராதித்து வருகிறார்கள். பில்ஹோர் பணித்தளத்தில் சபை மூப்பர்கள் மற்றும் விசுவாசிகள் சுவிசேஷ ஊழியத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். பெலவீனப்பட்டிருந்த நமது விசுவாசிகளுக்கு ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆராதனையில் கலந்துகொள்வோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மீர்காவ் ஆராதனைக் குழு தடையின்றி தொடர்ந்து நடைபெற; 20 ஆண்டுகளாக குழந்தை பாக்கியத்திற்காக விசுவாசத்துடன் ஜெபித்து வரும் ராஜ்ராணி & ராமகாந்த் தம்பதியினரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

### கோண்டா சிறுவர் விடுதி: ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா சௌத்ரி

**துதிக்க:** நக்மாவுக்கு தேவன் ஆண் குழந்தையை தந்து ஆசீர்வதித்துள்ளார். ஜெபத்தின் மூலம் வித்யாராமின் மனைவி அர்ச்சனாவை தேவன் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலையாக்கினார். நமது விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கும், அயலகத்தாருக்கும் சுவிசேஷம் அறிவித்து வருகின்றனர். ஒரு குழந்தையை ஆதரித்து வரும் முன்னாள் விடுதி மாணவனுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலய ஆராதனைகளில் பங்குபெறும் நட் இன மக்கள் விசுவாசத்தில் வேரூன்றி வளர; நீதிமன்ற விசாரணையிலுள்ள நமது கோண்டா நில வழக்கு விரைவில் முடிக்கப்பட்டு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட; நமது விடுதி பிள்ளைகள் கல்வியிலும், ஆவிக்குரிய வாழ்விலும் செழித்து வளர; நமது விடுதியில் படிக்கும் பிள்ளைகளின் குடும்ப உறுப்பினர்கள் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; விடுதிப் பிள்ளைகள், மிஷனெரிகள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

### பாதுகாத்த தேவன்

*மத்தியப்பிரதேசம், பிண்ட் பணித்தளத்தில் விசுவாசி கன்வார் குடும்பம் வசித்து வருகின்றனர். இவர்கள் மறு சுழற்சி செய்யக் கூடிய கழிவுப்பொருட்களை சேகரித்து விற்று பிழைத்து வருகிறார்கள். ஒருநாள் ரிக்ஷாவில் குடும்பமாக பயணம் செய்துகொண்டிருந்தபோது எதிரே வந்த சமையல் எரிவாயு வண்டியின் மீது மோதியதில் இவரது ரிக்ஷா தலைக்கீழாக கவிழ்ந்தது. கன்வாரின் மனைவி வண்டியின் அடியில் சிக்கினார். மற்றோர் பயணி வீசி எறியப்பட்டு அதிக காயமுற்றார். சிலிண்டர்களை ஏற்றிவந்த வாகன ஓட்டுனர் அதே இடத்தில் இறந்துவிட்டார். தேவனின் பெரிதான கிருபையால் கன்வார் மற்றும் அவரது மனைவி எவ்வித காயமுமின்றி பாதுகாக்கப்பட்டனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## செப்டம்பர் 10

*உபவாச ஜெபநாள்*

புதன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சப்னா ஓம் பிரகாஷ்

### ஜின்ஜக்:

**பும்சோன்சின் & லுன்சிங்**

**துதிக்க:** எதிர்ப்புகளின் மத்தியிலும் புதிய கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கவும், ஒருநாள் கூடுகை, தேடுவோர் முகாம், பின்தொடர் ஊழியம் ஆகியவை நடைபெறவும் தேவன் கிருபை செய்தார். போலா நகர் ஆலயத்தில் நடைபெற்ற சபை மூப்பர்களுக்கான பயிற்சி, ஆத்தும ஆதாயக் கூடுகை பயனுள்ளதாக அமைந்தது. ஆறு பேர் இரட்சிக்கப்பட்டு திருச்சபையில் இணைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போலா நகர் ஆலயத்தில் பழுது வேலைகள், சுற்றுச்சுவர் பணிகள் முடிக்க போதுமான நிதித் தேவையை தேவன் சந்திக்க. அடிக்கடி எதிர்ப்புகளை சந்தித்து வரும் நமது விசுவாசிகள், ஊழியர்கள், சுதேச ஊழியர்கள் யாவரையும் தேவன் பாதுகாக்க; அவ்வப்போது வரும் கடினமான சூழ்நிலைகளை கையாள தேவன் ஊழியர்களுக்கு ஞானத்தையும், விவேகத்தையும் அருள; ரூரா ஆலயத்திற்கு மின் இணைப்பு பெறுவதற்கு சபை மூப்பர் ஒருவரின் உத்தரவாதம் கிடைக்கவும், விரைவில் மின் இணைப்புப் பெறவும் ஜெபிப்போம்.

### கான்பூர் பிராந்தியம்:

**மாங்வெய் ஃபோம் & நிஷா**

**துதிக்க:** எட்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மிர்காவ் கிராமத்தில் புதிய ஆராதனைக்குழு துவங்க தேவன் கிருபை செய்தார். மிஷனெரி சமரேந்திரா சிங் குடும்பம் துண்ட்லா பணித்தளத்தில் தங்கள் ஊழியத்தை ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். முனுலால் பக்கவாதத்திலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். பிசாசின் பிடியிலிருந்து ஷியாம் குமாருக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உபத்திரவத்தினிமித்தம் சிறைசாலையிலிருக்கும் சுதேச ஊழியர் தரம்வீர் மற்றும் புதிய விசுவாசிகள் விஜய்சிங், சர்வன், மஹாவீர் ஆகியோர் விரைவில் விடுதலைபெற; பைசோலி ஆலயத்தில் நடைபெறும் ஆராதனைக்கு காவல் துறையினர் மூலம் வரும் எதிர்ப்புகள் மறைய; போலாநகர் ஆலயத்தில் பழுது பார்க்கும் வேலை விரைவில் முடிவடைய; 20 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் ராமகந்த் குடும்பம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட; எதிர்ப்புகள் மத்தியிலும் அலிகஞ்ச் பகுதியிலுள்ள விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க ஜெபிப்போம்.

## செப்டம்பர் 11 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கஷிலி எக்டோ சோபி
செல்வி. மெர்சி M.H. சுவாஸி

### சிக்கந்ரா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** விசுவாசிகள் தங்கள் நிலங்களில் நெல் மற்றும் பிற பயிர் வகைகளை பயிரிட போதுமான மழையை தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். வயலில் வேலை செய்துகொண்டிருந்த டோராப்பூர் கிராமத்தைச் சேர்ந்த ரஜினியை பாம்பு கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். சர்தா, குஷும் ஆகியோரை வியாதிகளிலிருந்து குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரஞ்சித், நீட்டா, கிஷான் லால் குடும்பம் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; சத்சங் கூடுகை நடத்தப்பட்ட சாலேம்பூர், கோஜாபூல், கௌரையபூர் கிராமங்களில் வசிக்கும் மக்களின் இருதயங்களில் தேவன் கிரியை நடப்பிக்க; விசுவாசிகளின் குடும்பப் பிரச்சனைகள் நீங்கி சமாதானத்துடன் வாழ; நடைபெறவுள்ள சபை மூப்பர் பயிற்சி, வாலிபர் மற்றும் விசுவாசிகளுக்கான பயிற்சி வகுப்புகள் மிகுந்த பலனைத் தர ஜெபிப்போம்.

# மத்தியப் பிரதேசம்

### பிண்ட்:

### ஜெபக்குமார் பி. & ஜெயந்தி கிரேஸ்

**துதிக்க:** சாலை விபத்திலிருந்து விசுவாசி ராம்வீர் மற்றும் கன்வார் குடும்பத்தை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். புதிய விசுவாசிகளுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். ஆலயத்தில் நடைபெறும் வேதபாட வகுப்பில் அநேகர் உற்சாகத்துடன் கலந்துகொள்கின்றனர். தேடுவோர் முகாம், இரவுக் கூடுகை ஆகியவை தடையின்றி சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இரைப்பை பிரச்சனையிலிருந்து ராம்வீருக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் நிவாரண உதவிகள் அரசாங்கத்தின் மூலம் தடையின்றி கிடைக்க; சுரஷ்டிதர்கபுரா கிராமத்தில் ஜெபக்குழு விரைவில் ஆரம்பிக்கப்பட; சமீர் & ராணி மற்றும் அந்திரியாஸ் & ரேணு குடும்பங்களில் தேவன் சமாதானத்தை அருளிச்செய்ய; லாஹோர் மற்றும் பூப் கிராமங்களில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள ஊழியர்களை தேவன் தந்தருள; தன் தந்தையை இழக்கக் கொடுத்துள்ள கமலேஷ் குடும்பத்தில் தேவன் ஆறுதலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## தடைகள் நீங்க

*ஒடிசா மாநிலத்தின் ஜஷிப்பூர் பணித் தளத்தில் ஹோ இன மக்கள் மத்தியில் தேவனுடைய கிருபையால் ஊழியம் விரிவடைந்து வருகிறது. கடந்த நாட்களில் மூன்று பேராயங்களில் காவல் துறை அதிகாரிகள் நமது விசுவாசிகளிடம் பலவித விசாரணைகளை நடத்தி வருகின்றனர். ஊழியத்திற்கு மிகவும் இடையூறாக இருக்கும் இவ்வாறான விசாரணைகளை தேவன் தடுத்து நிறுத்தவும், விசுவாசிகள் விசுவாசத்தில் வேரூன்றி வளரவும், ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும் பாரத்தோடு ஜெபிப்போம்.*

**செப்டம்பர்**

**12** வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேபல் கிறிஸ்டோபர்
திருமதி. இர்கார் ரேஷ்மா மாருதி

## கர்கோன்:

### பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா

**துதிக்க:** கடும் எதிர்ப்புகளின் மத்தியிலும் 15 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்துள்ளார். ஏழு பேர் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். விசுவாசிகள் மற்றும் சபை மூப்பர்களின் உதவியுடன் அநேக கிராமங்களில் பின்தொடர் பணி செய்யப்பட்டது. எட்டு நாட்களாக கால் வீக்கத்துடன் கஷ்டப்பட்ட மோத்திராம் உபவாச ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றார். ஒரு வருடமாக தொண்டை வலியினால் அவதியுற்று வந்த நர்சிங்பாய், கண் வலி மற்றும் வீக்கத்தினால் பாதிக்கப்பட்ட ஷாரு ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். ஷிலோடியா கிராமத்தின் நிஷாவுக்கு சுகப்பிரசவம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கால்களின் மேல் ஆசிட் கொட்டி பெரிய காயம் ஏற்பட்டு வேதனை அனுபவித்து வரும் மனீஷ் பாய்க்கு தேவன் அற்புத சுகமருள; கிறிஸ்தவ வாலிபப் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; மார்பக கட்டியிலிருந்து மங்லி, நெஞ்சு வலியிலிருந்து ஹரிமஞ்சி, கால் வலியிலிருந்து ராம் பியாரி ஆகியோரை தேவன் பூரணமாய் குணப்படுத்த; அசுத்தாவியின் கட்டுகளிலிருந்து நேகாவை தேவன் விடுவிக்க; அடிக்கடி மயக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிஸ்கு பாயின் ஒரு வயது குழந்தைக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

## தூல்கோட் & நேப்பா நகர்:

### கோபி கிருஷ்ணன் & மேனகா

**துதிக்க:** 11 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், அநேகர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யவும் தேவன் கிருபை பாராட்டினார். ஜாம்டி கிராமத்தில் எதிர்ப்பினிமித்தம் தடைப்பட்டிருந்த ஆலய ஆராதனை மீண்டும் துவங்கப்பட தேவன் உதவி செய்தார். ஜலாந்த்ரா கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய வேதபாட ஐக்கியத்தில் அநேகர் புதிதாக உற்சாகத்தோடு கலந்துகொள்கின்றனர். நான்கு கிராமங்களில் இயேசு திரைப்பட ஊழியமும், பம்லாபட் கிராமத்தில் சத்சங் கூடுகையும் நடத்த கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரமிளா, டட்டி, ராய்க்கு ஆகியோரை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; கால் வீக்கத்தினால் தூங்க முடியாமல் வேதனை அனுபவித்து வரும் காளி என்பவருக்கு தேவன் சுகமருள; பட்லேதானா, பம்லாபட், கூன்பேடா, பஜ்யாபட்டா, ரோக்டி, ஜிர்பன்கிரியா ஆகிய கிராமத்தினர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நான்கு கிராமங்களில் திட்டமிட்டப்படி சிறுவர் முகாம் தடையின்றி சிறப்பாய் நடைபெற ஜெபிப்போம்.

## செப்டம்பர் 13 சனி

# அஸோம்

### கோஹ்பூர்: நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** மோத்தியா சோராய்பரி என்ற புதிய கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். வாலிபர் கூடுகையில் சுமார் 45 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். இரண்டு கிராமங்களில் இரவுக் கூடுகைகளும், ஒன்பது இடங்களில் சிறுவர் வகுப்புகளும் நடத்த கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; தன்னார்வ ஊழியர்களும், சபை மூப்பர்களும் உற்சாகத்தோடு ஊழியத்தில் ஈடுபட; விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் அனுதினமும் வளர; ஜம்முகுரி கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயக் கட்டுமானப் பணிகளை தடைசெய்து, ஆலயத்தை இடிக்க திட்டமிட்டுள்ள எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி தேவனின் அன்பினால் தொடப்பட ஊக்கத்தோடு ஜெபிப்போம்.

# பீஹார்

### ராணிகஞ்ச்: ஆனந்தன் எம். & நிஷாதி

**துதிக்க:** ஜெபத்தைக் கேட்ட தேவன் சம்பு ராஜக் & சுப்ரா தம்பதியினருக்கு பெண் குழந்தையையும், சோட்டு ரிஷி குடும்பத்தினருக்கு ஆண் குழந்தையையும் தந்து ஆசீர்வதித்துள்ளார். பலுவா, சிம்மா, ராய்கா, சிக்னி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்ய தேவன் உதவி செய்துள்ளார். ரத்திகா குமாரியை டைபாய்டு காய்ச்சலிலிருந்து சுகப்படுத்தினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மஞ்சள் காமாலையினால் பாதிக்கப்பட்டுள்ள ராம்விலாஸ் ரிஷியின் மகள் அன்சிகா குமாரியை தேவன் குணப்படுத்த; கபையா கிராமத்தில் ஆராதனைக் குழு ஆரம்பிக்கப்பட; புரேனி கிராமத்திலிருந்து வேலை நிமித்தம் பஞ்சாபுக்கு சென்றுள்ள விசுவாசிகளின் சரீர, ஆவிக்குரிய பாதுகாப்பிற்காக; ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் மந்தோஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## *பரம வைத்தியர்*

*உத்தரகாண்ட் மாநிலம், நானக்மட்டா பணித்தளத்தில் புலி, சிறுத்தைகள் நிறைந்த ஆபத்தான காட்டு பகுதியில் அமைந்துள்ள எஸ்ஸாய் கிராமத்தில் வசித்து வருபவர் முக்கர். இவர் 15 ஆண்டுகளாக வலிப்பு நோயினால் அவதிப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபிக்கும்படி ஊழியர்களை அழைத்தனர். அவருக்காக ஜெபிக்க விசுவாசிகளும், ஊழியர்களும் சென்றிருந்த அந்நாளில் அவருக்கு ஐந்து முறை வலிப்பு ஏற்பட்டிருந்தது. படுக்கையில் இருந்த அவருக்காகவும், அவரது குடும்பத்தினருக்காகவும் மிகவும் பாரத்தோடு ஜெபித்தனர். அன்றிலிருந்து வலிப்பு நோய் அவரைவிட்டு நீங்கி பூரண சுகம் பெற்றார். முக்கரின் குடும்பம் தேவனை மகிமைப்படுத்தி சாட்சி பகிர்ந்து வருகின்றனர். தேவனுக்கே மகிமையும், கனமும் உண்டாகட்டும்.*

**செப்டம்பர் 14** ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் டேவிட் M.

# ஜார்க்கண்ட்

## அமலகாச்சி:

**கஜன் சம்பிரமரி & ரோஷிலா**

**துதிக்க:** தேவன் நல்ல மழையையும், சுவிசேஷத்திற்கு திறந்த வாசலையும் தந்து ஆசீர்வதித்துள்ளார். விஷப்பாம்பு கடித்து 12 நாட்களாக மருத்துவ மனையிலிருந்த லூக்கா மால்டோவின் மகளுக்கும், வியாதியினால் கடுமை யாக பாதிக்கப்பட்டிருந்த சபை மூப்பர் காபிரியேலின் மகன் சஞ்சய் மால்டோ வுக்கும் தேவன் அற்புத சுகமருளினார். உள்ளூர் மக்களைக் கட்டுப்படுத்தி, ஊழியத்தையும் தடுத்துவந்த குருஜாமா, டோக்லா, சிபு, லேண்டோ, கம்ப்லா, பாமோன், ஜீர்கா ஆகிய மந்திரவாதிகள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுகாதாரமற்ற பகுதியில் வாழ்வதால் மலேரியா, டைபாயிடு, மஞ்சள்காமாலை, காசநோய் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள நமது விசுவாசிகளுக்கு தேவன் பூரண சுகமருள; சாங்டங்கா கிராமத்திற்கும் பிரதான சாலைக்கும் இடையே நதி இருப்பதால் மழைக்காலத்தில் சாலைக்கு செல்ல மக்கள் சிரமப்படுகின்றனர். விரைவில் நதிக்குமேல் பாலம் அமைக்கப்பட; 12 வருடங்களுக்குப் பிறகு கருத்தரித்துள்ள சாமுவேலின் மனைவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; தர்ணி ஆலயத்தில் விசுவாசிகளின் மத்தியில் தேவன் ஒருமனப்பாட்டை கட்டளையிட; நோடி ஆலய ஆராதனையை நடத்த அர்ப்பணிப்புள்ள சபை மூப்பரை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

## கங்குபாடா சிறுமியர் விடுதி:

**ஈவ்லின் பாக்கியா, எஸ்தர் சாவித்ரி**

**துதிக்க:** விடுதிப் பிள்ளைகளுக்காக கட்டப்பட்ட புதிய கட்டிடத்தின் பிரதிஷ்டை சிறப்பாக நடைபெற்றது. மழைக் காலத்தில் பரவி வந்த தொற்று நோய் களிலிருந்து விடுதிப் பிள்ளைகளை தேவன் பாதுகாத்தார். 6 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் பிள்ளைகளுக்காக நடத்தப்பட்ட ஆவிக்குரிய கூடுகை மிகவும் ஆசீர்வாதமாக அமைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தினால் காயமுற்ற அனிதாவின் தாயார், லலிதாவின் தந்தை, மணிலாவின் மாமா ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; விடுதியில் படிக்கும் 350 பிள்ளைகளுக்கும் தேவன் ஞானம், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு அருள; பபிதா, மார்ஷேலா மற்றும் சரிதாவின் பெற்றோர்கள் இணைந்து வாழ; சாந்தி னியின் தந்தை மன அழுத்தத்திலிருந்து சுகம்பெற; கணக்கு, அறிவியல், ஆங்கிலம் போன்ற பாடங்களை கற்க சிரமப்படும் விடுதி பிள்ளைகளுக்கு தேவன் ஞானம் அருள ஜெபிப்போம்.

**செப்டம்பர் 15** திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வசாவா பாங்சிங் மௌல்யா
திரு. பால் தயாசிங் A.Y.
திருமதி. சாவித்திரி குமார்
திருமதி. எமிமாள் திலக்
செல்வி. ஷலோமி மால்தோ

## மேற்கு வங்காளம்

**இட்டாஹறார்: அஸ்தபான் ஆதித்திய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா**

**துதிக்க:** பீர்காய், மங்டா, கடுவா ஆகிய கிராமங்களில் ஏழு பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். அபிஜித் மார்டி குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளிச்செய்தார். நமது சுதேச ஊழியர் பெஞ்சமின் ஹெம்ரோமின் தந்தையின் அடக்க ஆராதனை தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். பிஸ்வாஜித் முர்மு மற்றும் ராஜன் முர்மு தங்கள் ஊழியப் பயிற்சியை நல்ல முறையில் முடிக்க தேவன் கிருபை செய்தார். மேகா சோரன், நிமாய் மார்டி, ஜோவன்னா ஹெம்ரோம் ஆகியோர் தங்கள் வியாதியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்து சாட்சியாய் வாழ; கெய்னா பெஸ்ரா, ஜல்பே சோரன், ஜோபா முர்மு, மெனாஷா சோரன், பயோல் மார்டி, கஜோலி சோரன் ஆகிய குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ள கபிராஜ் முர்முவை தேவன் குணப்படுத்த, லுக்கி பெஸ்ரா மற்றும் சோனோடி கிஸ்கு ஆகியோருக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; சுவாசப் பிரச்சனையிலிருந்து கஞ்சு முர்முவையும், தோல் வியாதியிலிருந்து மட்டி ஹன்ஸ்தக்கையும் தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

**ஜாம்போனி:**

**இப்ராயிம் மாலி & புரோசன்சிதா**

**துதிக்க:** 13 புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். கெட்கெண்டா நாயக் மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர். சலுவாடி கிராமத்தினர் ஆர்வத்துடன் சுவிசேஷம் கேட்டனர். மழை நாட்களில் ஏற்படும் சாலை விபத்திலிருந்து ஊழியர்களை தேவன் பாதுகாத்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாபோர் மற்றும் நாயக் மக்கள் மத்தியில் தேவன் எழுப்புதலை கட்டளையிட; லக்ஷ்மிகாந்த் மஹத்தோ, ஹரேன் ஹெம்ரோம், ஜகன் ஹன்ஸ்தா, பிஸ்வநாத் சோரன், சுபோல் ஹன்ஸ்தா மற்றும் சுக்கி ஹன்ஸ்தாவின் குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ள; பிறவியிலேயே பார்வையற்ற லில்லிமா சிங்காவுக்கு தேவன் பார்வை அருள; துலிபாத், கனிமௌலி ஆகிய இரண்டு இடங்களில் ஆராதனைக் குழு ஆரம்பிக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## செப்டம்பர் 16 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹேனா குமாரி கன்சல்வ்ஸ்

### மால்டா:
### உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** தேவன் தன்னை நம்பும் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் என்பதற்கு சாட்சியாக நமது விசுவாசி நீரார் சௌரியா என்பவர் மளிகை கடை துவங்க தேவன் உதவி செய்தார். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ஜாண் பஹாரியாவுக்கு தேவன் அற்புத சுகமருளியதால் ஆலய ஆராதனையில் உற்சாகத்துடன் கலந்துகொள்கிறார். மழைக்காலங்களில் பரவும் வியாதி களிலிருந்து விசுவாசிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் மிஷனெரிகளை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முழுநேர ஊழியத்திற்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்துள்ள பிஜிலி சவரியா மற்றும் பசந்தி ஹன்ஸ்தாவுக்கு தேவனின் சித்தம் வெளிப்படுத்தப்பட; சிறுநீரக தொற்றிலிருந்து சபிதி பஹாரியாவை தேவன் குணப்படுத்த; மழைக்காலத்தில் ஏற்படும் வெள்ள அபாயத்திலிருந்து சித்தால்பூர் கிராம விசுவாசிகளை தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

### பாக்குவாஹாட்:
### ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதினால் தன் கிராமத்தினரால் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள மித்துன் முர்முவின் குடும்பம் தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருந்து பிற விசுவாசிகளுக்கு சாட்சியாய் வாழந்து வருகின்றனர். சித்தாசோரன் & மோனிகா முர்முவை விஷப்பாம்பின் கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். சபோனி கிராம சபை மூப்பரின் மகள் அனோமிகா வங்கிக்குள் நுழையும்போது இரண்டாவது மாடியிலிருந்து செங்கல் அவர்மீது விழுந்தபோதிலும் எவ்வித பாதிப்பின்றி அற்புதமாய் தேவன் பாதுகாத்தார். விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்ட தேவன் போதைப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த சஞ்ஜித் ஹஸ்தாவுக்கு பூரண விடுதலை அருளினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புலம்பெயர்ந்து சென்று வேலை செய்யுமிடத்தில் காணாமல்போன நிர்மல் மார்டி பத்திரமாய் வீடுவந்து சேர; சபை மூப்பர்கள் விசுவாசத்தில் நிலைத் திருந்து உற்சாகத்தோடு சபையை நடத்திச் செல்ல; மங்கள் ஹஸ்தா, யுனிமா, புட்ரல் கிஸ்கு, சில்பா முர்மு, முன்சி டுடு, லைட் முர்மு, அனில் மார்டி, சுந்தர் முர்மு ஆகியோர் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; சுமித்ரா பெஸ்ராவுக்கு அவரது கணவரின் மரண சான்றிதழ் மற்றும் அதற்கான இழப்பீட்டு தொகை கிடைக்க ஜெபிப்போம்.

செப்டம்பர் 17

உபவாச ஜெபநாள்

புதன்

### பாலூர்ஹாட்:
### ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** இரண்டு பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் அநேகர் நற்செய்தியைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றனர். மங்கல்பூர் கிராமத்தைச் சேர்ந்த மிலிதா சோரனை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலையாக்கினார். சுதேச ஊழியரின் மகன் பவுலுஸ் ஹஸ்தாவின் நெற்றியிலுள்ள கட்டியை குணப் படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக் கல் பிரச்சனை யிலிருந்து பபுலு ஹஸ்தாவையும், நரம்பு பிரச்சனையினால் படுக்கையிலிருக்கும் சபை மூப்பர் மனைவி கமலா டுடுவையும் தேவன் குணப்படுத்த; ராஜேஷ் மார்டி, ரோபின் முர்மு, திலீப் சோரன், புஜ் ஹஸ்தா, துய்லா டுடு ஆகியோர் தங்கள் குடும்பத்தினருடன் தேவனின் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள; துருல்டங்கா, ராதா நகர், பரன்பூர், தாராபாடா, தாடல்பாடா ஆகிய கிராமங்களில் திட்டமிட்டுள்ள வெளிப்புற சந்திப்பு ஊழியம் தடையின்றி நடைபெற; புதிய விசுவாசியான ஸ்வாபயின் தேவ பக்தியில் வளரவும், இப்பணித்தளத்தின் ஊழியம் இன்னும் அதிகமாய் விரிவாக்கம் செய்யப்படவும் ஜெபிப்போம்.

### சம்சி:
### தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** பான்பரா கிராமத்தில் கடுமை யான வியாதியினால் தாக்கப்பட்ட மஞ்சு மராண்டிக்காக ஊழியர்கள் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகமருளினார். புருல் கிராமத்தைச் சேர்ந்த தீபக் டுடுவை மனநிலை பாதிப்பிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலையாக்கினார். இயேசு திரைப்பட ஊழியம் மற்றும் இரவு கூட்டங்கள் மூலம் பத்து கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை விசுவாசித்து வரும் சானுமுர்மு, மர்ஜு மராண்டி, தீபக் டுடு, நாய்கா முர்மு, ஷியாம் மிசேர் ஆகியோர் தைரியமாய் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய; புருல் மற்றும் தெலாலியா கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் விரைவில் ஆரம்பிக்க தேவன் உதவி செய்ய; இப்பகுதியில் ஊழியம் செய்யும் உள்ளூர் போதகர்கள் கர்த்தருக்கு பயந்து, வேதத்தின்படி நடக்க; ஜாம்ரா, சிரிடோலா, திலார்பூர், குஷாஹறா, காலிகஞ்ச், சிகார்கஞ்ச் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க திறந்த வாசலை தேவன் தந்தருள; இப்பணித்தளத்தில் மாபெரும் எழுப்புதலை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

## செப்டம்பர் 18 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜாண் ஸ்டீபன் Y.

# சத்தீஸ்கார்

### பாலி:

**டிட்டிங்பெள & மலங்மெய் சனாலுங்**

**துதிக்க:** கடுமையான மழைக் காலங்களில் ஊழியங்கள் தடை படாதபடி தேவன் கிருபை செய்தார். கஞ்சன்பூர் கிராமத்தில் நடைபெற்ற ஆத்தும ஆதாயப்பயிற்சி விசுவாசி களுக்கு மிகுந்த பிரயோஜனமாக அமைந்தது. விஷப்பாம்பின் கடியி லிருந்து பெலிசியா பாய் அற்புதமாய் பாதுகாக்கப்பட்டார். மூன்று புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டது. டாக்டோய்யா கிராமத்தில் முழு இரவு ஜெபம் நடத்த தேவன் உதவி செய்தார். சிறுநீரக நோயினால் கால் வீங்கி கஷ்டப்பட்ட நேத்ரம் என்பவருக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் மான்சிங் யாதவ் மற்றும் அவரது குடும்பத்தினர் தேவனை முழு இருதயத்தோடு விசுவாசிக்க; கட்டேலிபேரா, மணிக்பூர், போடி, சௌரா, கொன்சாரா, ஜர்கா, சுக்கேனா, மட்டுபூர், துக்குபத்ரா ஆகிய கிராமத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்ட; சமாருவை மனநோயிலிருந்து தேவன் குணப்படுத்த; பீரேந்திராவை குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுவிக்க; கோராமோர் கிராமத்தில் பஜன் ஆராதனை தொடர்ந்து நடத்தப்படவும், எதிர்ப்புகள் மறையவும் ஜெபிப்போம்.

### சீத்தாபூர்:

**முத்துக்குமார் & நேத்ரவதி**

**துதிக்க:** நான்கு கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். தற்கொலை எண்ணத்தி லிருந்த அஞ்சலிக்கு தேவன் விடுதலை அருளி பெலப்படுத்தினார். இப்பகுதியில் நல்ல மழையை தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். சுதேச ஊழியர்களின் மனைவிமார் உற்சாகத்துடன் ஊழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பார்பஹாலா கிராமத்தில் எட்டு குடும்பங்கள் புதிதாக ஆராதனையில் கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் வாழும் கொர்வா இன மக்கள் தேவனுடைய மந்தையில் சேர்க்கப்பட; கர்ப்பப்பை கட்டியினால் பாதிக்கப்பட்டுள்ள அஞ்சலி மற்றும் பஸ்மதிக்கு தேவன் சுகமருளி விரைவில் குழந்தை பாக்கியம் தந்தருள; நப்னா தன் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து சாட்சியாய் வாழ; விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் விசுவாசிகள் ஆலய ஆராதனையிலும் பக்தியோடு கலந்துகொள்ள; படிப்பை பாதியில் விட்டு மும்பைக்கு வேலைக்குச் சென்றுள்ள ரேணு திரும்பி வந்து படிப்பைத் தொடர; நமது விசுவாசிகளையும், உள்ளூர் மக்களையும் காட்டு யானை கூட்டத்தின் மூலம் வரும் அழிவிலிருந்து தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

## செப்டம்பர் 19 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. குளோரி ராபர்ட் வில்லியம்
திரு. பிரத்யூஷ் நாயக்

# ஒடிசா

## ரிமுலி:

**அரவிந்த் குமார் & ஹெலன் மரியம்**

**துதிக்க:** திட்டக் கூடுகை முடித்து மாலை நேரம் ஊழியர்கள் வீடு திரும்பும் வழியில் யானை கூட்டம் நின்றிருந்த போதிலும் பத்திரமாய் வீடு வந்து சேர தேவன் கிருபை செய்தார். கடந்த மாதம் பெய்த பெரும் மழையின் போதும் ஊழியத்தின் பாதையில் விபத்துக்கள் ஏற்படாதபடி தேவன் ஊழியர்களை பாதுகாத்தார். ஜெபத்தின் விளைவாக சபிதா முண்டா காசநோயிலிருந்து சுகம்பெற்று, தனது வேலைகளை செய்ய பெலன் தந்துவருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்ப்பப்பை நீர்க்கட்டி யினால் அவதியுறும் சுபித்ராவை தேவன் குணப்படுத்த; குறைவான இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயிலிருந்து மக்கி முண்டாவுக்கு தேவன் பூரண சுகமருள; விசுவாசி கங்கா முண்டாவை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதலும், சமாதானமும் அருள; காட்டு யானைகளிடமிருந்து விசுவாசி களையும், பயிர்களையும் தேவன் பாதுகாக்கவும், விசுவாசிகளின் வயல் நிலங்களில் நல்ல அறுவடையை தேவன் கட்டளையிடவும் ஜெபிப்போம்.

## அங்குல்:

**சங்கர் பி. & ஜெலின்**

**துதிக்க:** மோகன்போசி கிராமத்தில் விசுவாசிகளின் குடும்பக் கூடுகையும், சுதேச ஊழியர்களுக்கான பயிற்சியும் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். கஷியாமின் மகள் சுக்ருமணி மற்றும் பச்சன்சாயனை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். ஜெய்தமோதார்பூர் ஆலய பிரதிஷ்டை சிறப்பாக நடைபெற்றது. போலான்டா சபையிலிருந்து மூன்று குடும்பங்கள் ஊழியத்திற்கென தங்கள் வாழ்வை அர்ப்பணித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹோ இன மக்கள் மத்தியில் காணப்படும் குழந்தை திருமணம் மற்றும் குடிப் பழக்கம் முற்றிலும் மறைய; பிராமணி மற்றும் மோகன்போஷி ஆகிய கிராமங்களில் விரைவில் ஆலயக் கட்டு மானப்பணி துவங்கப்பட; தல்சேர் மற்றும் பல்லஹாரா பகுதிகளில் சுவிசேஷத் திற்கு தேவன் திறந்த வாசலைத் தந்தருள; விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு சரியானக் கல்வி வசதி கிடைக்கவும், வருங்கால திருச்சபையின் தூண்களாய் தேவன் அவர்களை உருவாக்கவும் ஜெபிப்போம்.

**செப்டம்பர்**
**20** சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜோஹன் மால்தோ

## தெல்கோய்:

**சுகின்லால் & ஜெயராணி**

**துதிக்க:** நான்கு குடும்பங்கள் புதிதாக திருச்சபையில் இணைந்துள்ளனர். சுக்காரா சட்டர் என்பவரை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். விசுவாசிகள் தங்கள் நிலத்தில் சாகுபடி செய்ய தேவையான மழையை தேவன் அருளிச்செய்தார். மோம்லாபோஷி மற்றும் பங்கேர்சுனி ஆலய கட்டுமான வேலைகள் தடையின்றி நடைபெற தேவன் கிருபை செய்து வருகிறார். விசுவாசிகளையும், சபை மூப்பர்களையும், ஊழியர்களையும் கடுமையான வெப்பத்திலிருந்து தேவன் பாதுகாத்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவுள்ள விசுவாசிகளின் கூடுகை, கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி தடையின்றி நடைபெற; நெஞ்சு வலியிலிருந்து மெக்கோ முண்டாவையும், மனநிலை பாதிப்பிலிருந்து சுக்குலா முண்டாவையும், சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து கணெயா முண்டா, கணேஷ் முண்டா, ஜம்பி முண்டா, மாணிக்கா முண்டா ஆகியோருக்கும் தேவன் பூரண சுகமருள; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் தேவனின் அன்பினால் தொடப்பட; ஹோ மற்றும் ஜுவாங் மக்கள் மத்தியில் மாபெரும் எழுப்புதலை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

## ஜஷிப்பூர்:

**பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா**

**துதிக்க:** ஒன்பது பேர் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். ஒரு வருடமாக சிறுநீரக செயலிழப்பினால் பாதிக்கப்பட்டிருந்த சாரிமாசிங் ஜெபத்தின் மூலம் பூரண சுகம்பெற்றார். அசுத்தாவியினால் பாதிக்கப்பட்டிருந்த நைபி பந்த்ராவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அருளினார். கால் வீக்கத்தினால் பல மாதங்களாக நடக்க முடியாமலிருந்த மணி அகாபாய் தேவனை விசுவாசித்து ஏற்றுக்கொண்டபின் பூரண சுகம் பெற்றதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒரு வருடமாக காலில் வீக்கம் மற்றும் தொற்று ஏற்பட்டு அவதியுறும் முனிமுண்டாவுக்கு தேவன் சுகமருள; அடிக்கடி சுகவீனமாகும் ஜம்பி திரியா, மிஞ்சாரி ககராய், சாகேப் ஹெம்ரோம், பெலாமட்டி ஹெம்ரோம் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; ஜஷிப்பூர் விடுதிப் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் தரமான கல்வி வழங்கப்பட; தன்னார்வ ஊழியர் சாத்ரக் பிங்குவா நரம்பு பிரச்சனையிலிருந்து சுகம்பெற; ஊழியத்தில் காணப்படும் எதிர்ப்பு மற்றும் தடைகள் நீங்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பிரசாந்த குமார் K.
திரு. எபினேசர் சாமுவேல்

### தேன்கனல்:
### அசோக் நாயக் & சுரபி நாயக்

**துதிக்க:** ஜோகன் பெர்வா, மணி பெர்வா, பிரீத்தி பெர்வா, ரிங்கி சாம்பியா, லிலிமுனி சாம்பியா ஆகியோரை அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் விடுவித்தார். இரவு நேரத்தில் விஷப்பாம்பு தீண்டியதால் மருத்துவமனையில் தீவிரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மித்துன் பராடாவுக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது மூன்று நாட்களுக்குப்பின் சுகத்துடன் வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். லால்முனி மற்றும் ராஜேஷ் குடும்பத்தினர் முழுமனதுடன் தேவனை விசுவாசித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட எட்டு கிராமங்களிலும் தேவன் நல்ல அறுவடையை கட்டளையிட; புதிதாக தேவனின் மந்தையில் இணைந்துள்ள ஒன்பது பேர் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் மக்கள் இயேசுவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட; விசுவாசிகளையும், ஊழியர்களையும் எதிர்ப்பாளர்களிடமிருந்து தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

### ராய்ரங்பூர்: குணா சந்திர பாய்க் & கிருட்டாஞ்சலி பாய்க்

**துதிக்க:** கடந்த மாதம் அநேகர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜொங்கா பச்சேஹரி, கப்புரா நாயக் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருளினார். கிழக்கு சிங்பும் மாவட்டத்தில் புதிய பணித்தளம் திறக்க ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சுருநாயக் விஷப்பாம்பின் கடியிலிருந்து தேவனால் பாதுகாக்கப்பட்டார். கணேஷ் திஹி கிராமத்தில் ஆலயம் கட்ட தனது நிலத்தை தந்துள்ள சாமு நாயக் குடும்பத்தினருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒடிசா மாநிலத்தில் பெருகிவரும் எதிர்ப்புகளிலிருந்து நமது விசுவாசிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் மிஷனெரிகளை தேவன் பாதுகாக்க; பக்கவாதத்திலிருந்து அமிரேந்திரா, பஹாத்சிங்கும், சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து பத்தாங் சர்தா, நந்திய நாயக் மற்றும் நாகி ஹெம்ரோம் ஆகியோரும், தொழு நொயிலிருந்து லக்ஷ்மி நாயக், கால் முறிவிலிருந்து சுடாம் டுடு மற்றும் ஜாடு மஜியும், மனநிலை பாதிப்பிலிருந்து பூலோ ஹெம்ரோம் ஆகியோர் சுகம் பெற; அசுத்தாவியின் பிடியிலிருந்து சங்கரி பச்சாரி விடுதலை பெற; மால்ஹோ சோரன், சகுந்தலா அங்கரியா, சீதா டுடு, புல்சந்த் நாயக், சூசன் சர்தா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளிச்செய்ய; மூன்று இடங்களில் ஆலயம் கட்ட இடம் கிடைக்கவும், ஐந்து இடங்களில் ஆராதனைக் குழு துவங்க ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

## செப்டம்பர் 22 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. சங்கங்காய் ஹூவுங்கி

### ஜிங்க்பானி:

**ஆபிரகாம் எஸ். & அலீஸ் ஷீபா**

**துதிக்க:** மின்னல் தாக்கி பாதிக்கப்பட்ட புக்ரிபி சபை மூப்பர் கேசிபிருலி பூரண சுகம் பெற்றார். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டப்பின் துன்ட்ரே பன்டியாவை தேவன் பூரண மாய் ஆசீர்வதித்துள்ளார். இரண்டு இடங்களில் ஆத்தும ஆதாயப் பயிற்சி நடத்த தேவன் கிருபை செய்தார். பலவித மான நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்த பப்லு ஜொங்காவுக்கு தேவன் பரிபூரண சுகமருளியதால் முழு குடும்பமும் ஆண்டவரை தங்கள்இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** துய்பாசா கிராமத்தில் ஏற்பட்ட எதிர்ப்பினிமித்தம் பயத்துடன் இருக்கும் விசுவாசிகளுக்கு தேவன் பாதுகாப்பையும், தைரியத்தையும் அருள; சபை விசுவாசிகளை குழப்பி வரும் சஞ்சய் பன்டரா மனந் திரும்ப; இச்சாகுட்டி கிராமத்தில் விரைவில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட; இப்பணித்தளத்திலிருந்து அநேக தன்னார்வ ஊழியர்கள், சுதேச ஊழியர்கள் எழும்ப; கழுத்தை திருப்ப முடியாமல் கஷ்டப்படும் ஒரு வயது குழந்தை சிவமுண்டா சுகம்பெற; மிஷனெரி அலீஸ் ஷீபாவின் சுகப்பிரசவத்திற்காக; தோள்பட்டை எலும்பு விலகி வலியினால் அவதியுறும் மிஷனெரிக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## குஜராத்

### மோட்டாபண்டா:

**மார்குஸ் மால்தோ & சாரா மால்டோ**

**துதிக்க:** விசுவாசி மங்குபேனின் அடக்க ஆராதனையில் பிரச்சனைகள் ஏற்பட்டபோது காவல்துறையின் முழு பாதுகாப்புடன் அடக்க ஆராதனை நடத்திட தேவன் கிருபை செய்தார். விசுவாசிகளின் வயல் நிலங்களில் நல்லமுறையில் சாகுபடி செய்யப்பட்டது. கரையா ஆலய ஆராதனையில் கலந்துகொண்ட தினேஷ் பாய் மற்றும் ஜெய்வந்தி பென் குடும்பத்தினருக்கு தேவன் மனசமாதானம் அருளினார். சில வருடங்களாக அரசு வேலைக்காக ஜெபித்து வந்த சங்கீதா பெனுக்கு அரசு பள்ளியில் ஆசிரியை வேலை கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநல பிரச்சனையிலிருந்து நிர்மலாவுக்கு தேவன் சுகமருள; பருவக்கால தொற்று நோயிலிருந்து விசுவாசிகளை தேவன் பாதுகாக்க; தன் கணவனை இழக்கக் கொடுத்துள்ள மனீஷா பென் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதலும், சமாதானமும் அருள; புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் தினேஷ் பாய் பட்டேலின் காதுகளில் ஒலிக்கும் சத்தத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

## செப்டம்பர் 23 செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. டேனியல் விஜயராஜ்
திருமதி. லூர்து மேரி கிரி பாபு
திருமதி. ஜாஸ்மின் கவிதா டென்சிங்

### அஹ்வா & பிப்பள்வாடா:

**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.**

**துதிக்க:** மூதாதையரை தெய்வமாய் வணங்கும் விட்டல்பாய், தங்கள் குழந்தையை தொட்டிலில் போடும் நிகழ்ச்சிக்கு ஊழியர்களை அழைத்து ஜெபிக்க கேட்டுக்கொண்டார். பின்தொடர் ஊழியம் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். சாலை விபத்திலிருந்து ஜோன்ஸ், சாஹித், கங்யாம் ஆகியோரை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். பாம்புக்கடியிலிருந்து ஊர்மிளா பென் மற்றும் யஸ்வந்த் ஜெபத்தின் மூலம் தெய்வீக சுகத்தை பெற்றுகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சித்தால் பெனுக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வரும் நம் விசுவாசிகளின் குடும்பங்களை தேவன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்க; நிலப்பிரச்சனையை சந்தித்து வரும் ரமேஷுக்கு தேவன் உதவி செய்ய; இரண்டு கால்களிலும் நரம்பு பிரச்சனையினிமித்தம் நடக்க முடியாமலிருக்கும் அசோக் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து வருவதால் அவரது மனைவி அவரைவிட்டு பிரிந்து சென்றுள்ளார். அசோக்கின் வியாதி குணமடையவும், அவரது மனைவி மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

### கீலிபானி, தராம்பூர், கொர்காம் விடுதி:

**ஜி. குமரன் & ஜெலின் ஜெயா**

**துதிக்க:** ஆனந்த், மஹாடு, சந்திரா ஆகியோர் புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். 30 வருட முயற்சிக்குப்பின் மதுரி ஆலய விசுவாசிகளுக்கு கல்லறைத் தோட்டத்திற்கான இடம் வாங்க தேவன் கிருபை செய்தார். குண்டியா மற்றும் பாண்டவ்கடக் ஆலயத்திற்கான அஸ்திபாரம் அமைத்திட தேவன் உதவி செய்தார். அநேக வருடங்களாக தலைவலி மற்றும் கால் வலியினால் அவதியுற்று வந்த ரஞ்சித்க்கு பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நான்கு வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்கு காத்திருக்கும் ருபாலி & ஜகதீஸ்க்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளிச்செய்ய; இனம்புரியா வியாதியினால் அவதியுறும் அனுபெனுக்குக்கும், ஒருமாதமாக நடக்க இயலாமல் அவதியுறும் புதிய விசுவாசி விக்கினுக்கும் தேவன் சுகமருள; ஊர்மிளா பெனின் கணவர் ரவிதாஸ் தவறான தொடர்பிலிருந்து விடுபட்டு தன் மனைவியுடன் உண்மையாய் வாழ; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள பாரத் விடுதலைபெற; இரத்த சோகையினால் அவதியுறும் அஸ்மதி பெனுக்கு தேவன் சுகப் பிரசவம் அருள ஜெபிப்போம்.

செப்டம்பர் 24 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிர்மலா மித்ரன்
திருமதி. சாந்தி லால் கிரிஷான் குமார்

## ஜாலோத்:

**குமார் பால் & அமுதா**

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், 21 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யவும் தேவன் கிருபை பாராட்டினார். 46 நாட்கள் சிறையிலிருந்த கால் சிங் ஜெபத்தின் மூலம் விடுதலை செய்யப்பட்டார். சந்திரிகா பெனை பாம்புக் கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். கர்த்தரின் கிருபையால் ஸ்வீட்டி மற்றும் ஸ்நேஹால் அரசு வேலை கிடைக்கப்பெற்றனர். மூன்று இடங்களில் இயேசு திரைப்படம் மூலம் தடையின்றி சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரளா & அரவிந்த் குடும்பத்திற்கு தேவன் புத்திர சந்தானம் அருள; அசுத்தாவியின் பிடியிலிருந்து ஆஷா பென் மற்றும் வனிதா பென் தேவனால் விடுதலைபெற; சோனல் பெனுக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; நாக்கில் கட்டி ஏற்ட்டு அவதியுறும் லக்ஷ்மி பென் மற்றும் மஞ்சுளா பெனுக்கு தேவன் அற்புத சுகமருள; அமல்யா, பட்வேல், பஹாலியா, பூட்கேடா ஆகிய கிராமத்தினர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

# தாத்ரா & நகர் ஹவேலி

## கான்வேல்:

**அருள் ஆசீர் & சுகுணா**

**துதிக்க:** கட்சின்சிலா கிராமத்தைச் சேர்ந்த சரிகா பெனுக்கு சுகப்பிரசவத்தின் மூலம் அழகான பெண் குழந்தையை தேவன் தந்தருளினார். டிரக் விபத்தில் சிக்கிய பாரத் தேவனின் கிருபையால் சுகம் பெற்று வருகிறார். பார்சாய் கிராமத்தில் ஐந்து புதிய குடும்பங்களும், கின்னோலி கிராமத்தில் நான்கு புதிய குடும்பங்களும் ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். விசுவாசிகளின் பிள்ளைகள் அநேகர் கல்லூரியில் சேர்ந்து படிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வர்ஷோனா கிராமத்தில் காணாமல் போயுள்ள சிறப்பு குழந்தையான 19 வயது அர்ச்சனா எவ்வித பாதிப்புமின்றி பத்திரமாய் வீடு திரும்ப; தன் தாயை இழந்துள்ள சபை மூப்பர் பிரகாஷுக்கு தேவன் ஆறுதல் அருள; வாயில் புற்று நோயினால் சாப்பிட முடியாமல் கஷ்டப்படும் ரமேஷ்க்கு தேவன் பூரண சுகமருள; ஐந்து வயது பிரின்ஸின் தலையிலுள்ள கட்டியை அறுவை சிகிச்சையின்றி தேவன் குணப்படுத்த; நான்கு வருடங்களாக வயிற்று வலியினால் அவதியுற்று வரும் புதிய விசுவாசி நீலேஷ்க்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

செப்டம்பர்

25

வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆல்பர்ட் பிரபாகரன் N.

# மகாராஷ்டிரா

## தடுகோன்: எபிநேசர் சாமுவேல் & ஜோஸ்னா ஜெயராணி

**துதிக்க:** நான்கு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். நல்வானி மற்றும் வெர்கேடி கிராமங்களில் விசுவாசிகளின் முகாமும், நான்கு இடங்களில் பெண்கள் முகாமும் சிறப்பாக நடைபெற்றது. விசுவாசத்தோடு ஜெபித்து வந்த நிமாபாய்க்கும், கங்கிபாய் யுவராஜ்க்கும் தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். கெல்லே கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்க தேவன் கிருபை செய்தார். குவர்கெட் கிராமத்தில் தடைசெய்யப்பட்ட ஆராதனைக் குழு மீண்டும் ஆரம்பிக்கப்பட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை விசுவாசிக்கும் திரிஸ்மால், செல்பரா, பன்பாரி, கட்ரா, உம்தி ஆகிய கிராம மக்களுக்கு உறவினர்கள் மூலம் வரும் தடைகள் நீங்கி விடுதலையோடு ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; அசுத்தாவியின் அலைக்கழிப்பினால் தனது செவிலியர் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் தவிக்கும் வந்தாவுக்கு தேவன் பரிபூரண விடுதலை அருள; சப்ரியா கிராமத்தின் ஒரே விசுவாசியான குவாந்திபாய்க்கு தன் வீட்டாரின் நிமித்தம் வரும் எதிர்ப்புகள் மறைய; ஒரே விசுவாசியான கஞ்சிதாதாவின் கிராமமான குண்டியா கிராம மக்கள் அனைவரும் மெய்யான தேவனை அறிந்துகொள்ள; கிறிஸ்துவை விசுவாசித்து வரும் லலிதாபாயின் சரீரம் அசுத்தாவியின் தாக்குதலினால் மிகவும் பெலவீனப்பட்டு வருகிறது. தேவன் அற்புத விடுதலையைக் கட்டளையிட; மாத்வாட் பீல் மொழியை மிஷனெரிகள் விரைவில் கற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## தலாசரி: கெடாம் ஸ்ரீனிவாசராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** அபிஷேக் பார்கு லகாத் என்ற 13 வயது சிறுவன் 20 அடி மரத்திலிருந்து கிழே விழுந்து வலது காலில் முறிவு ஏற்பட்ட நிலையில் அறுவை சிகிச்சையின் மூலம் தேவன் சுகமருளினார். ஷென்சாரி ஆலயத்தில் நடைபெற்ற சிறுவர் வேதாகம வகுப்பில் 22 சிறுவர்கள் பங்கு பெற்று பயன்பெற்றனர். மோட்கானில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் சுமார் 125 பேர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். நாக்சாரி வேலுகான் மற்றும் கோஸ்பேட் கிராமங்களில் முதன்முறையாக நற்செய்தி அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிராந்திய அளவில் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள மேளா எவ்வித தடையுமின்றி வெற்றிகரமாக நடைபெற; பல ஆண்டுகளாக குழந்தையின்றி தவிக்கும் குந்தா திலீப் கோர்கானா, கக்குடு திலீப், சுனிதா ஹடல், சஞ்சனா ஜகதீஷ் ஆகியோரை தேவன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்க; பரத் மற்றும் டெக்கானே கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் தடையின்றி நடைபெறவும், அநேக சபைகள் எழுப்பப்படவும் ஜெபிப்போம்.

**செப்டம்பர் 26** வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ரெபேக்காம்மா பால்
திரு. செய்கோதாங் ஜெள

## தலோடா விடுதி:

### வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** தலோடா விடுதியில் 29 சிறுவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். காய்ச்சல், வாந்தி மற்றும் பலவிதமான பெலவீனங்களில் பாதிக்கப்பட்டிருந்த விடுதி சிறுவர்களுக்கு தேவன் பூரண சுகமருளினார். வேதபாட வகுப்புகள் மற்றும் ஜெபக்குழுக்களில் பிள்ளைகள் உற்சாகத்தோடு கலந்துகொள்வதோடு ஞாயிற்றுக் கிழமைகளில் வேத வசனங்களை மனப்பாடம் செய்து வருகிறார்கள். சிறப்பு வகுப்புகள் நடத்த புதிய ஆசிரியை தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கீழே விழுந்து காயமடைந்ததில் நெற்றியில் நான்கு தையல்கள் போடப்பட்டுள்ள சகில் என்ற விடுதி சிறுவனுக்கு தேவன் சுகமருள; படிப்பில் மிகவும் பின்தங்கியுள்ள கிரண், சஞ்சய், ரோஹித், படல் ஆகிய சிறுவர்களுக்கு தேவன் ஞானமருள; தலோடா சிறுவர் விடுதிக்கு அர்ப்பணிப்புள்ள வார்டன் கிடைக்க; பள்ளிக்கு நடந்தே செல்லும் நம் விடுதிப் பிள்ளைகள் பாதுகாப்புடன் சென்று வர தேவன் உதவி செய்ய; சிக்கில் செல் வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள படல், நான்சிங், அங்குஸ், சித்தார்த் ஆகிய சிறுவர்கள் மேற்கொண்டு வரும் சிகிச்சை பலன்தர ஜெபிப்போம்.

## பிம்பள்நேர்:

### பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஸ்வரி

**துதிக்க:** சபை மூப்பர்களுக்கான குடும்பப் பயிற்சியில் 37 குடும்பங்கள் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். மூன்று புதிய ஜெபக் குழுக்களை ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். மாரிபென் மற்றும் அவளது குடும்பத்தினர் அசுத்தாவியின் கட்டுகளிலிருந்து தேவனால் விடுவிக்கப்பட்டனர். உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்த 11 மாதக் குழந்தை வருணுக்கு அற்புத சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக திருச்சபையில் இணைந்த 14 பேரும் விசுவாசத்தில் வேரூன்றி வளர; ஆய்ச்சலா கிராமத்தில் ஆராதனையை தடைசெய்தும், விசுவாசிகளை அச்சுறுத்தியும் வருகிற கிராமத் தலைவர் மனந்திரும்ப; புதிய ஆலயம் கட்ட கிராம சபையின் அனுமதி கிடைக்க; புற்றுநோயிலிருந்து பன்யா, பக்கவாத்திலிருந்து மாயா, கல்லீரல் பிரச்சனையிலிருந்து பின்ட்டு ஆகியோரை தேவன் பூரணமாய் குணப்படுத்த; விசுவாசிகள் பிற மத விழாக்களுக்கு நன்கொடை வழங்க வேண்டும் என்றும், மீறினால் பக்கவிளைவுகளை சந்திக்கக் கூடுமென்றும் அச்சுறுத்தப்படுகிறார்கள். இவர்கள் மனந்திரும்பவும், நமது விசுவாசிகளுக்கு தேவன் பாதுகாப்பை அருளவும் ஜெபிப்போம்.

**செப்டம்பர் 27** சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
செல்வி. கொலீன் ஹில்டா கிரேஸ்

### கான்தேஷ் பிராந்தியம்:
**ஜுபராஜ் பர்தன் &
ஷீபா ஜாஸ்மின்**

**துதிக்க:** பிராந்திய கூடுகையில் அநேகர் கலந்துகொள்ளவும், 129 பேர் பாவ வாழ்வை விட்டு பரிசுத்தமாக வாழ தீர்மானிக்கவும் தேவன் கிருபை செய்தார். அசுத்தாவியின் பிடியினால் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்த சிவாலி கிராமத்தின் மாரிபெனுக்காக ஊழியர்கள் கூடி ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கட்டளையிட்டார். ரத்தன்பாரா கிராமத்தின் சுகுணா பெனின் மகன் அன்மோல் ஊக்க மான ஜெபத்தின் மூலம் கண்பார்வையை மீண்டும் பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடுக்கி கிராமத்தில் விசுவாசி களை மிரட்டி வரும் ராமோஜி, பாயா, ஊவேஷ் ஆகியோர் தேவனால் சந்திக்கப்பட; செல்பாரா, பான்பாரி, குட்ரா, திரிஷ்மால், உம்டி ஆகிய கிராமங்களில் விசுவாசிகள் சமுதாய பயங்கள் நீங்கி விடுதலையோடு தேவனை ஆராதிக்க; தங்கள் சாட்சியின் மூலம் அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்த தீர்மானித் துள்ள விசுவாசிகளின் முயற்சி வெற்றிபெற; ஐந்து வருடங்களாக பார்வையின்றி தவித்து வரும் குடாவத் கிராமத்தின் மங்காபாய் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து வருவதால் இழந்த பார்வையை மீண்டும் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## கர்நாடகா

### முண்டர்கி:
**சாமுவேல் பெபர்தா**

**துதிக்க:** ரேணுகா இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளார். பாவனா மற்றும் கல்பனாவுக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். விசுவாசி பஞ்சம்மாவின் வீட்டை கட்டி முடிக்க தேவன் உதவி செய்தார். சுதேச ஊழியர் சந்தோஷின் நீதிமன்ற வழக்கு முடிவடைய கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்றுநோயிலிருந்து பசவ ராஜின் தாயாரையும், ஹனுமந்தப் பாவையும் தேவன் குணப்படுத்த; சிறுநீரக பாதையில் வீக்கம் ஏற்பட்டு கடுமையான வலியினால் அவதியுறும் சந்தோஷுக்கு தேவன் அற்புத சுகமருள; ஷிரோல், பாகேவாடி, மியுண்டி, கங்காபூர், பர்டாபூர், பானிகுப்பா, கைட்டாபூர் ஆகிய கிராமத்தினர் இருளின் ஆதிக்கத்தி லிருந்து தேவனின் மெய்யான ஒளியை கண்டடைய; வால்மீகி இன மக்கள் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கவும், எதிர்ப்பு தெரிவிக்கும் கிராமத் தலைவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## செப்டம்பர் 28 ஞாயிறு

**ஷிரஹட்டி: ஆஷா பிராப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா**

**துதிக்க:** ஐந்து புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். உபவாசித்து ஜெபித்தபோது சல்மாவின் குழந்தை சுவாசப் பிரச்சனையிலிருந்து சுகம்பெற்றாள். கர்ப்பப்பை வீக்கத்தினாலும், சிறுநீரகத் தொற்றினாலும் பாதிக்கப்பட்ட ஷானு, வாய்புண்ணிலிருந்து விஜயலக்ஷ்மி, நெஞ்சு வலியிலிருந்து ஹேமந்த் ஆகியோர் ஜெபத்தின் மூலம் அற்புத சுகம் பெற்றனர். டெங்கு காய்ச்சலினால் ஆபத்தான நிலையிலிருந்த லெக்கப்பாவுக்காக மூன்று நாள் தொடர் ஜெபத்தின் மூலம் அற்புத சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பசவராஜ் குடியிலிருந்து விடுதலைபெற; மூன்று வருடமாக குழந்தை செல்வத்திற்காக காத்திருக்கும் விஜயலக்ஷ்மிக்கு தேவன் இரக்கம் பாராட்ட; ஆறு மாதமாக வயிற்று வலியினாலும் வாந்தியினாலும் அவதியுறும் லிங்காராஜ்க்கும், அதிக கால் வலியினால் அவதியுறும் சாவித்ரிக்கும் தேவன் பூரண சுகமருள; மஞ்சுளாவின் புதிய வீடு கட்டுமானப் பணிகளுக்கான பணத் தேவைகள் சந்திக்கப்பட; மூட்டு வலி மற்றும் வாத நோயிலிருந்து மிஷனெரி தீனா சுகம்பெற; நமது விசுவாசிகளின் வாலிபப் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை அமைய; தன் குழந்தையை இழந்து தவிக்கும் லிங்கம்மாவுக்கு தேவன் ஆறுதலும், மன சமாதானமும் அருள ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

**பலமநேர்:**

**பால் குப்புசாமி & ஷைலா**

**துதிக்க:** சபைத் தலைவர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சியில் 28 பேர் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். அப்பினபள்ளி ஆலயத்தில் நடைபெற்ற குடும்பக் கூடுகையில் அநேகர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அதிகாலை நடக்கும் ஆன்லைன் ஜெபத்தில் அநேக விசுவாசிகள் ஆர்வத்துடன் கலந்துகொள்கின்றனர். நான்கு வயது தியாவை மூல வியாதியிலிருந்து தேவன் சுகமாக்கினார். விசுவாசி பவன் புதிய ஆட்டோ ஒன்று வாங்கிட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவுள்ள சபை மூப்பர் பயிற்சி, வாலிபர் கூடுகை, வெளிப்புற சுவிசேஷ ஊழியம் நல்ல பலனைத் தர; புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள ரூத் நாராயணம்மா மற்றும் ஜெயம் மாவை தேவன் பூரணமாய் குணப்படுத்த; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியிருக்கும் வெங்கட்ரமணா & பிரமிளா தேவனண்டை திரும்ப; அரசாங்க வேலைக்கு தேர்வு எழுதியுள்ள காஞ்சனா, ஷ்ரவாணி, லதா, சரஸ்வதி, மாலவிகா ஆகியோருக்கு தேவன் உதவி செய்ய; வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டுள்ள ரமணப்பாவின் பொருளாதாரத் தேவைகள் தேவனால் சந்திக்கப்பட; தன் மனைவியை இழக்கக் கொடுத்துள்ள சுப்பையா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## செப்டம்பர் 29 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. சுஷாஜிதா சேனாபதி

### ரோத்தம்:

### தேபதத்தா லிமா & சோனியா ராணி

**துதிக்க:** கை எலும்பு முறிவிலிருந்து விசுவாசி டேவிட்க்கு தேவன் சுகமருளினார். ஜெபத்தைக் கேட்ட தேவன் சுப்ராய்டுவுக்கு மளிகை கடையை துவங்க உதவி செய்தார். விபத்திலிருந்து விஜயம்மாவை தேவன் பாதுகாத்தார். அசுத்தாவியின் பிடியிலிருந்து எலிசபெத்துக்கு தேவன் விடுதலை அருளினார். ஜெபத்தின் மூலம் யோகேஷ் & ஆஷ்ராயா குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். அநேக ஆண்டுகளாக குடும்பப் பிரச்சனைகளை சந்தித்து வந்த ஸ்ரீனிவாசா & ஆல்வேனம்மா குடும்பத்தில் தேவன் ஒப்புரவாகுதலைக் கட்டளையிட்டார். ராஜுவின் கால் அறுவை சிகிச்சையில் உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிகளவு நீரிழிவு நோய் மற்றும் மூளையில் பிரச்சனையினால் அவதியுறும் சர்வமங்களம்மாவுக்கு தேவன் சுகமும், இரட்சிப்பும் கட்டளையிட; 15 ஆண்டுகளாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் ராமன்ஜினம்மாவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; ஈஸ்வரப்பா மற்றும் நரசிம்மாவை குடியின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுவிக்க; தன் மனைவியை ஆலய ஆராதனைக்கு செல்ல விடாமல் தடைசெய்யும் ஸ்ரீனிவாஸ் தேவனின் அன்பினால் தொடப்பட; இரத்த குறைபாடுள்ள மஞ்சு மற்றும் புண்யாவுக்கு சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்பித் தர ஜெபிப்போம்.

### சதும்: அனில் மஹாலி & பிரசாந்தி

**துதிக்க:** குடியிருக்க வீடின்றி தவித்து வந்த ராமபுரத்தைச் சேர்ந்த துர்காவின் தொடர் ஜெபத்தைக் கேட்ட தேவன் அரசாங்கத்தின் மூலம் வீடு கிடைக்க உதவி செய்தார். மல்லேஸ்வரம், மருதவரபள்ளி, கண்டவராயப்பள்ளி ஆகிய கிராமங்களில் நற்செய்தி கூட்டங்கள் நடத்தி அநேகருக்கு சுவிசேஷ பிரதிகள் விநியோகிக்க தேவன் கிருபை செய்தார். அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் விசுவாசிகளுக்கு சிறப்பு உபவாச ஜெபம் நடத்தவும், அதில் கிறிஸ்துவை அறியாதோர் அநேகர் கலந்துகொண்டு ஜெபிக்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருமணமாகி 10 வருடங்களாக குழந்தையின்றி தவிக்கும் சுரூபராணி மற்றும் கிறிஸ்டலி ஜெபாவுக்கு தேவன் குழந்தை பாக்கியமருள; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கி பழைய வழிபாடுகளை பின்பற்றும் கிருபாம்மா மனந்திரும்பி மீண்டும் விசுவாசத்திற்குள் வர; அதீத குடியினால் குடும்பத்தினருடன் சண்டையிட்டு வரும் ஸ்ரீகாந்த் மனந்திரும்பி குடியிலிருந்து விடுபட; கிரிபாபுவுக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணை கிடைக்க; விசுவாசிகளிடையே ஏற்படும் மனக் கசப்புகள் மறைந்து ஒற்றுமை நிலவ ஜெபிப்போம்.

செப்டம்பர்
30 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தும்பா சௌதுரி ஓம் பிரகாஷ்

# தமிழ்நாடு

## மேச்சேரி:

**தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி**

**துதிக்க:** குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வந்த கௌசல்யா மற்றும் வித்யாவை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். உபவாசமிருந்து ஜெபித்து தங்கள் வயல் நிலத்தில் விதைவிதைத்த துரைசாமி, வனிதா, பொன்னம்மா ஆகியோரின் வயல் நிலத்தில் தேவன் நல்ல விளைச்சலைக் கட்டளையிட்டார். விசுவாசிகளின் கால்நடைகளுக்கு போதுமான தீவணமும், பாதுகாப்பையும் தந்தமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விநியோகிக்கப்பட்ட புதிய ஏற்பாடுகளை பெற்றுகொண்டவர்கள் அதனை வாஞ்சையோடு வாசித்து, ஜீவ தேவனை அறிந்துகொள்ள; கண்ணப்பன், வெங்கடேசன் மற்றும் சின்ராஜ் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; அதிக கால் வலியினால் நடக்க இயலாமல் கஷ்டப்படுகிற ரஞ்சித் மற்றும் பால் துரைக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## ஜீவன் அருளும் ஜீவ தேவன்

*மத்தியப்பிரதேசம், துல்கோட் பணித் தளத்திலுள்ள ரோகிடி கிராமத்தில் பத்து வருடங்களுக்கு முன்பு தியான்சிங் என்ற வயதான கிராமவாசி, இயேசுவை வணங்குவதை நிறுத்துமாறு விசுவாசிகளை மிரட்டி வந்தார். மேலும் கிராமத்திலுள்ள அனைத்து விசுவாசிகளும் இறந்துவிட்டால் தனது தெய்வத்திற்கு 12 ஆடுகளை பலியிடுவதாக பொருத்தனைப்பண்ணினார். தற்போது அவருக்கு 76 வயது. அக்கிராமத்தில் ஒரு விசுவாசியின் மனைவி இறந்துவிட்டார். கிராமத்தினர் அவரது வீட்டை முற்றுகையிட்டு, “உங்கள் தெய்வம் உண்மையாகவே உயிருள்ள தெய்வம் என்றால் அவரது மனைவியை உயிரடைய செய்யுங்கள். அல்லது இறந்த மனைவியோடு சேர்த்து அவரையும் உயிருடன் எரித்துவிடுவோம்” என்று மிரட்டினார்கள். விசுவாசிகள் ஒருமனப்பட்டு கர்த்தரிடம் விசுவாசத்துடன் ஜெபித்தனர். கர்த்தர் அவருடைய மனைவியை உயிர்ப்பித்தார். இதைக் கண்ட தியான்சிங் இந்த பெண்ணை உயிர்ப்பித்த இந்த இறைவன் தனது பக்கவாதத்தையும் குணப்படுத்துவராக என்று ஜெபித்தார். கர்த்தர் அவருடைய ஜெபத்தைக் கேட்டு அவருக்கு அற்புத சுகமருளினார். இன்று தியான்சிங் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவனை ஆராதித்து வருகிறார். மேலும் விசுவாசிகள் யாவருக்கும் விருந்தளித்து தனது மகிழ்ச்சியையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தினார்.*

410 மிஷனரி ஆல்பம்



# அருள்திரு. சுனில் தத்தாகாரா & திருமதி. மீனாக்கி பீரோ

ஒடிசா, கஜபதி மாவட்டம், ஆஷ்ரியகடா என்னும் கிராமத்தில் வசித்து வந்த திரு. சர்தா சந்திர காரா & மறைந்த திருமதி. சுசேங்கினி காராவுக்கு மகனாக சுனில் தத்தாகாரா 1977, மே 22ஆம் தேதியன்று கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார். 1996இல் இவர் இரட்சிக்கப்பட்டு இயேசுவின் மீதுள்ள தன் விசுவாசத்தை அறிக்கை செய்தார். அதன்பின் சில மாதங்களில் முழுநேர ஊழியம் செய்ய தேவன் தன்னை நேரடியாக அழைக்கும் குரலைக் கேட்டு தன் வாழ்வை தேவப் பணிக்கு அர்ப்பணித்தார். தேவனுடைய அழைப்பைத் தொடர்ந்து, இவர் இறையியலில் இளங்கலைப் பயின்றார். 2007இல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழுநேர மிஷனெரியாக இணைந்தார். மிஷனெரி பயிற்சியை 2008இல் முடித்த இவர் கர்நாடகாவிலுள்ள ஷிக்காவன் பணித்தளத்திற்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார். ஏழரை ஆண்டு இப்பணித்தளத்தில் ஊழியம் செய்து அநேகரை கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைத்தார். இரண்டு திருச்சபைகளையும், 15 ஆராதனைக் குழுக்களையும் நிறுவினார்.

சகோதரி மீனாக்கி 1987, ஜுன் 1ஆம் தேதி ஒடிசாவின் கஜபதி மாவட்டத்திலுள்ள செல்லிகாடா கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆஷாபூர்ணா பீரோ & திருமதி. மார்த்தாம்மா பீரோ ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த இவர், தன் பள்ளிப் படிப்பின்போது இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். தன் இளங்கலை பட்டப்படிப்பிற்கு பின் தனது கிராமத்தில் நடைபெற்ற FMPB கூட்டத்தில் முழுநேரப் பணிக்கென தன்னை அர்ப்பணித்தார். பின் 2007இல் FMPBயில் முழுநேர மிஷனெரியாக இணைந்தார். மிஷனெரி பயிற்சிக்குப் பின் சத்தீஸ்காரிலுள்ள பத்தல் கோன் சிறுமியர் விடுதியில் ஊழியம் செய்து வந்தார். 2010 மே 7ஆம் தேதி அன்று அருட்திரு. சுனில் தத்தாகாரா & சகோதரி மீனாக்கியின் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின் 2015 வரை ஷிக்காவன் பணித்தளத்திலும், 2015-2017 வரை கானாப்பூர் பணித்தளத்திலும் குடும்பமாக ஊழியம் செய்தார்கள். 2017இல் ஹுப்ளி பிராந்திய அலுவலக பொறுப்பை ஏற்று ஊழியம் செய்தார்கள். 2024 முதல் கோலார் பிராந்தியச் செயலாளராக ஊழியம் செய்து வருகின்றனர்.

தேவன் இவர்கள் குடும்ப வாழ்வை ஆசீர்வதித்து இரண்டு பிள்ளைகளை அருளிச் செய்துள்ளார். மூத்த மகள் கிளாடிஸ் காரா (22.02.2011) 10ஆம் வகுப்பும், மகன் ஜேம்ஸ் காரா (02.05.2013) 7ஆம் வகுப்பும் பெங்களூரிலுள்ள லாவ்ரி நினைவுப் பள்ளியில் படித்து வருகின்றனர். இவர்களது ஊழியம் மற்றும் பிள்ளைகளின் படிப்பிற்காக ஜெபிப்போம்.

**411**
**மிஷனரி ஆல்பம்**



# அருள்திரு. கோபி கிருஷ்ணன் & திருமதி. மேனகா

தமிழ் நாட்டின் தர்மபுரி மாவட்டத்தில் டின்டால் என்ற சிற்றூரில் திரு. முருகன் & திருமதி. பழனியம்மாள் தம்பதியினருக்கு மூத்தமகனாக 23.05.1984 அன்று சகோ. கோபி கிருஷ்ணன் பிறந்தார். இவர் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த வேளையில் காலில் ஏற்பட்ட காயம் மற்றும் சுவாச பிரச்சனை காரணமாக கிறிஸ்துவை விசுவாசித்து, ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதால் 1988ஆம் ஆண்டு இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். 12ஆம் வகுப்பு முடித்தப் பின் போக்குவரத்து துறையிலே வேலை செய்து வந்தார். புதிய ஏற்பாடுகளை எப்பொழுதும் தன் கையில் வைத்திருப்பார். ஒருநாள் அவரது கனவில், அவரை கிறிஸ்துவண்டை வழிநடத்தின நபர், **"வா மக்கள் உனக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்"** என்று அழைப்பதாக கண்டார். ஆகவே 2003ஆம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் சுதேச ஊழியராக சேர்ந்து அலுவலகத்திலும், இயேசு திரைப்பட ஊழியத்திலும் பணியாற்றி வந்தார். 2006ஆம் ஆண்டு முழுநேர ஊழியராக தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பப்பட்டார். அதன்பின் மத்தியப்பிரதேச மாநிலத்திலுள்ள சிரியா பணித்தளத்தில் ஊழியத்தைத் துவங்கினார்.

தமிழ் நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஓடர் கிராமத்தில் திரு. லக்ஷ்மணன் & திருமதி. ராணி தம்பதியினருக்கு மூத்த மகளாக 07.05.1986 அன்று சகோதரி மேனகா பிறந்தார். 8வது வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது இந்திய அருட்பணி இயக்கம் சார்பாக நடத்தப்பட்ட ஒரு கூடுகையில், ஜார்கண்ட் மாநில ஊழியங்கள் பற்றிய நடத்தப்பட்ட ஒரு நாடகத்தின் காட்சியினைக் கண்டு, கர்த்தர் தன்னை ஊழியத்திற்கு அழைக்கிறார் என்று தீர்மானமாக உணர்ந்தார். எனவே, மருத்துவராகவோ அல்லது செவிலியராகவோ பணியாற்ற வேண்டும் என்ற தனது தனிப்பட்ட விருப்பத்தினை ஒதுக்கி, கர்த்தரின் விருப்பத்தினை நிறைவேற்ற தன்னை ஒப்புக்கொடுத்தார். 2008ஆம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்து 2009ஆம் ஆண்டு தன்னுடைய மிஷனெரி பயிற்சியை முடித்தார்.

20.05.2009 அன்று திரு. கோபி கிருஷ்ணன் & சகோதரி மேனகா அவர்களின் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குபின் குடும்பமாக மத்தியப்பிரதேச மாநிலத்திலுள்ள போக்ராட்டோ, நிவாலி, மந்தனா பணித்தளங்களில் பணியாற்றினர். தற்போது துல்கோட் மற்றும் நேப்பா நகர் பணித்தளங்களில் ஊழியம் செய்து வருகின்றனர்.

இந்த மிஷனெரி தம்பதியினருக்கு, டோனாவூரில் 11வது வகுப்பு படிக்கும் சாம் கிளாஸ்டன் (29.03.2010) என்ற மகனும் மற்றும் 6ஆம் வகுப்பு படிக்கும் ஜெனிட்டா (20.05.2014) என்ற மகளும் இருக்கின்றனர். இந்த தம்பதியினர் இன்னும் ஊக்கமுடன், உற்சாகத்துடன் பணியாற்ற, கர்த்தருக்கென பெரிய காரியங்களை செய்ய இவர்களை நம்முடைய ஜெபங்களில் தாங்குவோம்.

Regd. Newspaper for India No.17759/69

# friends missionary prayer band

Whom shall I send?
Who will go for us?

## ARE YOU WILLING TO INVEST YOUR YOUTHFUL DAYS FOR CHRIST?

## Come & join the family of FMPB




# MISSIONARIES WANTED

A time to explore God's call!

### Eligibility Criteria:

- Have you completed higher secondary (+2) or are you a graduate?
- Are you a bachelor or spinster who has completed 18 years of age and are below 30 years?
- Are you a married person aged 35 years or below?




*If yes, you are eligible!* **The opportunity before you:**

- Pioneer missionary
- Church Planter
- Medical Missionary
- Bible Translator
- Missionary Teacher
- Media Missionary

**Friends Missionary Prayer Band (FMPB)**
***Human Resource Department (HRD)***
29, High School Road, Ambattur, Chennai - 53
Email: hrd@fmpb.org / www.fmpb.co.in
044 2657 0404 / 2657 4343

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***